# தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்

மா. ரா. அரசு

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

தனலட்சுமி பதிப்பகம்
புத்தக வியாபாரம்
12 மேல ஆவணிமூல வீதி, மதுரை.

பதிப்புரிமை] [விலை ரூ. 3·00

முதற் பதிப்பு—மார்ச், 1964

Kabeer Printing Works, Madras (4984)

# முகவுரை

**தமிழக வரலாறும் பண்பாடும்** என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல், கற்காலம் முதல் இன்று வரையில் உள்ள தமிழக வரலாற்றையும் தமிழர் பண்பாட்டையும் வரலாற்று முறையில் கூறுவதாகும். இதன்கண் கற்காலம், சங்ககாலம், பல்லவர் காலம், சோழர் காலம், விசயநகர வேந்தர் காலம், நாயக்கர் காலம், ஆங்கிலேயர் காலம், நமது ஆட்சிக்காலம் என்னும் எட்டுத் தலைப்புக்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு தலைப்பிலும் அக்கால வரலாறும் மக்கள் பண்பாடும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பெரிய வரலாற்று நூல்களைப் படிக்கவும், தமிழ் இலக்கண இலக்கியத்தைப் படிக்கவும், படித்து, விரிந்த அளவில் தமிழக வரலாற்றையும் தமிழர் பண்பாட்டையும் அறிந்துகொள்ளவும் துணைபுரியும் அளவில் இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது.

தமிழக வரலாற்றுக்கு உறுதுணை செய்யும் அளவில்தான் இந்திய வரலாறும் தக்கண வரலாறும் இந்நூலில் சிறிதளவு கூறப்பட்டுள்ளன. தமிழர்க்கே பெரும்பாலும் உரிய பழக்க வழக்கங்களைக் கொண்ட சங்ககால வாழ்க்கையும் பண்பாடும் இந்நூலில் விரித்துக் கூறப்பட்டுள்ளன. அப்பகுதி நம் முன்னேரின் சிறப்புமிக்க வாழ்க்கையை நன்கு எடுத்துக் காட்டுவதாகும். அவ்வாழ்க்கை இக்காலத் தமிழர் வாழ்க்கையைப் பண்படுத்த வல்லது.

மா. இராசமாணிக்கனர்

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கற்காலம் | ... | 1 |
| 2. | சங்க காலம் | .. | 16 |
| 3. | பல்லவர் காலம் | ... | 61 |
| 4. | சோழர் காலம் | ... | 80 |
| 5. | விசயநகர வேந்தர் காலம் | ... | 118 |
| 6. | நாயக்கர் காலம் | ... | 137 |
| 7. | ஆங்கிலேயர் காலம் | ... | 149 |
| 8. | நமது ஆட்சிக் காலம் | ... | 155 |

# தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்

---

## 1. கற்காலம்

### (1) நில அமைப்பு

**நில அமைப்பு**

இன்றுள்ள தமிழ் நூல்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். அதன் காலம் ஏறத்தாழக் கி. மு. 300 என்னலாம். தமிழகத்தின் வட எல்லை வேங்கடமலை என்றும் தென் எல்லை குமரி என்றும் கிழக்கு மேற்கு எல்லைகள் கடல் என்றும் அந்நூல் கூறுகின்றது.

தமிழகத்தின் கிழக்கிலும் மேற்கிலும் நீண்ட மலைத் தொடர்கள் அமைந்துள்ளன. அவை நடு இந்தியாவிலிருந்து தொடங்கி தெற்கு நோக்கி அமைந்துள்ளன. கிழக்குப் பக்கமுள்ள மலைத் தொடர் கிழக்கு மலைத் தொடர் என்றும், மேற்கிலுள்ள மலைத் தொடர் மேற்கு மலைத் தொடர் என்றும் பெயர் பெற்றுள்ளன. இவை முறையே இப்பொழுது கிழக்குத் தொடர்ச்சி மலைகள் என்றும், மேற்குத் தொடர்ச்சி மலைகள் என்றும் கூறப் பெறுகின்றன.

**மலைத் தொடர்கள்**

மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், நடு இந்தியாவில் கிழக்கு மேற்காகப் பரவி

யுள்ள விந்திய சாத்பூரா மலைகளும் சேர்ந்து ஒரு முக் கோண அமைப்பில் அமைந்துள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைகள் பம்பாய்க்கு அருகிலிருந்து கன்னியா குமரி வரையில் நீண்டு உயர்ந்து அமைந்துள்ளன. அவை சில இடங்களில் கடல் மட்டத்திலிருந்து இரண்டா யிரம் அடிவரையிலும் சில இடங்களில் நாலாயிரம் அடி வரையிலும் உயர்ந்துள்ளன. அவை கிழக்குத் தொடர்ச்சி மலைகளோடு கலக்கும் நீலகிரிப் பகுதியில் எட்டாயிரம் அடிகளுக்கு மேலும் உயர்ந்துள்ளன. அத் தொடரில் நீலகிரிக்குத் தென்பால் அமைந்துள்ள பாலக்காட்டுக் கணவாய் ஒன்றே, இந் நீண்ட மலைத் தொடரில் அமைந் துள்ள செம்மையான வழியாகும். அக் கணவாய்க்குத் தென்பால் உள்ள ஆனைமலைக் கொடுமுடியின் உயரம் 8841 அடியாகும். இம்மேற்குத் தொடர்ச்சி மலைகள் பின்பு தெற்கு நோக்கிச் செல்லச் செல்ல உயரத்தில் குறைந்துள்ளன. இந் நீண்ட மலைத் தொடருக்கும் அர பிக் கடலுக்கும் இடையில் மகாராஷ்டிரம், கொண்கானம், மலையாளம் ஆகிய மூன்று நாடுகள் அமைந்துள்ளன.

கிழக்குத் தொடர்ச்சி மலைகள், மேற்குத் தொடர்ச்சி மலைகளைப் போலத் தொடர்ச்சியாய் அமையவில்லை; விட்டு விட்டு அமைந்துள்ளன. இவை முன்னவற்றை விட உயரத்தில் குறைந்தவை. இவை கிழக்குக் கடற் கரைக்கு ஏறத்தாழ 50 கல் முதல் 100 கல் தொலைவில் நேராக அமைந்துள்ளன; தெற்கில் செல்லச் செல்லத் தென்மேற்காகத் திரும்பி நீலகிரிப் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலைகளோடு இணைகின்றன. இவை விட்டு விட்டு அமைந்திருத்தலால் தட்சிணப் பீடபூமியிலிருந்து கிழக்குக் கரைப் பகுதிகளுக்கு எளிதில் போக்குவரவு வழிகள் அமைந்துள்ளன. இக் கிழக்குத் தொடர்ச்சி மலை களின் சிதறுண்ட பகுதிகளே, வட ஆர்க்காடு மாவட்டத்தி லுள்ள சவ்வாது மலைகள், தென் ஆர்க்காடு மாவட்டத்தி லுள்ள கல்ராயன் மலைகள், சேலம் மாவட்டத்தில் உள்ள

சேர்வராயன் மலைகள், திருச்சி மாவட்டத்தில் உள்ள பச்சை மலைகள், கொல்லிமலைகள் என்பவை. இக் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் ஒரு பகுதியே வேங்கட மலையாகவும் அதனை அடுத்த பல மலைகளாகவும் அமைந்துள்ளது.

## ஆறுகள்

தக்கணப் பீடபூமியில் **கோதாவிரி, கிருஷ்ணை** என்னும் பெரிய ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து புறப்பட்டுக் கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்கக் கடலிற் கலக்கின்றன. இவ்வாறே வட பெண்ணை, பாலாறு, தென் பெண்ணை, காவிரி, வைகை, பொருநை (தாமிர வருணி) என்னும் ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்தே தோன்றிக் கிழக்கு நோக்கிப் பாய்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து தோன்றி மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கும் ஆறுகளும் சில உள்ளன. அவற்றுள் நீண்டதும், இலக்கியப் புகழ் பெற்றதும் சேரநாட்டைச் சார்ந்த **பேரியாறு** என்பது.

**வடபெண்ணையாறு** மைசூர் நாட்டில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தோன்றிக் கிழக்கு நோக்கிப் பாய்ந்து நெல்லூர் மாவட்டத்தை வளப்படுத்தி வங்கக் கடலிற் கலக்கிறது. **பாலாறும்** அதே மலைப் பகுதியில் தோன்றி மைசூர் நாட்டுக் கிழக்குப் பகுதியையும் வட ஆர்க்காடு மாவட்டத்தின் வட பகுதியையும் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பகுதியையும் வளப்படுத்தி வங்கக்கடலிற் கலக்கிறது. **தென்பெண்ணையாறும்** அதே மலைப் பகுதியில் தோன்றித் தெற்காகப் பாய்ந்து சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்கள் வழியாகத் தென்னார்க்காடு மாவட்டத்துள் பாய்ந்து கூடலூருக்கு வடக்கில் கடலில் கலக்கின்றது.

**காவிரியாறு** குடகு மலையில் தோன்றி மைசூர் நாட்டிற் பாய்ந்து, தமிழகத்துள் நுழைந்து, திருச்சி மாவட்

டத்தில் இரண்டாகப் பிரிகிறது. அவ்விரண்டும் கொள்ளிடம் என்றும் காவிரி என்றும் பெயர் பெற்றுள்ளன. காவிரியாறு தஞ்சை மாவட்டத்தில் பல சிற்ருறுகளாகப் பிரிந்து தஞ்சை 'மாவட்டத்தை நெற்களஞ்சியமாக மாற்றிக் காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் கடலில் கலக்கிறது.

**வையை யாறு,** மேற்குத் தொடர்ச்சி மலேகளுள் ஒரு பகுதியாகவுள்ள வருஷ நாடு-ஆண்டிப்பட்டி மலேகளில் தோன்றி, மதுரை மாவட்டத்தை வளப்படுத்தி, இராம நாதபுர மாவட்டத்தின் ஒரு பகுதி வழியாகப் பாய்கிறது. இந்த ஆறும் இலக்கியச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்தது. **பொருநையாறு** மேற்குத் தொடர்ச்சி மலே களில் ஒன்ருன பொதியில் மலேயில் தோன்றித் திருநெல் வேலி மாவட்டத்தில் பாய்ந்து கடலிற் கலக்கிறது. இது பாயும் நிலப்பகுதி முழுமையும் பயிர்த் தொழில் வளம் பெற்ற பகுதியாகும்.

## நிலவளமும் பண்டை நகரங்களும்

மேற்குத் தொடர்ச்சி மலேகளுக்கு மேற்கேயுள்ள மலேயாள நாட்டில் **தென்மேற்குப் பருவக்காற்றினுல்** ஆண்டுக்கு எண்பது அங்குலம் மழை பெய்கிறது. அதனுல் அப்பகுதி முழுமையும் காட்டுவளமும் விளே பொருள்வளமும் பெற்றுச் செழிப்புடன் விளங்குகின்றது. அந் நாட்டுக் காடுகளில் மிகப் பெரிய உயர்ந்த மரவகை களேக் காணலாம். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை மூங்கில், தேக்கு, கருங்காலி மரங்கள் ஆகும். கடற் கரைப்பகுதி தெங்கந் தோப்புக்களே மிகுதியாகப் பெற் றுள்ளது. அங்குள்ள சிற்றூர்கள் தெங்கந்தோப்புக்களால் சூழப்பெற்றுள்ளன. அடர்ந்த காடுகளில் ஏலக்காயும் மிளகும் நன்கு பயிராகின்றன. அரபிக் கடலே அடுத்து உப்பங்கழிகள் அமைந்துள்ளன. இக் கழிகள் சிற்ருறு கள் போல அகன்று நீண்டு இருப்பதால் இவற்றின்

வழியே படகுகளில் போக்குவரவு மிகுதியாக நிகழ்கிறது. மலைச்சரிவுகளில் தேயிலை, காப்பி, ஏலக்காய் முதலியன நன்கு பயிராகின்றன. அந்நாட்டுக் கடற்கரைத் துறை முகங்களான நறவு, தொண்டி, முசிறி முதலியன ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை உடையன. அவை மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் இடைப்பட்ட இடத்தில் அமைந்திருந்த காரணத்தால், கடல் வாணிகச் சிறப்பை மிகுதியாகப் பெற்றிருந்தன.

மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்குக் கிழக்கிலுள்ள பகுதியில் ஆண்டுக்கு ஏறத்தாழ நாற்பது அங்குல மழையே பெய்கிறது. அதனால் மைசூர் நாடு ஓரளவு வளமாய் உள்ளது. அங்குள்ள காடுகளில் சந்தன மரங்கள் மிகுதியாகும்.

தமிழகத்தின் கீழ்க்கரைப் பகுதியில் **கொற்கை, காயல், காவிரிப்பூம்பட்டினம், மாமல்லபுரம்** என்பவை புகழ்பெற்ற துறைமுக நகரங்களாய் இருந்தன. கொற்கையும் காவிரிப்பூம் பட்டினமும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே சிறந்திருந்தன. மாமல்லபுரம் கி. பி. ஒன்று முதல் ஒன்பது நூற்றாண்டுகள் வரையிலும் சிறப்புற்றிருந்தது. காயல் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்தது. இவற்றுள் காவிரிப்பூம் பட்டினமும் மாமல்லபுரமும் கடல் கொந்தளிப்பால் அழிவுற்றன. கொற்கையும் காயலும் கடல் பின்னோக்கிச் சென்றமையால் தம் சிறப்பை இழந்துவிட்டன.

காவிரி, வையை, பொருநை ஆகிய ஆறுகள் பாயப் பெறும் தமிழகப் பகுதி சோழ பாண்டியர்க்கு உரியது; கணக்கற்ற கோவில்களைக் கொண்டது; இந் நாட்டிற்கே உரிய கலைகளைப் பெற்றது. வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிச்சநல்லூர் போன்ற பழைய இடங்களைப் பெற்றது. மிகப் பழைய காலம் முதல் பயிர்த் தொழிலை உயிர்த் தொழிலாகப் பெற்றது.

## (2) பழைய கற்காலம்

பழைய மனிதன் இமயமலை போன்ற பனி நிறைந்த மலைகளில் தங்கியிருந்திருத்தல் இயலாது; கொடிய விலங்குகளும் விடப் பூச்சிகளும் இருளும் நிறைந்த காடுகளிலும் வாழ்ந்திருத்தல் இயலாது. மிகப் பழைய காலத்தில் கங்கை முதலிய வட இந்தியப் பெரிய ஆறுகளை அடுத்த நிலப்பகுதிகள் சதுப்பு நிலங்களாய் இருந்தன. எனவே, பழைய மனிதன் அங்கும் வாழ்ந்திருத்தல் இயலாது. அவன் மலையை அடுத்த காடுகளுக்கும் கடலுக்கும் இடைப்பட்ட தக்கணப் பகுதியிலும் தென்னிந்தியப் பகுதியிலுமே வாழ்ந்தான் என்று கொள்வது பொருத்தமாகும். இவ்விரு பகுதிகளும் கடல் மட்டத்தைவிட உயர்ந்தவை; அடர்ந்த காடுகள் அற்றவை; தட்ப வெப்பநிலை மனிதன் பொறுக்கக் கூடிய அளவினை உடையது.

இப்பகுதியில் ஏறத்தாழ மூன்று லட்சம் ஆண்டுகளாகவே மனிதன் வாழ்ந்துவந்தான். அந் நீண்ட காலத்தின் பெரும் பகுதியே **பழைய கற்காலம்** என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

### பழைய கற்காலக் கருவிகள்

**பழைய கற்காலம்** என்பது, பழைய மனிதன் பதப் படுத்தப்படாத கற்கருவிகளைப் பயன்படுத்திய காலமாகும். அக்காலம் பல ஆயிரம் ஆண்டுகளைக் கொண்டது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. பதப்படுத்தப் படாத பலவகைக் கோடரிகள், ஈட்டிகள், வட்டக் கற்கள், சுற்றிலும் கூரிய முனைகளைக் கொண்ட வட்டக் கற்கள், குழி தோண்டும் கருவிகள், இருபுறமும் கூர்மை பொருந்திய நீண்டு ஒடுங்கிய கத்திகள், சுத்திகள், ஒரு பக்கம் மட்டும் கூர்மையுடன் முட்டை வடிவில் அமைந்த கருவிகள், கிழங்குகளைப் பெயர்த்தெடுக்கும் கருவிகள் என்

பன பழைய கற்காலக் கருவிகளாகும். இவை தமிழகத்தில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களிற் கிடைத்துள்ளன. இக் கருவிகள் செய்யத் தக்க கற்கள் சத்தியவேடு மலைகள், நகரி மலைகள், பெருமாத்தூர் மலைகள் ஆகிய மலைகளில் இன்றும் கிடைக்கின்றன.

## உணவும் உறைவிடமும்

இக்கருவிகள் விலங்குகளின் இறைச்சியைக் கிழிக்கத் தக்கவை அல்ல. எனவே பழைய கற்கால மக்கள் தொடக்கத்தில் இயற்கையிற் கிடைத்த பழங்களையும் காய்களையும் கிழங்குகளையுமே தின்று வாழ்ந்திருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பின்பு காலப்போக்கில் அம் மக்கள் விலங்குகளைக் கொன்று உண்ணத் தொடங்கியிருக்கலாம். அவர்கள் தொடக்கத்தில் தவளை போன்ற சிறிய உயிர்களையே உண்டிருத்தல் கூடும். அவர்கள் தொடக்கத்தில் கொடிய விலங்குகளுடனும் பாம்பு முதலிய கொடிய விட உயிர்களுடனும் வாழ வேண்டியவராயினர். அம் மக்கள் அவற்றின் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள முன்பு கூறப்பெற்ற கற்கோடரிகளையும் ஈட்டிகளையும் கூரிய முனைகளைக்கொண்ட வட்டக் கற்களையும் பயன்படுத்தினர்; பின்பு மரக் கிளைகள்மீது தங்கி வாழலாயினர்; பின்னர் மலைக் குகைகளைப் போன்ற உருவத்தில் மரக்கிளைகளையும் தழைகளையும் கொண்டு சிறிய வீடுகளை அமைத்துக் கொண்டனர்; ஆண்டுகள் செல்லச் செல்ல வில்லையும் அம்பையும் பயன்படுத்தி விலங்குகளையும் பறவைகளையும் வேட்டை ஆடினர். அவர் மரபினரே தென்னிந்தியக் காடுகளில் இன்று வாழ்ந்துவரும் **வேடர்** என்னலாம்.

பழைய கற்கால மக்கள் முதலில் நெருப்பை உண்டாக்க அறியாதிருந்தனர். மூங்கில்கள் பெருங் காற்றில் ஒன்றோடு ஒன்று உராய்ந்து தீப்பிடித்து எரிதலைக் கண்டதும், தாமும் அவ்வாறே இரண்டு மரத்துண்டுகளைக்

கொண்டு நெருப்பை உண்டாக்க அறிந்தனர்; பின்னர், ஒரு மரக்கட்டையில் கூரிய கற் கருவியைக் கொண்டு சிறிய பள்ளத்தை உண்டாக்கினர்; அப்பள்ளத்தில் ஒரு குச்சியை விட்டுக் கடைந்து தீயை உண்டாக்க அறிந்தனர்; அக்குச்சி **தீக்கடைகோல்** எனப்பட்டது. சக்கி முக்கிக் கற்களைக் கொண்டும் நெருப்பை உண்டாக்கப் பின்னர் அறிந்தனர்; தாம் கொன்ற உயிர்களின் இறைச்சியை அந் நெருப்பில் பதப்படுத்தி உண்டனர்.

**உடை**

பழைய கற்கால மக்கள் முதலில் தனித்தனியே வாழ்ந்தனர்; பின்பு கொடிய விலங்குகளிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளக் கூட்டமாக வாழலாயினர். தங்களுக்குத் தேவையான கருவிகள் செய்யத்தக்க பாறைகள் இருந்த இடங்களில் தங்கி வாழ்ந்தனர். அவர்கள் இறந்தவர் உடலைப் புதைக்கவுமில்லை; எரிக்கவுமில்லை. அப்படியே விட்டுச் சென்றனர். முதல் மனிதன் முதலில் ஆடையின்றி வாழ்ந்தான்; இலைகளையும் தழைகளையும் பயன்படுத்த அறிந்த பின்பு அவற்றை ஆடையாகப் பயன்படுத்தினான்; விலங்குகளை வேட்டையாடத் தொடங்கிய பின்பு அவற்றின் தோல்களை உடுத்தத் தொடங்கினான்; மரப்பட்டைகளையும் ஆடையாகப் பயன்படுத்தினான். இவ்வாறு அவன் பயன்படுத்திய புலித்தோலும் மான்தோலும் மரவுரியும் இன்று சமயத் துறையில் தூயனவாக மதிக்கப்படுகின்றன.

## மொழி

முதல் மனிதன் பேச அறியாத நிலையில் இருந்தான்; விலங்குகள் ஓசையிட்டதையும் பறவைகளின் ஓசைகளையும் கண்டும், கேட்டும், அவற்றைப் போல ஓசையிட்டான்; பின்பு தான் விரும்பிய பொருள்களைப் பிறர்க்குக் காட்டித் தன் கருத்தைக் கையின் அசைவால் அறிவித்

தான் ; அப் பொருள்கள் எதிரில் இல்லாதபொழுது அவற்றின் உருவங்களை ஓவியங்களாக வரைந்து காட்டித் தன் கருத்தைத் தெரிவித்தான் ; இவ்வாறு நீண்டகாலம் முயன்று முயன்று இறுதியில் தன் கருத்தைத் தெரிவிக்கும் சொற்களைக் கண்டறிந்தான். அவன் மரபினரே பழைய கற்கால மக்கள்.

### வழிபாடு

இன்றுள்ள மலைநாட்டு மக்களிடம் **தேவதைகளின் வணக்கமே** மிகுந்துள்ளது. இதனை நோக்க, பழைய கற்கால மக்களிடமும் இவ்வணக்கம் சிறந்திருந்தது என்று கூறலாம். பெண்களுக்கு மதிப்பைத் தந்த மக்களிடமே தேவதைகளின் வழிபாடு சிறந்து காணப்படுதல் இயற்கை. எனவே, பழைய கற்கால மக்களுள் பெண்களே மதிக்கத்தகும் இடத்தைப் பெற்றிருந்தனர் என்று கூறலாம். கொண்டரிடம் மக்களைப் பலியிடும் வழக்கம் சில ஆண்டுகளுக்கு முன்புவரை இருந்துவந்தது. மனிதரைப் பலியிட்டு வேள்விசெய்தல் வேதகாலத்திலும் வழக்கில் இருந்தது. கொண்டரும் சவரரும் எருமைகளைப் பலியிட்டு மது அருந்திக் கூத்தாடுதலை இன்றும் வழக்கமாய்க் கொண்டுள்ளனர். இப்பழக்கம் பழைய கற்கால மக்களிடமிருந்து வழிவழியாக வந்திருத்தல் கூடும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பழைய கற்காலத்தின் பிற்பகுதி ஏறத்தாழக் கி. மு. 35000—10000 என்னலாம்.

## (3) புதிய கற்காலம்

பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் உண்டானவையே திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்த செம்மணல் **தேரிகள்** என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அக்கால மக்கள் இரும்புகளையும் கருவிகளாய்ப் பயன்படுத்தினர் ; பயிர்த்தொழில்

முறையைக் கண்டறிந்தனர்; மட்பாண்டங்களைச் செய்ய அறிந்தனர்; இயற்கையாகக் கிடைத்த பழங்கள் கொட்டைகள் கிழங்குகள் இவற்றைப் பொறுக்கி உண்பதை விட்டு, உணவுப் பொருள்களை விளைக்கத் தொடங்கினர். அவர்கள் வழியினரே புதிய **கற்கால மக்கள்.**

பதப்படுத்தப்பட்ட கற்கருவிகள் பயன்படுத்தப் பட்ட காலமே **புதிய கற்காலம்** எனப்பட்டது. பழைய கற்கால மக்களின் வழியினரே தமது அறிவு வளர்ச்சி யாலும் அநுபவத்தாலும் பதப்படுத்தப்பட்ட கற்கருவி களைச் செய்துகொண்டனர்.

## புதிய கற்காலக் கருவிகள்

புதிய கற்காலத்தில் பதப்படுத்தப்பட்ட பலவகைக் கருவிகள் செய்யப்பட்டன; மிக நுண்ணிய துளைகளை யுடைய கல் மணிகள், மனித உருவங்கள், விலங்கு உரு வங்கள், தாயித்துகள், தானியங்களை உடைக்கும் இயந் திரங்கள், எழுதுகோல்கள் முதலியன செய்யப்பட்டன. கூழாங்கற்களைக் கொண்டு பொத்தான்கள், கோலிகள், தாயித்துகள் முதலியன செய்யப்பட்டன. இக்கருவிகள் தென்னிந்தியாவில் சேலம், அனந்தப்பூர், கர்நூல், பெல் லாரி முதலிய மாவட்டங்களில் பல இடங்களில் கண் டெடுக்கப்பட்டன. இவை கிடைத்த இடங்களுக்கு அண் மையில் மலைகள் அமைந்துள்ளன. அம்மலைக் கற்களைக் கொண்டே இவை செய்யப்பட்டன என்று கருதுதல் பொருத்தமாகும். சில கருவிகள் வேறு இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட கற்களைக் கொண்டு செய்யப்பட்டவை ஆகும்.

தச்சுத் தொழிலால் உண்டாக்கப்பட்ட மரப்பொருள் கள் எளிதில் அழியத்தக்கவை. ஆதலால் அவை கற் கருவிகள் போன்று இன்று நாம் காணும்படி இல்லா தொழிந்தன. புதிய கற்கால மக்களின் இல்லங்கள் காலப்போக்கில் மண், மரம், வைக்கோல், சோளத்

தட்டை, தென்னை ஓலை, பனை ஓலை இவற்றால் அமைந்தன. கூரையின் உச்சியில் மழைநீர் விழுவதைத் தடுக்கச் சட்டி அல்லது மண்குடம் கவிழ்க்கப்பட்டது. இச் சட்டி அல்லது குடமே காலப்போக்கில் கோவில்களின் கலசங்களாய் மாறின என்று கூறுதல் பொருத்தமாகும்.

புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்கள் பல, சேலம் திருச்சிராப்பள்ளி திருநெல்வேலி என்னும் மாவட்டங்களிலும் புதுக்கோட்டைச் சீமையிலும் காணப்பட்டன. அங்கு அவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களின் சிதைவுகள் கிடைத்தன. அழகு செய்யப்படாதவை, அழகு செய்யப்பட்டவை என அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். அழகு செய்யப்படாதவை சொரசொரப்பானவை, வழுவழுப்பானவை, பளபளப்பானவை, நிறம் பூசப்பெற்றவை என்று நான்கு வகைப்படும். அழகு செய்யப்பட்டவை—கையால் செய்யப்பட்டவை, அச்சின் துணைகொண்டு செய்யப்பட்டவை, நுண்ணிய கருவிகளைக் கொண்டு செய்யப்பட்டவை என மூன்று வகைப்படும். இம்மக்கள் தாழிகள், சட்டிகள், பலவகைக் கிண்ணங்கள், வட்டத் தட்டுகள், விளக்குகள், பொம்மைகள் முதலியவற்றை மண்ணைக் கொண்டே செய்தனர்.

## வாழ்க்கை

புதிய கற்கால மக்கள் பயிர்த் தொழில் செய்யவும் அறிந்துகொண்டனர் ; வேட்டை நாய்களை வளர்க்கத் தொடங்கினர் ; பின்பு ஆடு, பசு, எருது, எருமை ஆகிய விலங்குகளையும் தம்முடன் வாழும்படி பழக்கப்படுத்தினர் ; இவற்றின் மேய்ச்சலுக்குகந்த புல்வெளிகளில் வாழலாயினர் ; ஆடு, பசு, எருமை இவற்றின் பாலையும் இறைச்சியையும் தங்கள் உணவுப் பொருள்களாகக் கொண்டனர் ; புல்வெளி காய்ந்துவிட்ட பின்பு வேறு இடங்களுக்குக் குடியேறினர்; கால்நடைகளை வைத்திருந்த காரணத்தால் கூட்டங்கூட்டமாக வாழலாயினர். கால்நடை

கள் பெருகப் பெருகக் குடித்தனமும் பெருகலாயிற்று. ஆதலால் அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி மிகுதிப் பட்டது.

## தொழில்கள்

புதிய கற்கால மக்கள் நெல் சோளம் பருப்பு வகை கள் பழ வகைகள் இவற்றைப் பயிரிடத் தம் அநுபவத் தால் அறிந்தனர்; ஆறுகளில் வெள்ளம் வந்தபொழுது ஆற்றுநீரைக் கால்வாய்கள் வழியாக வயல்களுக்குக் கொண்டு சென்றனர். கபிலை ஏற்றத்தால் புன்செய்நிலம் பதப்படுத்தப்பட்டது. இங்ஙனம் அம்மக்கள் பயிர்த் தொழிலில் ஈடுபட்டமையால் நீர்நிலைகளை அடுத்த இடங் களில் நிலைத்து வாழலாயினர்; மண் சுவர்களை எழுப்பி வீடுகளை அமைத்தனர். காய்ந்த சோளத்தட்டைகளும் வைக்கோலும் வீட்டுக் கூரைகளாய் அமைந்தன. பயிர்த் தொழிலுக்குத் தேவையான கலப்பை, வண்டி முதலியவற் றைச் செய்யத் தச்சுத் தொழில் தோன்றி வளரலாயிற்று.

புதிய கற்காலத்தில் பருத்தி பயிராக்கப்பட்டது. ஆடைகளைப் பதப்படுத்தும் கற்கருவிகள் கிடைத் துள்ளன. இவற்றைக் கொண்டு இம்மக்கள் தம் ஆடை களை மிருதுவாக்கினர் என்று கொள்ளலாம். குறும்பாடு கள் வளர்க்கப்பட்டமையால் அவற்றின் மயிரைக் கொண்டு கம்பளம் நெய்யப்பட்டது என்று கருதுதல் பொருத்தமாகும். தோலைப் பதனிடும் கற்கருவிகளும் கிடைத்துள்ளன. இதனால் புதிய கற்கால மக்கள் விலங்கு களின் தோல்களைப் பதப்படுத்தித் தமக்குத் தேவையான பல பொருள்களைச் செய்துகொண்டனர் என்பது தெரி கிறது. இம்மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுள் நாணய வடிவங்கொண்ட மிகச் சிறிய கற்களும் காணப் பட்டன. அக்காலத்தில் அவை நாணயங்களாய்ப் பயன் பட்டிருக்கலாம்.

## ஆடை அணிகள்

மட்பாண்டங்களில் பலவகை நிறங்களை ஊட்டிய அக்கால மக்கள் பருத்தியிலும் பல நிறங்களை ஊட்டித் தங்களுக்குத் தேவையான ஆடைகள் நெய்துகொண்டனர் என்று கூறுதல் தவருகாது. பருத்தி ஆடைகளை உடுக்கத் தொடங்கிய புதிய கற்கால மக்கள், தங்கள் முன்னோரான பழைய கற்கால மக்கள் பயன்படுத்திய தோலாடையையும் மரவுரியையும் வரலாற்றுச் சின்னங்களாக மதித்துச் சிறப்பு நிகழ்ச்சிகளின்போது மட்டுமே உடுத்தனர் என்று கொள்ளலாம். மிக நுண்ணிய துளைகள் பொருந்திய கல்மணிகள், பொத்தான்கள், சங்காலும் எலும்பாலும் செய்யப்பட்ட வளையல்கள் ஆகியவற்றைப் புதிய கற்கால மக்கள் அணிந்துவந்தனர். பெண்களைக் குறிக்கும் மண்பொம்மைகளில் தலைமுடி, சிறிய பல வளையங்களாகச் சுருட்டப் பெற்றுத் தலைமீது சுற்றி வைக்கப்பட்டுள்ளது. அவ்வளையங்கள்மீது சீப்புகள் செருகப்பட்டிருந்தன. இவை அக்காலப் பெண்களின் கூந்தல் ஒப்பனையை நமக்கு அறிவிப்பன ஆகும்.

## அரசின் தோற்றம்

அவர்கள் தமது கால்நடைச் செல்வத்தைப் பாதுகாக்கத் தம்முள் வலியவன் ஒருவனைத் தலைவனாக ஏற்றுக் கொண்டனர். அத்தலைவனே காலப்போக்கில் அரசனானான். **கோ, கோன்** என்னும் தமிழ்ச் சொற்கள் அரசனைக் குறிப்பவை. **கோனார்** என்னும் சொல் முல்லைநில மக்களான ஆயர்களை இன்றளவும் குறித்துவருதல் காணலாம். **கோ** வாழ்ந்த இல்லம் **கோவில்** (கோ + இல்) எனப்பட்டது. இச்சொல்லே பின்பு மக்களுக்குத் தலைவனாகிய கடவுள் உறைவதாகக் கருதப்பட்ட இடத்துக்கும் பெயராயிற்று.

## இடுகாடு

பழைய கற்கால மக்கள் இறந்தவர் உடலை அப்படியே விட்டுச் சென்றனர் என்பது முன்பு கூறப்பட்டது அன்றோ? புதிய கற்கால மக்கள் அங்ஙனம் செய்யவில்லை. பெரிய மண் தாழிகளில் இறந்தவர் உடல் உட்கார்ந்திருக்கும் நிலையில் வைக்கப்பட்டது. அத்தாழியில் சிறிதளவு மணல் இடப்பட்டது. அதன்மீது ஒரு தட்டில் அரிசி முதலிய தானியங்கள் சிறிதளவு வைக்கப்பட்டன. இறந்தவர் பயன்படுத்தின கற்கருவிகள் அத்தாழியின் பக்கங்களில் வைக்கப்பட்டன. தாழி நிறைய மணல் இடப்பட்டது. அதன்மீது மண்மூடி ஒன்று வைக்கப்பட்டது. அத்தாழி பெரிய குழியில் புதைக்கப்பட்டது. அக்குழி ஒரு கற்பலகையால் மூடப்பட்டது. அதன்மீது மணல் இடப்பெற்று முட்டை வடிவுடைய கற்பலகை ஒன்று வைக்கப்பெற்றது. அக்கற்பலகையைச் சுற்றிலும் ஒரு முழ வுயரமுள்ள செங்குத்தான கற்கள் நடப்பட்டன. இத்தகைய புதையிடங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் குன்றத்தூர், பல்லாவரம் முதலிய இடங்களிலும் புதுக்கோட்டைச் சீமையிலும் மிகுதியாக உள்ளன. திருக்கழுக்குன்றத்துக்கு இரண்டு கல் தொலைவில் உள்ள தத்தளூரை அடுத்த மலையைச் சுற்றிலும் இத்தகைய புதை குழிகள் இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டது. ஒரு குழந்தை அடக்கம் செய்யப்பட்ட சிறிய தாழி முழு வுருவத்தில் தோண்டி எடுக்கப்பட்டது. அதனுள் சிறிய மட்பாண்டங்கள் சில வைக்கப்பட்டிருந்தன. அவற்றுடன் எலும்புத்தூளும் காணப்பட்டது. அஃது அக்குழந்தையின் எலும்புத்தூளாய் இருக்கலாம். அப்புதை குழியில் கிடைத்த இரும்பு அரிவாள் தொட்டவுடன் பொடிப் பொடியாகப் போய்விட்டது.* தத்தளூர்

* நான் திருக்கழுக்குன்றம் கல்வியதிகாரி திரு. இராம. கலியாணராமன் அவர்களுடனும் புலவர் சி. கயிலாயம் முதலியவருடனும் சென்று இவ்விடத்தைப் பார்வையிட்டேன்.

ஆசிரியர் சொங்கலிங்க நாயகர் நிலத்தில் இத்தாழி கிடைத்தது.

## சமயம் முதலியன

புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் கிடைத்த பொருள்களுள் சிவலிங்கத்தை உணர்த்தும் கற்களும் கிடைத்துள்ளன. எனவே லிங்க வணக்கம் கற்கால முதலே இருந்துவருவது என்பது இங்கு அறியத்தகும். ஆதிச்ச நல்லூர்த் தாழிகளில் வேலும் சேவற் கொடியும் முறையே இரும்பிலும் வெண்கலத்திலும் கிடைத்தன. இவற்றை நோக்க, முருக வழிபாடு பல்லாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட காலத்திலிருந்தே தொடர்ந்து இருந்து வருகிறது என்பது தெரிகிறது.

கால்நடைகளை மேய்த்துவந்த மக்களிடமே கண்ணன் வழிபாடு தோற்றமெடுத்தது. அதுவே பிற்காலத்தில் விஷ்ணுவின் வணக்கமாக மாறியது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

ஆதிச்ச நல்லூரிற் கிடைத்த தாழிகளில் உமி காணப்பட்டது. சில வெண்கலப் பாத்திரங்களில் அரிசியும் காணப்பட்டது. இவை அக்கால மக்கள் நெற்பயிர் செய்ய அறிந்திருந்தனர் என்பதை உணர்த்துகின்றன. தமிழகத்துப் புதிய கற்கால மக்கள் திராவிட மொழிகளைப் பேசிவந்தனர் என்றும், அவர்கள் காலம் ஏறக்குறையக் கி. மு. 10000—கி. மு. 5000 என்னலாம் என்றும் ஆராய்ச்சியாளர் அறைகின்றனர்.

## 2. சங்க காலம்

### (1) தொல்காப்பியர் காலம்

இன்றுள்ள தமிழ் நூல்களுள் காலத்தாற் பழைமை பெற்றது **தொல்காப்பியம்**. அது பாண்டியர் தலைநகராய் இருந்த **கபாடபுரத்தில்** அரங்கேற்றப்பட்டது என்று இறையனார் களவியலுரை கூறுகின்றது. கபாடபுரம் என்பது பாண்டிய நாட்டின் கடற்கரையில் அமைந் திருந்த பழம்பெரும் நகரமாகும். அந்நகரம் வால்மீகி இராமாயணத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. அதனைச் சார்ந்த கடலில் கிடைத்த முத்து மௌரிய சந்திரகுப்தன் காலத்தில் மௌரியப் பெருநாட்டில் நன்கு விலையாயிற்று என்பது அச்சந்திரகுப்தன் அமைச்சனான சாணக்கியன் எழுதியுள்ள பொருள் நூலைக் கொண்டு அறியலாம். அந்த அறிஞன் அம்முத்துக்களைப் **பாண்டிய கவாடம்** என்று குறித்துள்ளான். மௌரிய சந்திரகுப்தன் காலம் கி. மு. 325—301.

கபாடபுரம் அழிந்த பின்பு அப்பகுதியிற் கிடைத்த முத்துக்களைப் 'பாண்டிய கவாடம்' என்று கூறுதலில் சிறப்பில்லை. ஆதலால் அந்நகரம் அழிவதற்கு முன்பே 'பாண்டிய கவாடம்' என்னும் வழக்கு வந்திருத்தல் வேண் டும் என்று கருதுதல் பொருத்தமாகும். ஆதலால் சந்திர குப்தன் காலத்தில் கவாடபுரம் இருந்தது என்று கருதுதல் ஏற்புடையது. தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட பின்பு கவாடபுரம் கடல்கோளால் அழிந்தது என்பது இறைய னார் களவியல் கூற்று. கி. மு. 306இல் பெரிய கடல்கோள் உண்டானதென்று இலங்கை வரலாறு கூறுகின்றது. அக் கடல்கோளே இலங்கைக்கு அண்மையிலிருந்த கவாட புரத்தை அழித்திருக்கலாம். எனவே, **தொல்காப்பியம்**

ஏறத்தாழக் கி. மு. நான்காம் நூற்றுண்டின் இறுதி யில் செய்யப்பட்டது எனக் கருதுதல் மிகவும் பொருத்த மாகும்.

## (2) தொல்காப்பியத்தால் அறியப்படுவன

தொல்காப்பியம் ஏறத்தாழ 1600 நூற்பாக்களைக் கொண்ட இலக்கண நூல். தொல்காப்பியர் சேரர்க்குரிய பனம்பூ மாலையையும் சோழனுக்குரிய ஆத்தி மாலையை யும் பாண்டியனுக்குரிய வேப்பம்பூ மாலையையும் குறித் துள்ளார்; மணிமுடி தரித்தவன் **மன்னன்** என்றும், அதனை அணியாதவன் **சிற்றரசன்** என்றும் குறித்துள் ளார்; தேர், வில், வேல், வாள், வீரக்கழல் முதலியன இவர்களுக்கு உரியவை என்றும் கூறியுள்ளார்.

### போர் முறை

தொல்காப்பியர் காலத் தமிழகத்தில் எழுவகைப் போர்கள் நடைபெற்றன. அவை, பகைவருடைய கால் நடைகளைப் பிடிக்க முயலுதல்—அக் கால்நடைகளுக்கு உரியவர் அம்முயற்சியை எதிர்த்தல், அரசன் தன் படையுடன் பகைவர் நாட்டின்மீது படையெடுத்தல்— அந்நாட்டுக்குரிய மன்னன் அம்முயற்சியை எதிர்த் தல், பகைவனது கோட்டையை முற்றுகையிடல்—அம் முற்றுகையைக் கோட்டையுள் இருப்பவர் எதிர்த்தல், திறந்த வெளியில் போர் நடத்தல் என்பன. இவை முறையே **வெட்சி–கரந்தை, வஞ்சி–காஞ்சி, உழிஞை– நொச்சி, தும்பை** எனப் பெயர் பெற்றன. இப்பெயர்கள் மலர்களைக் கொண்டு அமைந்தவை. வெட்சிப் பூக்களை யும் பூமாலைகளையும் சூடிக்கொண்டு அரசனும் அவன் படை வீரரும் பகைவருடைய கால்நடைகளைக் கவர முனைதல் **வெட்சி** எனப்பட்டது. வெற்றி **வாகை** எனப் பட்டது. இவ்வாறே பிறவும் பெயர் பெற்றன.

வெட்சி முதலிய ஏழு திணைகளும் (திணை - ஒழுக்கம்) பல **துறைகளைப்** பெற்றிருந்தன. அதாவது, ஒவ்வொரு போர் முறையையும் மேற்கொண்டவர் முறையாக என்னென்ன செய்யவேண்டும் என்பதை உணர்த்திய படிகளே துறைகள் எனப்பட்டன. தொல்காப்பியம் இவற்றை விரிவாகக் கூறியுள்ளது. கி. மு. நான்காம் நூற்றுண்டிலேயே இங்ஙனம் போர் முறைகள் ஒழுங்கு செய்யப்பெற்று இலக்கண நூலில் இடம் பெறும் தகுதி பெற்றுவிட்டன என்பதை நோக்க, அவை எத்துணை நூற்றுண்டுகளாக வழக்குப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது ஆழ்ந்து நினைக்கத் தகும்.

## தொல்காப்பியர்க்கு முற்பட்ட இலக்கண நூல்கள்

கி. மு. நான்காம் நூற்றுண்டில் இலக்கண நூல் செய்த தொல்காப்பியர், தமது நூலுள் ஏழத்தாழ ஆயிரத்து அறுநூறு நூற்பாக்களைப் பாடியுள்ளார்; தமக்கு முன்பு இலக்கண நூல்கள் செய்த ஆசிரியர் பலரைத் தம் நூற்பாக்களில் பல இடங்களில் சுட்டியுள்ளார். இங்ஙனம் அவர் நூறு நூற்பாக்களுக்கு 16 இடங்கள் வீதம் தம் நூல் முழுமையிலும் தமக்கு முற்பட்ட புலவர்களைக் குறித்துள்ளார். கீழ் வருவனவற்றைக் காண்க:

"நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே"
"ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே"
"புலனன் குணர்ந்த புலமை யோரே"
"நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"
"யாப்பென மொழிப யாப்பறி புலவர்"
"வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்"
"யாப்பின் வழியது என்மனார் புலவர்"
"நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே"

"ஒத்தென மொழிப உயர்மொழிப் புலவர்"
"தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப"
"தோலென மொழிப தொன்னெறிப் புலவர்"
"நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"
"நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்"
"சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்"

இங்ஙனம் பலவாறு வரும் தொடர்கள், **தொல்காப்பியர்க்கு முன்னரே இலக்கண நூல்களைச் செய்த ஆசிரியர் பலர் இருந்தனர்** என்பதை நன்கு உணர்த்துவனவாகும்.

ஒரு மொழியில் முதலில் உண்டாவன செய்யுட்கள். அவை மிக்க அளவில் பெருகிய பின்பே புலவர்கள் அவற்றைக் கொண்டு மொழிக்கு இலக்கணம் வகுத்தல் இயல்பு. எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுதல் போல இலக்கியத்திலிருந்து இலக்கணம் எடுக்கப்படுதலே இயல்பு. **தொல்காப்பியர்க்கு முன்னரே இலக்கண நூலாசிரியர் பலர் இலக்கண நூல்கள் பலவற்றைச் செய்தனர்** என்று தொல்காப்பியர் கூறுதலை நோக்க, அப்புலவர்தம் இலக்கண நூல்களுக்கு உறுதுணையாக **மிகப்பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும்** என்பது தெளிவாகிறதன்றோ! இந்த உண்மையை நோக்க, தொல்காப்பியர் காலமாகிய கி. மு. நான்காம் நூற்றாண்டிலேயே தமிழில் மிகப் பல இலக்கண நூல்களும் அவற்றிற்கு உறுதுணையான பரந்துபட்ட இலக்கிய நூல்களும் இருந்திருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடை மலை போல் விளக்கமாதல் காண்க.

## தொல்காப்பியர்க்கு முற்பட்ட இலக்கியம்

தொல்காப்பியர் செய்யுளியல் என்னும் பகுதியில் தம் காலத்தில் இருந்த பல நூல்களைக் குறித்துள்ளார். அவை சிலப்பதிகாரம் போன்ற பெரிய காப்பியங்கள், மொழி பெயர்ப்பு நூல்கள், உரை நடை நூல்கள்,

பரிபாடல் நூல்கள், கலிப்பாவில் அமைந்த நூல்கள், ஆற்றுப்படை நூல்கள், பிற்காலப் பிள்ளைத் தமிழ் போன்ற நூல்கள் எனப் பலவகைப்பட்டன. இத் தகைய பலதிறப்பட்ட நூல்களும் அக்காலத்தில் இருந் திராவிடில், ஆயிரத்து அறுநூறு நூற்பாக்களைக் கொண்ட தொல்காப்பியம் என்னும் பேரிலக்கண நூல் தோன்ற வழியில்லை என்பதும் இங்கு நினைக்கத்தகும். இவை அனைத்தையும் நடுவு நிலையிலிருந்து ஆராயின், தொல் காப்பியர் காலமாகிய கி. மு. 4ஆம் நூற்றுண்டிற்கு முன்பே தமிழில் மிகப்பல இலக்கிய நூல்களும் பல இலக்கண நூல்களும் இருந்திருத்தல் வேண்டும் என்னும் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக உணரலாகும்.

## எழுத்து–சொல்–பொருள்

தொல்காப்பியம் மொழிக்கு உரிய எழுத்துக்களையும் அவ்வெழுத்துக்களாலாகிய சொற்களையும் தொடர்களை யும், அவற்றலாகிய செய்யுட்களையும் அச்செய்யுட்களால் ஆகிய நூல்களையும் குறிப்பிடுகின்றது; இம்மொழிக்கும் நூல்களுக்கும் உரிய தமிழ் மக்களது இல்வாழ்க்கையை யும் சமுதாய வாழ்க்கையையும் அரசியல் வாழ்க்கையை யும் தெளிவாகக் கூறுகின்றது. அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல் என்னும் இயல்கள் இல்வாழ்க்கையைப் பற்றிப்பேசுகின்றன. புறத்திணை இயல், மரபியல் என்பன மக்களின் சமுதாய வாழ்க்கை யையும்அரசியல் வாழ்க்கையையும் எடுத்து ஓதுகின்றன. செய்யுளியலும் உவம இயலும் மக்கள் வாழ்க்கையைச் செய்யுளமைப்பில் எடுத்துக் காட்டுகின்றன. மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் தோன்றும் உணர்ச்சிகளையும் அவற்றுக்குரிய அடையாளங்களையும் தெளிவாக உணர்த் துவது மெய்ப்பாட்டியல் எனப்படும்.

## ஐவகை நிலங்கள்

தொல்காப்பியர்க்கு முன்பு வாழ்ந்த தமிழ் மக்கள் தமிழகத்து நிலத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து இருந்தனர். அவை, குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பன. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. இளங்காடும் பசும்புல் வெளிகளும் சேர்ந்த இடம் முல்லை எனப்பட்டது. குறிஞ்சியின் ஒரு பகுதியும் முல்லையின் ஒரு பகுதியும் கதிரவன் வெப்பத்தால் தத்தமக்குரிய வளம் குன்றிப் **பாலை** என்னும் பெயரைப் பெற்றன. **மருதம்** என்பது வயலும் வயல் சார்ந்த இடமும் ஆகும். கடலும் கடலைச் சார்ந்த பரந்த நிலப்பரப்பும் **நெய்தல்** எனப் பெயர் பெற்றது. தொல்காப்பியர் இந்த ஒவ்வொரு நிலத்திலும் இருந்த மரங்கள், மக்கள், விலங்குகள், பறவைகள், நீர்நிலைகள், ஊர்கள், மக்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள், மக்களுடைய தொழில்கள் முதலியவற்றைத் தனித்தனியே எடுத்துக் கூறியுள்ளார்; விலங்குகள், பறவைகள், பொழுதுகள் முதலியன மக்கள் வாழ்வில் எங்ஙனம் பயன்பட்டன என்பதையும் விளக்கியுள்ளார்.

## இல்வாழ்க்கை

தொல்காப்பியர் காலத்தில் **காதல் மணமே** சிறப்புற்றிருந்தது. ஒருவனும் ஒருத்தியும் தனியிடத்திற் சந்தித்து, உள்ளம் ஒன்றி அன்பின் வயப்பட்டுக் கலத்தல் **களவு மணம்** எனப்படும். இக்களவு சில மாதங்கள் தொடர்ந்து நடைபெறும். தலைவியின் தோழி வாயிலாக இக்களவு வெளிப்படும். பெண்ணின் பெற்றோர் உண்மையுணர்ந்து பலர் அறியத் திருமணம் செய்துவைப்பர். அத்திருமணத்திற்குப் பின்பு கணவனும் மனைவியும் நடத்தும் இல்வாழ்க்கை **கற்புநெறி** எனப் பெயர்பெறும். அவ்வில்லற வாழ்க்கையில் கணவன் மேல்நிலைக் கல்வி கற்கவும் அரசியல் பற்றியும் பொருளீட்டவும் தன்

மனைவியை விட்டுப் பிரிவான். அவற்றுக்குரிய காலங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. கணவன் பரத்தையர் பொருட்டும் பிரிதல் உண்டு. மனைவி தன் கணவனது கூடாவொழுக்கத்தை விரும்பாள்; அவன் தன் வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது அவனிடம் ஊடல் கொள்வாள்; அப்பொழுது பாணர் முதலியோர் தலைவிக்குச் சமாதான வார்த்தைகளைக் கூறி அவளது ஊடலை நீக்குவர். இத்தகைய இல்வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவும் தொல்காப்பியரால் தனித்தனியே எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

## கடல்வாணிகம்—நடுகல்

கடல் வழியே அயல் நாடுகளுக்குச் செல்லும் தமிழன் மனைவியை அழைத்துச் செல்வது வழக்கமில்லை என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இதனை நோக்க, தொல்காப்பியர்க்கு முன்னரே தமிழர் கடல் கடந்து செல்லுதல் வழக்கமென்பது புலனாகும். தமிழர் கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் சென்று வாணிகஞ் செய்தமை இதனால் அறியப்படும்.

போரில் தன் வீரத்தைக் காட்டி இறந்த வீரன் அரசனாலும் குடிமக்களாலும் பாராட்டப்பட்டனன். அவனது பெயர், அவனுடைய வீரச் செயல்கள் ஆகியவை என்றும் நிலைபெற்றிருக்க ஒரு **கல் நடுதல்** வழக்கம். அக்கல்லில் அவனுடைய உருவம் பெயர் அவன் செய்த வீரச்செயல்கள் ஆகியவை பொறிக்கப் பெறும். **அவ்வீரக்கல்** அலங்கரிக்கப்பெற்று மன்னனாலும் மற்றவராலும் பூசிக்கப்பெறும். தொல்காப்பியர் இவ் வீரக்கல்லைத் தேர்ந்தெடுத்தல், இதனை நீராட்டல், பெயர் முதலியன பொறித்தல், அலங்கரித்தல், வழிபாடு இயற்றல் பற்றிய விவரங்களைக் கூறியுள்ளார்.

போரில் வெற்றி பெற்ற வீரர்கள் தம் கால்களில் வீரக் கழலை அணிந்து ஆடுதல் **கழல்நிலைக் கூத்து** எனப்படும். குறிஞ்சிநில மக்களின் கூத்துவகையுள் ஒன்று

**வள்ளிக் கூத்தாகும்**; வள்ளியின் திருமணம் பற்றிய கூத்து ஆதலின் **வள்ளிக் கூத்து** எனப்பட்டது. இரண்டு கைகளையும் மடக்கி விலாப்புறங்களில் ஒற்றி அடித்து ஆடும் கூத்துத் **துணங்கைக் கூத்து** எனப்படும். இத்தகைய கூத்து வகைகள் பல தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.

## இயல்–இசை–நாடகம்

பண்டைக் காலத்தில் குழல், யாழ், முழவு, தண்ணுமை முதலிய இசைக்கருவிகள் வழக்கில் இருந்தன. யாழிற் பலவகை இருந்தன. இவற்றை இசைத்துப் பாடியவர் **பாணர்**, பாடினியர் எனப்பட்டனர். இவற்றின் உதவி கொண்டு நடனம் ஆடிய மகளிர் **விறலியர்** எனப்பட்டனர். நடனத்தையும் கதை தழுவிவரும் கூத்தையும் ஆடியவர் **கூத்தர்** எனப்பட்டனர். செய்யுட்களைச் செய்து அழியாப்புகழ் பெற்றவர் **புலவர்** எனப்பட்டனர். புலவர் **இயற்றமிழிலும்**, பாணர் **இசைத் தமிழிலும்**, கூத்தர் **நாடகத் தமிழிலும்** வல்லவர். இம் மூவகை அறிஞராற்றன் **இயல்–இசை–நாடகம்** என்னும் முத்தமிழும் முறையாக வளர்ந்தன. தமிழ் முடிமன்னரும் சிற்றரசரும் செல்வரும் இம் மூவகை அறிஞரையும் போற்றிப் பாதுகாத்தனர்; இவர்களைக் கொண்டு தம் தாய்மொழியைப் பேணி வளர்த்தனர். இவை யாவும் தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள்ள செய்திகள். இவை தொல்காப்பியர் காலத்தில் திடீரென்று தோன்றியிருத்தல் இயலாதல்லவா? எனவே, இவை தொல்காப்பியர்க்கு முன்னர்ப் பல நூற்றுண்டுகளாக வழக்கில் இருந்து வளர்ந்துவந்த உண்மைகள் என்பது பொருத்தமாகும்.

## பிற கலைகள்

தொல்காப்பியர் ஓர் ஆண்டினை ஆறு கூறுகளாகப் பிரித்துள்ளார். அவை **கார், கூதிர், முன்பனி, பின்பனி,**

**இளவேனில், முதுவேனில்** என்பன. ஆவணி புரட்டாசி மாதங்கள் கார் காலம்; ஐப்பசி கார்த்திகை மாதங்கள் கூதிர் காலம்; மார்கழி தை மாதங்கள் முன்பனிக் காலம்; மாசி பங்குனி பின்பனிக் காலம்; சித்திரை வைகாசி இள வேனிற் காலம்; ஆனி ஆடி மாதங்கள் முதுவேனிற் காலம். அவர் இவ்வாறே ஒரு நாளை ஆறு சிறுபொழுது களாகப் பிரித்துள்ளார். அவை **வைகறை, விடியல், காலை, நண்பகல், எற்பாடு, யாமம்** எனப் பெயர் பெறும். இப்பொழுதுகளின் பெயர்களனைத்தும் தூய தமிழ்ச் சொற்கள் என்பது கவனிக்கத்தகும். நடு இரவு நடுநாள் எனப்பட்டது. அதாவது இரவு பன்னிரண்டு மணிநேரம் ஒரு நாளின் சரிபாதியாகக் கருதப்பட்டது. எனவே, ஒரு நாளின் தொடக்கம் பகல் பன்னிரண்டு மணி என்பது தெளிவாகிறது. பழந்தமிழ் மக்கள் பகல் பன்னிரண்டு மணியிலிருந்தே ஒரு நாளைக் கணக்கிட் டனர்போலும்! இவையனைத்தும் அக்கால மக்களின் **வானநூற்கலை**யறிவை ஓரளவு உணர்த்துவனவாகும்.

தொல்காப்பியர் கடவுள் வாழ்த்தைப் பற்றிக் கூறி யுள்ளார்; குறிஞ்சி நிலத்துக்கு **முருகன்** கடவுள் என் றும், முல்லை நிலத்துக்குக் கடவுள் **மாயோன்** என்றும், மருத நிலத்துக்குக் கடவுள் **வேந்தன்** என்றும், நெய்தல் நிலத்துக்குக் கடவுள் **வருணன்** என்றும் கூறியுள்ளார். பாலை நிலத்துக்குக் கடவுள் **கொற்றவை**. இவ் விவரங் களை நோக்கத் தொல்காப்பியர்க்கு முன்பே தமிழகத்தில் இக் கடவுளர்க்குக் **கோவில்கள்** இருந்தமை தெளிவாகும். இக் கடவுளர் கோவில்களில் வழிபடப்பட்டனர் என்பதை அறிய, இவர்களைக் குறிக்கும் உருவச்சிலைகள் இருந் திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும். அவை மண், மரம், கல், உலோகம் இவற்றுள் ஒன்றுலோ பல வாலோ செய்யப்பட்டனவாகலாம். இக் கடவுளர்க்கு அமைக்கப்பட்ட கோவில்கள், அரசனது கோவில், கோட்டை, கொத்தளங்கள் ஆகிய அனைத்தும் அக்காலக்

**கட்டடக்** கலைத்திறனை ஓரளவு நமக்கு அறிவிப்பன வாகும்.

## (3) சங்க நூல்கள்

தொல்காப்பியத்துக்குப் பின்பு தோன்றிய நூல்கள் பல. அவற்றுள் அழிந்தன போக எஞ்சியுள்ளன சில. அவை திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவை. பல்வேறு புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே **தொகை** என்பது. அத்தொகை நூல்கள் எட்டு ஆகும். அவை **நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு** என்பவை. பத்துப்பாக்களின் தொகுப்பே **பத்துப் பாட்டு** என்பது. அவை திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவ்விருவகை நூல்களும் பல்வேறு புலவரால் பாடப்பெற்ற பாக்களைக் கொண்டவை. இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்தும் **அகப்பொருள்** (இன்பம்) பற்றியவை. பதிற்றுப்பத்தும் புறநானூறும் **புறப் பொருள்** (அறம், பொருள், வீடு) பற்றியவை. பரிபாடல் அகமும் புறமும் பற்றியது. பத்துப்பாட்டுள் முல்லைப் பாட்டும் குறிஞ்சிப்பாட்டும் அகப்பொருள் பற்றியவை. ஏனைய எட்டும் புறப்பொருள் பற்றியவை.

இந்நூல்களில் உள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் பல காலத்தவர்; பல ஊரினர்; அவருட் சிலர் தம் காலத்து அரசர்களை நேரில் கண்டு பாடியவர்; பலர் தமக்கு முன்பு வாழ்ந்த அரசர்களைப் பற்றிய செய்தி களைத் தம் பாக்களில் குறித்தவர்.

**திருக்குறள்** வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் அமைந்துள்ள அரிய நூல். அது திருவள்ளுவரால் செய்யப் பெற்றது. கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறும் **சிலப்பதிகாரம்** என்னும் பெருங்காப்பியம் சேரநாட்டு இளவரசரான **இளங்கோ** என்பவரால் செய்யப்பெற்றது. அவருக்கு நண்பரான மதுரைக் கூலவாணிகன் **சாத்தனூர்** என்பவரால் பாடப்பட்டது **மணிமேகலை** என்னும் பெருங்காவியமாகும். இது கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்னும் மாதரசியைப் பற்றியதாகும்.

திருக்குறளின் தொடர்களும் சொற்களும் கருத்துக்களும் மேலே கூறப்பெற்ற எல்லா நூல்களிலும் காணப் படுதலால், அவை அனைத்திற்கும் முற்பட்டது திருக்குறள் என்று கூறலாம். அது கி.மு. முதல் இரண்டு நூற்றுண்டுகளுள் செய்யப்பட்டிருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். இங்குக் கூறப்பெற்ற சங்க நூல்களின் காலம் ஏறத்தாழக் கி.மு. 300—கி.பி. 300 எனலாம். இக்காலம் **கடைச்சங்க காலம்** எனப்படும். இக்காலத்திற்கு முன்பு இடைச் சங்கத்தில் தொல்காப்பியம் செய்யப்பட்டது என்றும், அதற்குமுற்பட்ட காலத்தில் தலைச்சங்கம் திகழ்ந்தது என்றும் இறையனுர் களவியல் உரை கூறுகின்றது. உண்மை எதுவாயினும் ஆருக. பாண்டியர் தங்கள் தலைநகரில் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தனர் என்பதற்கு ஏற்ற சான்றுகள் இன்றுள்ள சங்க நூல்களில் கிடைக்கின்றன.

## (4) சங்கநூற் செய்திகள்

### முத்தமிழ் நாடுகள்

**சேரநாடு** என்பது அரபிக்கடலுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகட்கும் இடைப்பட்ட இன்றுள்ள கேரள மாநிலமாகும். சங்ககாலத்தில் பேரியாற்றங்கரையில்

அமைந்திருந்த **வஞ்சிமாநகரம்** என்பது இதன் தலை நகராய் இருந்தது. **நறவு, தொண்டி, முசிரி, வைக்கரை** என்பன இதன் துறைமுக நகரங்கள். மலைவளம் மிக்குடைய சேரநாட்டிலிருந்து மயில்தோகை, மிளகு, தேக்குமரத் துண்டங்கள், சந்தனமரத் துண்டங்கள், மணப்பொருள்கள் ஆகியவை அயல்நாடுகளுக்கு மிகுதியாய் ஏற்றுமதியாயின. இந்நாட்டைச் சேரர் அல்லது **சேரலர்** என்னும் அரசமரபினர் பன்னெடுங்காலமாக ஆண்டுவந்தனர். **சேரலர்** என்ற சொல்லே காலப் போக்கில் **கேரளர்** என மாறி வழங்கலாயிற்று.

**சோழநாடு** என்பது, தஞ்சை திருச்சி மாவட்டங்களும் தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம் வட்டமும் சேர்ந்த நிலப்பரப்பு ஆகும். காவிரியாற்று வளத்தால் இந்நாடு மருதநிலச் செழிப்புடன் தொன்று தொட்டு விளங்கிவருகிறது. இந்நாட்டின் தலைநகர் **உறையூர்**; துறைமுக நகரம் **காவிரிப்பூம்பட்டினம்**. **சோழர்** என்னும் அரசமரபினர் இவ்வள நாட்டை நெடுங் காலமாய் ஆண்டுவந்தனர். இந்நாட்டிலிருந்து பல வகை உணவுப் பொருள்களும் ஆடைகளும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி ஆயின.

இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் சேர்ந்த நிலப்பகுதியே சங்ககாலப் **பாண்டிய நாடு** ஆகும். **வையை, பொருநை** என்னும் ஆறுகள் இந்நாட்டை வளப்படுத்தின. கடைச் சங்க காலத்தில் இந்நாட்டிற்கு **மதுரை** தலைநகரமாயும் பொருநை கடலொடு கலந்த இடத்தில் இருந்த **கொற்கை** என்பது துறைமுக நகரமாயும் விளங்கின. இந்நாடு முத்துக்களுக்குப் பெயர்பெற்றது. மிக மெல்லிய ஆடைகளும் பிற பொருள்களும் அயல்நாடுகளுக்கு அனுப்பப் பட்டன. பாண்டியர் மதுரையில் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தனர்.

## சிற்றரசர்கள்

இன்றுள்ள தென்னுர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியை **மலையமான்கள்** ஆண்டுவந்தனர்; மற்றொரு பகுதியை **ஓய்மான்கள்** ஆண்டனர். தொண்டை நாட்டைத் **திரையர்** என்பவர் ஆண்டுவந்தனர். பழனி மலைநாட்டை **வேள் ஆவியும்** அவன் மரபினரும் ஆண்டு வந்தனர். பறம்புமலை நாட்டைப் **பாரியின்** முன்னேரும் பாரியும் ஆண்டனர். பொதியில்மலை நாட்டை **வேள் ஆய்** மரபினர் ஆண்டுவந்தனர். கொல்லிமலை நாட்டை ஓரியின் மரபினர் ஆண்டனர். அதற்கு வடபாற்பட்ட தகடூர் நாட்டை **அதியமான்கள்** ஆண்டனர். தோட்டி மலையையும் அதனைச் சார்ந்த நிலப்பகுதியையும் **நள்ளி** மரபினர் ஆண்டனர்.

இங்ஙனம் தமிழகத்துப் பல பகுதிகளை ஆண்டுவந்த சிற்றரசருள் சிலர் மூவேந்தர்க்குக் கட்டுப்படாத நிலையில் தனியாட்சி செலுத்தினர்; பலர் மூவேந்தர்க்கு அடங்கி வாழ்ந்தனர். இச் சிற்றரசருள் திருக்கோவலூர் நாட்டை ஆண்ட **காரி**, பறம்பு நாட்டை ஆண்ட **பாரி**, பழனிமலை நாட்டை ஆண்ட **பேகன்**, தோட்டிமலை நாட்டை ஆண்ட **நள்ளி**, கொல்லிமலை நாட்டை ஆண்ட **ஓரி**, தகடூர் நாட்டை ஆண்ட **அதிகமான்**, பொதியில் மலைநாட்டை ஆண்ட **ஆய்** ஆகிய எழுவரும் புலவர்—பாணர்—கூத்தர் ஆகிய முத்தமிழ்வாணர்க்கு வரையாது வழங்கிய சிறப்பினால் **சங்ககால வள்ளல்கள்** எனப் பெயர் பெற்றனர். இவர்களுக்குப் பின்பு ஆண்ட **குமணனும்** ஓய்மானுட்டை ஆண்ட **நல்லியக் கோடனும்** சிறந்த வள்ளல்களாய் விளங்கினர்.

சேர சோழ பாண்டியர் இச் சிற்றரசரோடு சில சமயங்களில் போரிட்டனர். ஒரு பேரரசன் சில சிற்றரசரைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு மற்றொரு பேரரசனை எதிர்த்ததுண்டு. பேரரசர் இருவர் சிற்றரசர் பலருடன் சேர்ந்து ஒரு பேரரசன்மீது படையெடுத்தமை

யும் உண்டு. மூவேந்தர் படை யெடுத்துப் பாரி வள்ளலை அழித்தனர். சேர சோழர் ஐம்பெரு வேளிரோடு சேர்ந்து நெடுஞ்செழியனை எதிர்த்துத் தோல்வியுற்றனர். இங்ஙனம் சங்ககாலத்தில் நடைபெற்ற போர்ச் செயல்கள் பலவாகும்.

## சேரர்

சங்ககாலச் சேரமன்னருள் மிகச் சிறந்தவன் செங் குட்டுவன். அவன் தமிழகத்தில் பல போர்களில் வெற்றி பெற்றான்; கடற்படை செலுத்திக் கடற் கொள்ளைக் காரரை அழித்தான்; கணவனை இழந்து தனது நாட்டி னுள் வந்து விண்ணுலகடைந்த கண்ணகியின் உருவத் தைப் பொறிக்கத்தகும் கல்லை எடுத்துவரப் பெரும்படை யுடன் இமயம் நோக்கிச் சென்றான்; கங்கைக்கு வடபால் தன்னை எதிர்த்த ஆரிய மன்னரை வென்றான்; தனது நாட்டில் கண்ணகிக்குக் கோவில் கட்டினான்; மிகச் சிறப் பாக அக்கோவில் விழாவினை நடத்தினான். அவன் நண்பர்களான இலங்கைக் கயவாகு மன்னன் முதலி யோர் அவ்விழாவிற் கலந்துகொண்டனர். அக்கயவாகு வின் காலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யாகும். இதனால் செங்குட்டுவன் காலம் இன்னது என் பது தெரிகின்றது. அக்காலத்திற்றான் செங்குட்டுவன் தம்பியாரான இளங்கோவடிகளால் நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டது; அடிகளின் நண்பரான மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரால் மணிமேகலை பாடப்பட்டது.

## சோழர்

சங்ககாலச் சோழ வேந்தருள் பேரரசனாய் விளங்கிய வன் கரிகாலன். அவன் பெரும்படையுடன் புறப்பட் டுச் சேர பாண்டியரை வென்றான்; சிற்றரசர் பலரை அடக்கினான்; தொண்டை நாட்டைக் கைப்பற்றினான்;

அதன் தலைநகரான காஞ்சியை விரிவாக்கினான்; குறும்பர்களை வென்று அவர் நாட்டைக் கைப்பற்றினான்; அந் நாடு இக் காலத்தில் கடப்பை மாவட்டம் எனப்படுகிறது. சங்ககாலத்தில் இந்த அளவு நாட்டை வென்ற தமிழரசன் வேறு ஒருவனும் இல்லை. கரிகாலன் காவிரியின் இரண்டு கரைகளையும் உயர்த்தினான்; ஆற்றிலிருந்து பல கால்வாய்களை வெட்டுவித்தான். அவனது நன் முயற்சியால் சோழநாடு வளம் உற்றது. அதனால் அவன் **திருமாவளவன்** எனப் பெயர் பெற்றான். அவன் காலத்து உறையூரும் காவிரிப்பூம் பட்டினமும் செல்வச் சிறப்புடன் விளங்கின. பிற்காலத்தில் கடப்பை, நெல்லூர், செங்கற்பட்டு முதலிய மாவட்டங்களை ஆண்ட தெலுங்குச் சோழர் தம்மைக் **கரிகாலன் மரபினர்** என்று கூறிப் பெருமை அடைந்தனர் என்பதை நோக்க, சங்ககாலக் கரிகாலனது பெருஞ்சிறப்பை நன்கு உணரலாம்.

புலவர் பலர் அப் பேரரசனைப் புகழ்ந்து பாடியுள்ளனர்; அப்பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அவன்மீது பாடப்பட்டவையே பத்துப் பாட்டுள் இரண்டு பாடல்கள். அவை பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் ஆகும். கரிகாலன் பட்டினப்பாலை பாடிய புலவர்க்கு 16 இலட்சம் பொன் பரிசளித்தான் என்று கலிங்கத்துப்பரணி கூறுகின்றது.

## பாண்டியர்

சங்ககாலப் பாண்டியருள் மிக்க சிறப்புற்று விளங்கியவர் இருவர். அவருள் ஒருவன், சேரன் சோழன் என்ற இரு பெருவேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் ஒரே போர்க்களத்தில் முறியடித்தவன்; அதனால் **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** என்று பாராட்டப்பட்டவன். அவன் சிறந்த புலவன். புலவர் பலர் அவன் அவையை அலங்கரித்தனர். அவர்கள் அவன்மீது பாடிய பாக்கள் புறநானூற்றில் இடம் பெற்

றுள்ளன. அவனது அவைப் புலவர் தலைவரான மாங்குடி மருதனுர் 'மதுரைக் காஞ்சி' என்னும் நீண்ட பாடலை அவன்மீது பாடியுள்ளார். மதுரை நக்கீரர் என்பவர் 'நெடுநல் வாடை' என்னும் மற்ருெரு நீண்ட பாடலைப் பாடியுள்ளார்.

## அரசும் ஆட்சியும்

தந்தைக்குப் பின்பு மகனே அரசுரிமை எய்துதல் தமிழ்நாட்டு வழக்கம். அவனுக்குப் பிள்ளை இல்லையாயின், அவன் உடன் பிறந்தான் மகன் பட்டத்தை அடைதல் முறை. கரிகாலனுடைய பெரிய தந்தை பிள்ளையின்றி இறந்தான். அதனுல் கரிகாலன் சோழ அரசனுனுன் என்பது இங்கு அறியத் தகும். பட்டத்திற்காகப் பங்காளிகள் போரிடலும் வழக்கமாகும். கரிகாலனைப் பட்டம் பெற விடாமல் அவன் பங்காளிகள் சிறையில் அடைத்தனர்; அச் சிறைக்கூடத்துக்குத் தீ வைத்தனர். கரிகாலன் அச் சிறையிலிருந்து தப்பி அரசு கட்டில் ஏறினுன்.

அரசனுக்கு உதவியாக **அமைச்சர்** இருந்தனர். அவருடன் **புரோகிதர், மருத்துவர், கணியர், மாசனம்** (மக்கள் பிரதிநிதிகள்) சேர்ந்து **ஐம்பெருங் குழு** எனப்பட்டனர் என்று சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் கூறியுள்ளார். அமைச்சர் நாட்டு அரசியலைக் கவனித்தனர்; அரசியலில் அரசனுக்கு அறிவுரை கூறினர். மாசனம் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவர். இவர்கள் குடிகளின் நலன்களையும் தேவைகளையும் அரசனுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் பாதுகாக்கப் பயன்பட்டனர். நாட்டில் சமயத் தொடர்பான செய்திகளைக் கவனிக்கப் புரோகிதர் பயன்பட்டனர். நாட்டுச் சுகாதாரத்தைக் கவனித்தவர் மருத்துவர் எனப்பட்டனர். நாட்டில் நடைபெறவேண்டும் நல்ல செயல்களைத் தொடங்குதற்குரிய நாளையும் நேரத்தையும் அறி

விக்கக் கணியர் (சோதிடர்) பயன்பட்டனர். இவ் வொவ்வொரு குழுவினரும் தனித்தனியே தத்தம் கடமைகளைச் செய்துவந்தனர் என்று கூறலாம்.

சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் அமைச்சர், புரோகிதர், படைத் தலைவர், தூதுவர், சாரணர் ஆகியோர் **ஐம்பெருங் குழுவினர்** என்று கூறியுள்ளார். படைத் தலைவர்—தேர், யானை, குதிரை, காலாட் படைகளின் தலைவராவர். தூதுவர் என்பவர் அயல் நாடுகளில் தங்கியிருந்து தம் நாட்டு வாணிகம், அரசியல் உறவு முதலியவற்றைப் பாதுகாப்பவர். சாரணர் என்பவர் ஒற்றர்; ஒற்றி நின்று அயல்நாட்டு அரசியற் செய்திகளை அறிந்து வந்து தம் அரசனிடம் கூறுபவர். "அரைசொடு பட்ட ஐம்பெருங் குழுவும்" என்று இளங்கோவடிகள் கூறுவதை நோக்க, ஐம்பெருங் குழுவினர் அரசியல் தொடர்புடையவர் என்பது அறியப்படும்.

**எண்பேராயம்** என்பது எட்டுவகைப்பட்டவர் கொண்ட பெருங்கூட்டம் எனப் பொருள்படும். அவர்—கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் என்பவராவர். இவருள் **கரணத்தியலவர்** என்பவர் அரசாங்கப் பெருங்கணக்கராவர்; **கரும விதிகள்** என்பவர் அரசாங்க வேலைகளை நடத்தும் தலைவராவர்; **கனகச் சுற்றம்** என்பவர் அரசாங்கப் பொருட் காப்பு அதிகாரிகள்; **கடை காப்பாளர்** என்பவர் நாடு காவல் காக்கும் அதிகாரிகள்; **நகர மாந்தர்** என்பவர் நாட்டைச் சேர்ந்த பல நகரங்களின் பிரதிநிதிகள்; **படைத் தலைவர்** என்பவர் காலாட் படைத் தலைவராகலாம்; **யானை வீரர்** என்பவர் யானைப் படைத் தலைவராவர்; **இவுளி மறவர்** என்பவர் குதிரைப் படைத் தலைவராவர்.

நாடாண்ட மன்னன் இந்த ஐம்பெருங் குழுவினரையும் எண்பேராயத்தாரையும் கலந்தே ஆட்சி புரிந்தான்.

இக் குழுவினர் நாட்டுப் பெருவிழாக்களிலும் சிறப்புச் செயல்களிலும் அரசனோடு பங்கு கொண்டனர் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

**ஆசான்** என்பவன் புரோகிதன்; **பெருங்கணி** என்பவன் அரசாங்கத் தொடர்புடைய சோதிடர் தலைவன்; **அறக்களத்து அந்தணர்** என்பவர் நீதிபதிகள்; **காவிதிகள்** என்பவர் அமைச்சர் போன்ற அரசாங்க உயர் அலுவலர்; **மந்திரக் கணக்கர்** என்பவர் அரசாங்க ஓலைகளை வரையும் அதிகாரிகள். **கோவிலதிகாரிகள்** வேறு இருந்தனர். இவர்களும் ஆட்சியிற் பங்கு கொண்டவர் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

வள்ளுவர் கூறிய அரசியல் நெறிபற்றியே சங்க காலத் தமிழ் வேந்தர் ஆட்சி செய்தனர் என்பதற்குப் பல சான்றுகள் சங்ககாலப் பாடல்களில் உள்ளன. குற்ற மற்ற கோவலனைக் குற்றவாளி என்று எண்ணிக் கொல்வித்தது தவறு என்பதை உணர்ந்தவுடன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,

> " யானோ அரசன் யானே கள்வன்
> மன்பதை காக்கும் தென்புலங் காவல்
> என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுள் "

என்று வருந்திக் கூறித் தன் இருக்கையிலிருந்து வீழ்ந்து இறந்தான். (சிலம்பு, காதை 20, அடி 75–77).

இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற சேரன் செங்குட்டுவன், " நாட்டில் மழை பெய்யாவிடினும், குடிகள் யாதானும் ஒன்றால் வருந்தினும், குடிமக்கள் அரசனது ஆட்சியையே குறை கூறுவர். இத்தகைய குறைகள் நிகழாதபடி குடிமக்களைப் பாதுகாத்தல் துன்பமே தவிர இன்பமன்று," என்று கூறி வருந்தினான்.

> " மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
> பிழைஉயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
> குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி

மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதக(வு) இல்''.

—சிலம்பு, காதை 25, அடி 100–104

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அப் போருக்கு முன்பு செய்த சபதத்தில், ''யான் என் பகைவரை வெல்லேனாயின், என் குடிமக்கள் நிற்க நிழல் காணாது, 'எம்மரசன் கொடியவன்' என்று வருந்திக் கூறும் கொடுங்கோலனாகுக'', என்று கூறினான். இதிலிருந்து அவனது செங்கோலாட்சியை நன்கறியலாமன்றோ?

## மன்னர் ஒழுக்கம்

தமிழரசர் ஆட்சியிற் சிறந்திருந்தாற்போலவே ஒழுக்கத்திலும் சிறந்திருந்தனர். ''என் பகைவரை நான் வெல்லேனாயின், என் மனைவியை விட்டுப் பிரிந்தவனாகுக; உயிர் நண்பர்களை விட்டுப் பிரிந்தவனாகுக; குடிகளைப் பாதுகாக்கும் பாண்டிய அரச மரபிலிருந்து மாறிப் பிறப்பேனாகுக'', என்று **பூதப்பாண்டியன்** சூள் உரைத்தான். ''என் பகைவரை நான் வெல்லேனாயின், பொது மகளிர் மாலை என் மார்பில் துவள்வதாக'', என்று **சோழன் நலங்கிள்ளி** சூள் செய்தான். இவற்றிலிருந்து இவ்வரசர்தம் ஒழுக்க மேம்பாட்டை உள்ளவாறு அறியலாமன்றோ?

**ககந்தன்** என்ற சோழ மன்னன் பிற பெண்கள்மீது காமுற்ற தன் மைந்தர் இருவரையும் தன் வாளால் வெட்டி வீழ்த்தினான்; **சோழன் நெடுமுடிக்கிள்ளி,** மணிமேகலை மீது வெறிகொண்ட தன் அரசிளங்குமரன் வித்தியாதரனால் கொல்லப்பட்டான் என்பதை அறிந்தவுடன், ''அக் கீழ்மகன் இன்ன காரணத்தால் கொலைப்பட்டான் என்பதைச் சேர பாண்டியர் அறிவதற்கு முன்பு அவன் உடலை அடக்கம் செய்துவிடுக,'' என்று கட்டளையிட்டான். அவ்வுடல் அடக்கம் செய்யப்பட்ட பொழுது

அவன் அங்குச் செல்லவில்லை என்பது அறியத்தகும். இவையனைத்தும் சங்ககால வேந்தரது ஒழுக்கத்தின் உயர்வை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவுறத் தெரிவிப்பனவாகும்.

## அறநெறி தவறாத ஆட்சி

தன் ஒரே மகனது—பட்டத்திற்குரிய மகனது—தேர் உருளைக்கு அடியில் ஒரு பசுக்கன்று கொல்லப்பட்டதை உணர்ந்த **மநுநீதிச் சோழன்** தன் அமைச்சர் கூறிய கழுவாய் முறைகட்கு உடன்படாமல், தன் மைந்தனைப் படுக்கவைத்துத் தானே அவன்மீது தேரூர்ந்து கொன்றான் எனின், அவனது அறவழி ஆட்சிச் சிறப்பினை என்னென்பது! அவனது அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது. அரசனிடம் தம் குறைகளை முறையிட விரும்புவோர் அம்மணியை அசைத்து ஓசையுண்டாக்குவர். உடனே அவர்கள் அரசன்முன் கொண்டு செல்லப்படுவர். அரசன் அவர்தம் குறைகளைக் கேட்டு முறை வழங்குவான்.

பண்டைத் தமிழரசர் இரவு நேரங்களில் மாறுவேடம் பூண்டு நகர்வலம் வருதல் உண்டு; மக்கள் கூட்டமாக இருந்து பேசுவதைக் கேட்பர்; அவர்களால் சுட்டப்பெறும் அரசியற் குறைகளை உடனுக்குடன் நீக்குதல் வழக்கம். ''யான் காசிக்குச் சென்று திரும்பி வரும் வரையில் அச்சமின்றித் தனியே இரு. பாண்டியனது ஆட்சி உன்னைக் காக்கும்,'' என்று ஒரு வீட்டு மறையவன் கூறியதை நகர்வலம் வந்த பாண்டியன் கேட்டான், அவன் அன்று முதல் அவ்வீட்டுத் திண்ணையில் படுத்துக் காவல் இருந்தான் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. இவை தமிழ் வேந்தரது ஆட்சிப் பொறுப்பை நன்கு உணர்த்தும் சான்றுகளாகும்.

## அரசியலில் சான்றோர்

தமிழரசர் முக்குணவசத்தால் முறை திறம்பலும் உண்டு. அப்பொழுது புலவரும் பிறருமாகிய சான்றோர் குறுக்கிட்டு அறிவுரை கூறி அரசரை நன்னெறிப்படுத்தினர். தான் கனக விசயரைச் சிறை செய்ததைப் பற்றிச் சோழ பாண்டியர் இழித்துரைத்தனர் என்பதைக் கேட்டுப் போருக்கு எழ விரும்பிய செங்குட்டுவனை நோக்கி, **மாடலன்** என்ற மறையவன், "மன்னர் பெருமானே, நின் சினம் தணிக. நினக்கு வயது மிகுந்து விட்டது. இத்துணை ஆண்டுகளைப் போர்களிற் கழித்துவிட்டாய். இனியேனும் அறக்கள வேள்வி செய்து மறுமைப் பயனைத் தேடுவாயாக," என்று அறிவுரை புகன்றான். அச்சான்றோன் அறிவுரை பயன் தந்தது.

சோழ அரசன் திருக்கோவலூரை யாண்ட மலையமான் மக்களை யானையை ஏவிக் கொல்ல நினைந்தான். அதனை யுணர்ந்த **கோவூர் கிழார்** குறுக்கிட்டு அறிவுரை கூறி அக்கொலையை நீக்கினார்; ஒற்றன் என்று தவருகக் கருதப்பட்டுக் கொல்லப்பட இருந்த இளந்தத்தன் என்ற புலவரை, 'அவர் ஒற்றர் அல்லர், பரிசுபெற வந்த ஏழைப் புலவர்' என்று கூறி விடுதலை வழங்கச் செய்தார்; தம்முள் போரிட்டு அழிய இருந்த நலங்கிள்ளியையும் நெடுங்கிள்ளியையும் தம் அறிவுரையால் சமாதானப்படுத்தினர்.

நெடுஞ்செழியன் பல போர்களில் வெற்றி பெற்று மேன்மேலும் போர் வெறியில் இருந்தபொழுது **மாங்குடி மருதனார்** குறுக்கிட்டு, யாக்கை நிலையாமையை எடுத்துக் கூறி, அறக்கள வேள்வி செய்யும்படி தூண்டினர். **வெள்ளைக்குடி நாகனார்** என்ற புலவர் குடிகளது வரிச் சுமையை எடுத்துக் கூறிப் பழைய நிலவரியை நீக்கும்படி செய்தார். சேர சோழ பாண்டியர் தம்முள் போரிடுதலைப் புலவர்கள் வெறுத்தனர்; பேரரசர் இருவர் நண்பராய் இருத்தலைப் பார்த்து மகிழ்ந்து வாழ்த்துக் கூறினர்; முடியுடை மூவேந்தரும் கூடியிருந்ததைக் கண்டு,

"இன்று போல் என்றும் கூடியிருப்பீர்களாக!" என்று ஆசி கூறினர்; சிற்றரசருள்ளும் போர் நிகழாவண்ணம் பார்த்துக்கொண்டனர்.

## ஊர் ஆட்சி

சிற்றூர் மக்கள் சந்தித்து ஊர்நலம் பற்றிய செய்திகள் பேசும் பொதுஇடம் **மன்றம்** எனப்பட்டது. அந்த இடத்தில் ஊர்த் தெய்வங்கள் வழிபடப்பட்டன. அம் மன்றமே ஊர் அவை கூடவும் பயன்பட்டது. பேரூர்களிலும் இத்தகைய மன்றம் இருந்தது. கிள்ளிவளவன் மலையமான் மக்களை ஊர் மன்றத்தில் நிறுத்தியே கொல்லும்படி ஆணை பிறப்பித்தான். உறையூர் மன்றம் நீதிக்குப் பெயர் பெற்றதென்று புலவர் பலர் பாராட்டியுள்ளனர்.

தமிழ் நாட்டு ஊர்களில் இத்தகைய மன்றங்கள் இருந்தன. ஆட்சி மன்ற உறுப்பினர் ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வாக்காளர் தம் பகுதிக்குரிய சார்பாளர் (பிரதிநிதிகள்) பெயர்களை ஓலை நறுக்கில் எழுதிக் குடத்தில் போடுவர். அக்குடத்தின்மேல் அரசாங்க முத்திரை இடப்படும். அதிகாரிகள் அம்முத்திரையை நீக்கி ஒவ்வோர் ஓலையாக எடுத்துப் படிப்பர். இதனை,

> "கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
> பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்கள்"

என்னும் அகநானூற்றுப் பாடல் (77) வரிகளால் அறியலாம். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஊராட்சியைக் கவனித்தனர். ஊராட்சி நடைபெற்ற இடங்கள் **மன்றம், பொதியில், அம்பலம்** எனப் பெயர்பெற்றன.

நிலவரி வசூலித்தல், நிலங்கட்கு நீர்வசதி அளித்தல், வழக்குகளை விசாரித்து முறை வழங்குதல், கோவில் முதலிய பொது இடங்களின் ஆட்சியைக் கவனித்தல்,

அரசன் ஆணைகளை நிறைவேற்றல் முதலிய பல திறப் பட்ட அலுவல்களை ஊராட்சியினர் செய்துவந்தனர். ஊராட்சி போலவே நகராட்சியும் நடைபெற்றது. பல ஊர்களைக் கொண்ட பகுதி **நாடு** எனப்பட்டது. நாட்டை ஆட்சி புரிந்தவர் **நாட்டார்** எனப்பட்டனர். பல நாடுகள் கொண்டது ஒரு **கூற்றம்** எனப்பட்டது. பல கூற்றங் களைக் கொண்ட நிலப் பரப்பே சோழ நாடு, பாண்டிய நாடு எனப் பெயர் பெற்றது.

## கல்வி

ஒரு தாய் பல பிள்ளைகளைப் பெற்றிருப்பினும் கல்வி யால் சிறப்புற்றவனையே பெரிதும் விரும்புவாள்; மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவனாயினும் கல்வியிற் சிறந் தவனையே மேனிலையில் உள்ளவனும் மதிப்பான். அரச னும் அவனது யோசனையைக் கேட்கவே விரும்புவான். இங்ஙனம் வீட்டிலும் நாட்டிலும் மதிக்கப்படுபவன் கற்ற வனேயாவன். ஆதலால் ஒவ்வொருவரும் எப்பாடுபட்டா யினும் கல்வி கற்பது நல்லது. இது ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் அறிவுரை. நாடாண்ட மன்னனே கல்வி யில் இத்தகைய ஆர்வத்தைக் காட்டினன் எனின், அவ னது நாட்டில் கல்வி பெற்றிருந்த மேனிலையை நன்கறி யலாமன்றோ?

ஆசிரியப் பெருமக்கள் **கணக்காயர்** எனப்பட்டனர்; நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் **பாலாசிரியர்** என்று அழைக்கப்பட்டனர்; தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர் **இளம் பாலாசிரியர்** எனப் பெயர் பெற்றனர் என்னலாம். இவருள் சிலர் சங்ககாலப் புலவராயும் விளங்கினர். இவர் தம் பாடல்கள் சங்கத் தொகை நூல்களில் இடம் பெற் றுள்ளன.

பிள்ளை வளர்த்த செவிலித்தாய், குறத்தி, குயத்தி, கொற்றன் (வீடுகட்டுபவன்), கொல்லன், தச்சன், மருத் துவன், அறுவைவாணிகன், சோதிடன், கூலவாணிகன்,

நாணய பரிசோதகன் எனப் பலதிறப்பட்ட குடிமக்களும் சங்ககாலப் புலவராய் விளங்கினர் எனின், அக்காலக் கல்வியின் உயர்நிலையை என்னென்பது !

## பயிர்த் தொழில்

திருவள்ளுவர் உழவு என்னும் தலைப்பில் பயிர்த் தொழிலைப் பற்றிக் கூறியுள்ளார்: "உழுதொழிலால் மெய்வருத்தம் உண்டாகும். பலர் அதற்கு அஞ்சி வேறு தொழில்களை மேற்கொள்வர்; ஆயினும், முடிவில் உழவுத் தொழிலுக்கே திரும்பி வருவர். இதனால் உழவுத் தொழிலே எல்லாவற்றிலும் உயர்ந்தது என்பது பெறப் படும். நாட்டைப் பாதுகாப்பவை நால்வகைப் படைகள். அப்படைகள் வலிமையோடு இருப்பதற்கு உணவே அடிப்படை. அந்த உணவைத் தருவது உழுதொழிலே யாகும். அத்தொழிலே எல்லா மக்களையும் வாழ்விப்பது. ஆதலால் உலகத்தார் என்னும் தேருக்கு உழவரே அச் சாணி போன்றவர். அவர்களே உண்மையில் வாழ்கின் றவர்; தாமும் உண்டு பிறரையும் உண்பிப்பவர்; தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ்விப்பவர். உழுதொழிலில் வள முற்ற நாடு பிற நாடுகளை எளிதில் வெல்ல வல்லது."

தமிழரசர் உழவு பற்றிய உண்மைகளை நன்கு அறிந் தவர் ஆதலின், ஆற்றங்கரைகளை உயர்த்தினர்; ஆற்று நீரை அணையிட்டுத் தடுத்தனர்; கால்வாய்களை வெட்டி ஆற்றுநீரைக் கொண்டுசென்று குளங்களிலும் ஏரிகளி லும் தேக்கினர்; சிறிய குட்டைகளையும் பெரிய குளங் களாக மாற்றினர். இங்ஙனம் அரசர் நாட்டின் விளைச் சலைப் பெருக்கத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய் தனர். சோழ நாட்டு ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது. **வேலி, மா** என்பன நில அளவைப் பெயர்கள்.

நீர்வளம் மிக்குள்ள வயல்கள் **நன்செய்** எனப் பட்டன. (செய்–வயல்). நீர்வளம் குறைந்த நிலங்கள்

**புன்செய்** எனப்பட்டன. நன்செய் நிலங்களில் நெல்லும் கரும்பும் மிகுதியாய்ப் பயிராயின. புன்செய் நிலங்களில் துவரை, சோளம், கேழ்வரகு முதலியன பயிராயின. தோட்டங்களில் மா, பலா, வாழை பயிராக்கப்பட்டன. மல்லிகை முல்லை முதலிய மலர்ச் செடிகளும் கொடிகளும் பயிராக்கப்பட்டன. வெற்றிலைக் கொடியும் பயிராக்கப் பட்டது.

## கைத்தொழில்கள்

தச்சுத் தொழில், கொல்லத் தொழில், மட்பாண்டத் தொழில், நெசவுத் தொழில் என்பவை இன்றுள்ளவாறே அன்றும் கிராமக் கைத்தொழில்களாய் இருந்தன. படைகளுக்கு வாள், வேல், ஈட்டி, தோட்டி முதலிய கருவிகள் தேவையாயினமையால் கொல்லத் தொழில் மிகவுயர்ந்த நிலையில் வளர்ச்சியுற்றது என்னலாம். அம்மி, குழவி, திரிகை என்பவை கல்தச்சர் தொழிலை நினைவூட்டு கின்றன. பாய் பின்னும் தொழில், தோல் தொழில், சலவைத் தொழில், உப்பு எடுக்கும் தொழில், மீன் பிடிக்கும் தொழில், விசிறி செய்யும் தொழில், நூல் நூற்கும் தொழில், தையல் தொழில், கப்பல் கட்டும் தொழில், சங்கு அறுக்கும் தொழில், அறுத்த சங்கை வளை முதலியனவாகக் கடையும் தொழில், மணிகளைத் துளையிடும் தொழில், மாலை கட்டும் தொழில், பலவகை உலோகங்களைக் கொண்டு பாத்திரங்கள் செய்யும் தொழில், வாசனைப் பொடிகளைத் தயாரிக்கும் தொழில் எனப் பலதிறப்பட்ட தொழில்கள் சங்க காலத்தில் வள முற்றிருந்தன.

அரசமாதேவியின் கட்டிலின் மேற்கூரையில் ஞாயிறு, திங்கள், உரோகிணி முதலியவற்றைக் குறிக்கும் **ஓவியங்கள்** வரையப்பட்டிருந்தன என்று நெடுநல்வாடை கூறுகின்றது. இதனால் ஓவியத் தொழிலும் நன்கு வளர்ந்திருந்ததை அறியலாம். போரில் இறந்துபட்ட

வீரர் உருவங்களைக் கல்லில் பொறித்து வழிபட்டனர் என்பதையும் கண்ணகியின் உருவம் கல்லில் பொறிக்கப் பட்டது என்பதையும் நோக்கச் சிற்பக்கலைத் தொழில் இருந்தமையை உணரலாம்.

## கடல் வாணிகம்

ஜெருசலேம் நாட்டில் கி. மு. பத்தாம் நூற்றுண்டில் சாலமன் என்பவர் புகழ்பெற்ற அரசராயிருந்தார். ஷீபா நாட்டு அரசி அவருக்கு மணப் பொருள்களையும் பொன் னையும் விலையுயர்ந்த இரத்தினம் முதலிய கற்களையும் கொண்டு சென்றுள். இராம் என்ற பொனீஷிய அரச னுடைய கப்பல்கள் சந்தன மரங்களையும் விலையுயர்ந்த மணிகளையும் அவனது நாட்டிற்குக் கொண்டுசென்றன. சாலமன் மன்னர் தந்தத்தால் செய்யப்பட்ட அரசு கட்டிலை வைத்திருந்தார். அதன்மீது பொற்றகடுகள் அடிக்கப்பட் டிருந்தன. மூன்றுண்டுகளுக்கு ஒருமுறை அவருடைய கப்பல்கள் பொன், வெள்ளி, தந்தம், மயில்கள் முதலிய வற்றை அவருக்குக் கொண்டுசென்றன. இவற்றுள் மயி லும் சந்தன மரங்களும் யானைகளும் தமிழகத்தைச் சேர்ந் தவை என்று திண்ணமாகக் கூறலாம். கி. மு. 6ஆம் நூற்றுண்டு வரையில் உயர்ந்த நாகரிகத்தில் விளங்கிய அசிரிய அரசும் பாபிலோனிய அரசும் தென்னிந்தியா வுடன் கடல் வாணிகம் செய்துவந்தன. துகி, அரிசி, அகில் என்னும் தமிழ்ச் சொற்கள் ஈபுரு மொழியில் காணப்படுகின்றமையே தமிழரது கடல் வாணிகத்திற்கு ஏற்ற சான்றுகும். இங்ஙனம் தமிழகம் மேற்கு நாடு களுடன் வாணிகம் செய்தாற்போலவே சீனத்துடனும் பிலிப்பைன் தீவுகளுடனும் கடல் வாணிகம் செய்து வந்தது. பிலிப்பைன் தீவுகளின் வடபகுதியில் தமிழ் நாட்டிற் கிடைத்த இரும்புக் காலப் பொருள்களைப் போன்றவை கிடைத்துள்ளன. அவை கிறிஸ்துப் பெரு மானுக்கு முற்பட்ட பத்து நூற்றுண்டுகட்கு உட்பட்ட

காலத்தனவாகும். இவை அனைத்தும் தமிழரது பண்டைக்காலக் கடல் வாணிகச் சிறப்பை நன்கு உணர்த்துவனவாகும்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதல் ஐந்து நூற்றுண்டுகளில் இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நடைபெற்ற வாணிகத்தில் கிரேக்கர் சிறந்த பங்கு கொண்டனர். அவர்கள் தமிழகத்திலிருந்து கொண்டுசென்ற பொருள்களுள் இஞ்சிவேர், பிப்பிலி, அரிசி, மிளகு என்பவை குறிப்பிடத்தக்கவை.

ரோம் நாட்டுப் பேரரசனை அகஸ்டஸ் காலத்தில் தமிழகத்திற்கும் ரோமப் பெருநாட்டிற்கும் சிறந்த முறையில் வாணிகம் நடைபெற்றது. கி. மு. 21இல் பாண்டியனிடமிருந்து வணிகர் தூதுக்குழு ஒன்று ரோம் நாட்டிற்குச் சென்று அகஸ்டஸை சந்தித்தது. சீனத்துப் பட்டும் பிற பொருள்களும் கடல் வழியாகச் சூயஸ் கால்வாய் வரையில் சென்றன. அவ்வாணிகத்தில் தமிழ் வணிகர் சிறந்த பங்கெடுத்தனர். தமிழர் பர்மா, மலேயா நாடுகளுடனும் கடல் வாணிகம் செய்தனர்.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட முதல் மூன்று நூற்றுண்டுகளிலும் தமிழகம் மேலை நாடுகளுடன் வாணிகம் செய்து வந்தது. சேரநாட்டு முசிரி முதலிய துறைமுகங்களிலிருந்து தந்தம், ஆமை ஓடுகள், மிளகு, மணப் பொருள்கள், அகில், சந்தனம் என்பவை ஏற்றுமதியாயின.

மதுரை உறையூர் என்னும் இரண்டு தலைநகரங்களிலும் முத்து வாணிகம் மிகுதியாக நடைபெற்றது. முத்துக்களும் யானைத் தந்தமும் மெல்லிய ஆடைகளும் மிளகும் இலவங்கம் முதலிய மணப் பொருள்களும் தமிழகத்திலிருந்து ரோம் நாட்டிற்கு அனுப்பப்பட்டன. இதனுல் ரோம் நாடு ஆண்டுதோறும் பல லட்சம் பவுன் தமிழகத்திற்குக் கொடுத்துவந்தது. ரோமாபுரி அரசிகளும் சீமாட்டிகளும் முத்துக்களுக்காகப் பெரும் பொருளைச் செலவழித்தனர். அதனுல் ரோம் நாட்டு அரசியல்

தலைவர்கள் அப் பெண்மணிகளை வன்மையாகக் கண்டித்தனர். இதனைக் கொண்டு முத்து வாணிகம் எந்த அளவு ரோமப் பெருநாட்டில் நடந்திருத்தல் வேண்டும் என்பதை நாம் நன்குணரலாம். தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுக்குப் பதிலாக ரோம் நாட்டிலிருந்து பொன் வெள்ளி நாணயங்களும் மது வகைகளும் இயந்திர வகைகளும் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டன.

கி. பி. முதல் நூற்றூண்டில் நடைபெற்ற கடல் வாணிகத்தைப் பற்றிப் **பிளைநியும், பெரிப்ளூஸ்** நூலாசிரியரும் மேலே கூறப்பெற்ற விவரங்களைக் குறித்துள்ளனர். கி. பி. 150இல் தமது குறிப்பு நூலை வரைந்த **தாலமி** என்பவர் சேர சோழ பாண்டியரைப் பற்றியும் ஆயர், கரையார், அருவாளரைப் பற்றியும் கருவூர், மதுரை, உறையூர், மாவிலங்கை, தொண்டி, முசிறி, கொட்டாரக்கரை, கோட்டயம், குமரி, கொற்கை, நாகப்பட்டினம், பொதுசா (புதுச்சேரி), சோபட்டினம், கோடிக்கரை, காவிரிப்பூம்பட்டினம் முதலிய ஊர்களைப்பற்றியும் தம்மவரிடம் கேள்வியுற்ற விவரங்களை எழுதியுள்ளார்.

மதுரையில் வையையாற்றுக் கரைப் பகுதியிலும் பிற இடங்களிலும் கணக்கற்ற ரோமப் பொன்–வெள்ளி–செப்பு நாணயங்கள் கிடைத்துள்ளன. இவை மதுரையில் யவனர் குடியிருப்பை உணர்த்துகின்றன. மதுரையில் யவனர் வணிகராயும் அரசர் மெய்காவலராயும் நகரக் காவலராயும் இருந்தனர் என்பதை நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களால் அறியலாம். இன்றுள்ள புதுச்சேரிக்கு அண்மையில் ரோமர் தொழிற்சாலை ஒன்று இருந்தமைக்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. சேரநாட்டுக் கடற்கரைப் பகுதியில் யவனர் குடியிருப்பும் அகஸ்டஸ் கோவிலும் இருந்தமைக்குரிய அடையாளங்கள் கண்டறியப்பட்டன. கி. பி. இரண்டாம் நூற்றூண்டில் வரையப்பட்ட கிரேக்க

பரிகாசக் கூத்து நூலில் கன்னட வாசகங்கள் இடம் பெற்றுள்ள ஒரு காட்சி வரையப்பட்டுள்ளது. அக்காட்சி தென்கன்னட மாவட்டத்து உடுப்பிக்கு அருகில் உள்ள மால்பே என்னும் இடத்திற்கு அண்மையில் நடைபெற்றதாக அந்நூல் கூறுகின்றது. இது, கிரேக்கர்க்கும் கன்னடர்க்கும் இருந்த வாணிகத் தொடர்புக்கு ஏற்ற சான்றாகும்.

வணிகர் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கப்பல்களைக் கட்டிக்கொண்டு கீழை நாடுகட்குச் சென்று வாணிகம் செய்தனர், வழியில் யாழ்ப்பாணத் தீவுகளை அறிந்திருந்தனர், பலநாட்டு மொழிகளையும் பேசக் கற்றிருந்தனர் என்னும் செய்திகள் சங்கநூல்களால் அறியப்படுகின்றன. உலகமே நகர்வதுபோலப் பெரிய கப்பல் ஒன்று கடலிற் சென்றது என்று புறநானூற்றுப் பாடல் ஒன்று குறித்துள்ளதைக்காண, பலநூறு மக்கள் பயணம் செய்யக் கூடிய பெரிய கப்பல்களும் அக்காலத்தில் இருந்தன என்பது பெறப்படும்.

## உள்நாட்டு வாணிகம்

தமிழ் வணிகர் எருதுகள்மீதும் கழுதைகள்மீதும் பண்டப்பொதிகளை ஏற்றிக்கொண்டு ஊர்ஊராகவும் நாடு நாடாகவும் சென்று வாணிகம் செய்தனர். உப்பு வாணிகர் தம் குடும்பத்துடன் வண்டிகளில் சென்று வாணிகம் செய்தனர். இந்த வாணிகத்தில் **பண்டமாற்றே** வழக்கில் நிலவியிருந்தது. குறிஞ்சி நிலத்துத் தேனும் கிழங்குகளும் கொடுத்து மீன் எண்ணெயும் கள்ளும் வாங்கப்பட்டன. மான் இறைச்சிக்கும் கள்ளுக்கும் பதிலாக அவலும் கரும்பும் வாங்கப்பட்டன. முசிரியில் மீன் கொடுத்து நெல் வாங்கப்பட்டது. வாணிகத்தில் பொருளீட்டும் பொருட்டு வடவேங்கடத்தைத் தாண்டித் தமிழ் வாணிகர் சென்றனர் என்று சங்க காலப் புலவர் பலர் தம் பாக்களில் குறித்துள்ளனர்.

வணிகர் கங்கையாற்றையும் கடந்து சென்று வாணிகம் செய்தனர். அங்ஙனம் சென்றுவந்த வணிகரால் அறியப்பெற்ற நந்தரது பெருஞ்செல்வம், பாடலிபுரம், சோணையாறு, கங்கையாறு பற்றிய விவரங்கள் சங்கப்பாக்கள் சிலவற்றில் காணப்படுகின்றன. இமயமலையில் எடுக்கப்பட்ட சந்தனக்கல் சங்ககாலத் தமிழர் வீடுகளில் சந்தனம் அரைக்கப் பயன்பட்டது. கங்கைச் சமவெளியில் விளைந்த பொருள்கள் தமிழகத்தில் விலையாயின. வேதகால ஆரியர்க்கு முத்துக்கள் தெரிந்திருந்தன. சங்குகள், முத்துக்கள், வைரங்கள், விலைமதிப்புள்ள பிற மணிகள், பொன்னால் செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவை தென்னாட்டிலிருந்து வந்தன என்று **சாணக்கியன்** தனது பொருள்நூலில் குறித்துள்ளான். யானைகள், குதிரைகள், தந்தம், விலங்குகளின் தோல்கள், மணப்பொருள்கள், பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவையும் தென்னாட்டில் இருந்து மௌரிய நாட்டிற்குக் கொண்டுசெல்லப்பட்டன. தென்னாட்டிலிருந்து வடநாட்டிற்குச் செல்ல நல்ல வாணிக வழி இருந்ததாக அவன் குறிப்பிட்டுள்ளான்.

கலிங்க நாட்டில் நெய்யப்பட்ட உயர்ந்த ஆடைகள் தமிழகத்தில் மிகுதியாய் விலையாயின. அவை **கலிங்கம்** என்னும் பெயராலேயே வழங்கப்பெற்றன. அவ்வாடைகள் சலவை செய்து கஞ்சியிடப்பட்டன. காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனைத் தோட்டத்தில் இருந்த அழகிய மண்டபம் மகத வினைஞராலும் மராட்டக் கம்மராலும் அவந்திக் கொல்லராலும் யவனத் தச்சராலும் தமிழ்நாட்டுத் தொழிலாளராலும் அமைக்கப்பட்டது என்று மணிமேகலை கூறியுள்ளது. தமிழரசர் அரண்மனைகளில் காலைநேரங்களில் அரசன் புகழைப்பாடிய **சூதரும் மாகதரும்** வடநாட்டினரேயாவர். இங்ஙனம் சங்ககாலத்தில் தமிழகம் வாணிகத்தாலும் பிற தொழில்களாலும் வட

4984—4

நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்னலாம்.

## வடநாட்டுத் தொடர்பு

சந்திர குப்த மௌரியனுக்கு முற்பட்ட **நந்தர்கள்** அலெக்சாண்டரது படையெடுப்பை அறிந்து தங்களிட மிருந்த அளவிடற்கரிய செல்வத்தை மிக்க பாதுகாப் போடு கங்கையாற்றுக்கடியில் புதைத்துவிட்டனர். இச் செய்தி தமிழ்ப்பாடல் ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது. நந்தர்க்குப் பின்வந்த சந்திரகுப்த மௌரியன் தனது ஆட்சி இறுதியில் அரசைத் துறந்து சமணமுனிவருடன் கங்கநாட்டிற் குடியேறினன் என்பது வரலாறு. அவன் மகனை **பிந்துசாரன்** கலிங்கம் ஒழிந்த தக்கணத்தை வென்றன்; பின்பு தமிழகத்தின்மீதும் படையெடுத்தான். ஆயின், அப்படையெடுப்புப் பயன் தரவில்லை. இம் மோரியர் படையெடுப்புப் பற்றிய பாடல்கள் பல சங்க நூல்களில் உள்ளன. வடஇந்தியப் பேரரசன் தமிழகத் தின்மீது படையெடுத்ததைக் கண்ட மூவேந்தர் தம்முள் ஒற்றுமையுற்றுப் பெரும்படையைத் திரட்டித் தமிழகத் தைக் காக்க முனைந்தனர். தமிழரசர் கூட்டணியைக் கி. மு. 176 முதல் 163 வரையில் கலிங்கப் பேரரசனு யிருந்த **காரவேலன்** என்பவன் அழித்தான். பாண்டி யன் அவனுக்கு முத்துக்களையும் யானைகளையும் பரிசாய் வழங்கினன்.

பிந்துசாரன் மகனை **அசோகன்** காலத்தில் பௌத்தமதம் இந்தியா முழுமையும் பரவியது. அவனது வேண்டுகோளால் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் பௌத்த சமயப்பிரசாரகர் விடப்பட்டனர். மக்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவ வசதி அளிக்க நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்விவரங்களை அசோகனே தன் கல் வெட்டுகளில் குறித்துள்ளான். கி. பி. முதல் நூற்றுண்டின் இறுதியில் சோழன் கரிகாலன் இமயம்

வரையிலும் சென்று, அம் மலைமீது தனது புலிப் பொறியைப் பொறித்தான். அப்பொழுது வட இந்தியாவில் சிற்றரசர் பலர் இருந்தனர். வச்சிர நாட்டு வேந்தன் கொற்றப்பந்தரையும் மகதநாட்டு மன்னன் பட்டி மண்டபத்தையும் அவந்தி நாட்டு அரசன் தோரண வாயிலையும் கரிகாலனுக்குக் கொடுத்து நண்பராயினர் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் கண்ணகியின் உருவம் பொறிக்கத்தகும் கல்லை இமயத்திலிருந்து கொண்டுவரச் **சேரன் செங்குட்டுவன்** பெரும் படையுடன் வடக்கு நோக்கிச் சென்முன். அவன் காலத்தில் வாழ்ந்த ஆந்திரப் பேரரசன், சேரன் கங்கை யாற்றைக் கடக்க உதவி செய்தான். கங்கைக்கு வடக்கில் உத்தர கோசலத்தில் ஆரிய அரசர் பலர் செங்குட்டுவனைத் தாக்கினர். அவன் அவர்களை முறியடித்தான்; அவர்தம் தலைவர்களான கனக விசயரைச் சிறை செய்து தமிழகத்திற்குக் கொண்டுவந்தான். இந் நிகழ்ச்சிக்கு முன்னரும் பின்னரும் தமிழகத்திற்கு வடபால் இருந்த ஆரியர் அடிக்கடி தமிழகத்தின்மீது படையெடுத்தனர்போலும்! அவர்களை வென்ற காரணத்தால் **நெடுஞ்செழியன்** '**ஆரியப்படை கடந்த**' என்ற அடைமொழியைப் பெற்றுன். சிற்றரசர் சிலரும் ஆரியரை வென்றதாகப் பாடல்கள் குறிக்கின்றன. **ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன்** என்ற ஒருவன் பாடிய தமிழ்ப்பாடல் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது. கபிலர் **ஆரிய அரசன் பிரகத்தன்** என்பவனுக்குத் தமிழ்ச் சுவையை ஊட்டக் குறிஞ்சிப் பாட்டைப் பாடினர். இந்த இரண்டு ஆரிய அரசர்களும் சங்ககாலத்தில் எங்கு இருந்தனர் - எங்ஙனம் தமிழைக் கற்றனர் என்பன தெரியவில்லை. இதுகாறும் கூறப்பெற்ற செய்திகள் அனைத்தும் சங்ககாலத் தமிழர்க்கும் வடநாட்டினர்க்கும் இருந்த அரசியல் தொடர்பை நன்கு உணர்த்துவனவாகும்.

## தமிழகமும் இலங்கையும்

தமிழகத்திற்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ முப்பது கல் தொலைவில் உள்ள பெருந்தீவு இலங்கையாகும். அதன் வடபகுதியில் யாழ்ப்பாண நாடு அமைந்துள்ளது. அந்நாட்டில் தமிழரே மிக்குள்ளனர். அந் நாட்டைச் சுற்றிலும் பல சிறிய தீவுகள் அமைந்துள்ளன. அவை தமிழ் நாட்டுக் கடல் வாணிகத்தோடு தொடர்பு கொண்டவை. கி. மு. ஆறு அல்லது ஐந்தாம் நூற்றுண்டில் விசயன் என்பவன் வட இந்தியாவில் இருந்து வந்து இலங்கை அரசனுய் முடி சூடிக் கொண்டான். அவன் மரபினர் தொடர்ந்து இலங்கையை ஆண்டுவந்தனர்.

கி. மு. 3 ஆம் நூற்றுண்டின் பிற்பாதியில் தமிழகக் குதிரை வாணிகர் இருவர் இலங்கையைக் கைப்பற்றி இருபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். அவர்களுக்குப் பின்பு கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் ஏழாரன் என்ற தமிழன் இலங்கையைக் கைப்பற்றி ஏறத்தாழ நாற்பத்து நான்கு ஆண்டுகள் அரசாண்டான். அவன் வரலாறும் மநுநீதிச் சோழன் வரலாறும் ஒன்ருகவே காணப்படுகின்றன. ஏறத்தாழக் கி. மு. 103 முதல் கி. மு. 89 வரையில் இலங்கையில் மீண்டும் தமிழர் ஆட்சி ஏற்பட்டது. பின்பு ஆண்ட சிங்கள அரசன் தமிழுதேவி என்ற தமிழரசன் மகளை மணந்து கொண்டான். அவன் மகனும் ஒரு தமிழரசன் மகளையே மணந்தான்.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வங்கநாசிக திஸ்ஸன் காலத்தில் சோழ மன்னன் ஒருவன் இலங்கைமீது படையெடுத்துப் பன்னீராயிரம் சிங்கள வரைச் சிறைசெய்து சோணுட்டுக்குக் கொண்டுசென்ருன்; அவர்களைக் கொண்டு காவிரிக்குக் கரையிடுவித்தான். (காவிரிக்குக் கரையிடுவித்தவன் சோழன் கரிகாலனே என்பது கல்வெட்டுகள் கூறும் செய்தியாகும்). வங்க

நாசிகதிஸ்ஸன் மகனை **முதலாம் கயவாகு** மன்னன் (கி. பி. 114 - 136) சோழ நாட்டின்மீது படையெடுத்துச் சென்று பன்னீராயிரம் தமிழரைச் சிறைசெய்து இலங்கைக்குக் கொண்டுவந்தான். அவனே பத்தினி வணக்கத்தை இலங்கைக்குக் கொண்டுவந்தான் என்று இலங்கைக் கதைகளும் நாட்டுப்பாடல்களும் தெரிவிக்கின்றன.

**ஹிப்பலாஸ்** என்பவன் பருவக்காற்றுகளின் துணையைக் கொண்டு செங்கடலிலிருந்து கடல் வழியாக இந்தியாவிற்குக் கப்பல்களை எளிதில் செலுத்தலாம் என்று கி. பி. முதல் நூற்றாண்டில் கண்டறிந்தான். அது முதல் மேல் நாடுகளுக்கும் இலங்கைக்கும் நேரான கடல் வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. அதற்கு முன்பு இலங்கைப் பொருள்கள் தமிழகத்துத் துறைமுக நகரங்களிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. தமிழ் வணிகர் இலங்கையிலிருந்து விலையுயர்ந்த மணிகளையும் ஆமை ஓடுகளையும் மெல்லிய ஆடைகளையும் வாங்கி அயல் நாடுகளுக்கு அனுப்பிவந்தனர். இவ்வாறு சங்க காலத்தில் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் அரசியல் உறவும் வாணிக உறவும் இருந்தமையோடு கலை உறவும் இருந்துவந்தது. **ஈழத்துப் பூதன் தேவனார்** என்ற புலவர் சங்ககாலப் புலவருள் ஒருவராய் விளங்கினார். அவருடைய பாக்கள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்னும் மூன்று தொகைநூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

## மக்கள் வாழ்க்கை

தொல்காப்பியத்தில் அந்தணர், வணிகர், வேளாளர், அரசர் என நான்கு வகையினர் குறிக்கப்பட்டுள்ளனர். கல்வி, கேள்வி, ஒழுக்கம், அருளுணர்ச்சி உடைய பெருமக்கள் அந்தணர் எனப்பட்டனர். கபிலர் போன்ற பிராமணரும் அந்தணர் எனப்பட்டனர். அந்தணருட்

சிலர் அரசர்க்கு அறிவுரை கூறும் சான்றோராய் விளங்கினர் என்னலாம். அரசு செலுத்தியவன் **அரசன்.** அவன் மரபினர் அரச மரபினர் எனப்பட்டனர். வாணிகம் செய்தவன் **வாணிகன்** எனப்பட்டான். வெள்ளத்தை அடக்கிப் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தியவன் **வெள்ளாளன்** (வெள்ளத்தை ஆள்பவன்) எனப் பெயர் பெற்றான். 'பாண்' என்பது பாட்டைக் குறிக்கும். பாடகன் அல்லது இசைப்புலவன் **பாணன்** எனப் பட்டான். துடி என்னும் இசைக் கருவியை இசைத்துப் பாடினவன் **துடியன்** எனப் பெயர் பெற்றான். குழல் வாசித்தவன் **குழலன்** எனப்பட்டான். பறை என்னும் சொல் அறிவி என்னும் பொருளைத்தரும். அரசாங்க ஆணைகளைக் குடிமக்கட்குப் பறையறைந்து தெரிவிப்பவன் **பறையன்** எனப்பட்டான். வயல்கள் பள்ளத்தில் அமைந்திருக்கும். அப்பள்ள நிலத்தில் வேலை செய்த மக்கள் **பள்ளர்** எனப்பட்டனர். மறம் என்பது வீரம் எனப்பொருள்படும். மறத்தை உடையவன் (வீரன்) மறவன் எனப்பட்டான்.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்களில் இடையில் இருப்பது முல்லை நிலம். அங்கு ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டு வாழ்ந்த மக்கள் முல்லை நிலத்தார் என்றும், இடை நிலத்தார் என்றும், **இடையர்** என்றும் பெயர் பெற்றனர். குன்று என்பது சிறு மலையைக் குறிக்கும். அங்கு வாழ்ந்தவர் குன்றவர் எனப்பட்டனர். அவரே காலப் போக்கில் **குறவர்** என்றழைக்கப்பட்டனர். உழவு செய்தவன் உழவன் எனப்பட்டான். வண்ணம் என்னும் சொல் அழகைக் குறிக்கும். அழுக்கு ஆடைகளை அழுக்குப் போக்கி வண்ணம் செய்பவன் **வண்ணத்தான்** எனப் பெயர்பெற்றான். அப்பெயர் காலப் போக்கில் வண்ணான் என மருவி வழங்கலாயிற்று. வண்ணத்தான் என்னும் சொல்வழக்குச் சேரநாட்டில் இன்றும்

உள்ளது. கடற்கரையில் ஊர்களை அமைத்துக்கொண்டு மீன் பிடித்து வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் **கரையாளர்** எனப்பட்டனர். பரவை என்பது கடலைக் குறிப்பது. **பரவர்** என்னும் சொல் கடலில் சென்று மீன் பிடிப்பவரைக் குறிப்பது. கடலில் முக்கி (மூழ்கி)த் தொழில் செய்தவன் (முத்துக்களையும் சங்குகளையும் எடுத்தவன்) **முக்குவன்** எனப் பெயர்பெற்றான். இப் பெயருடையவர் இன்றும்சேர நாட்டில் உள்ளனர். மலையில் வாழ்ந்தவன் **மலையன்** என்றழைக்கப்பட்டான். காட்டில் வாழ்ந்தவன் **காடன்** எனப்பட்டான். ஊரில் வாழ்ந்தவன் **ஊரன்** என்று பெயர் பெற்றான். ஊரை ஆண்டவன் **ஊராளி** எனப்பட்டான். படைத்தலைவன் **நாயன்** எனவும், **நாயகன்** எனவும் பெயர் பெற்றான். ஆடை வகைகளுள் தேவாங்கு என்பது ஒருவகை ஆடை. அதனை நெய்தவர் **தேவாங்கர்** எனப்பட்டனர். செக்கு ஆட்டி எண்ணெய் எடுத்தவன் **செக்கான்** எனப்பட்டான். வேட்டையாடும் தொழிலில் ஈடுபட்டவன் **வேட்டுவன்** எனப்பட்டான். இராசிகளைக் கணித்துச் சோதிடம் சொன்னவன் **கணி** என்றும் **கணியன்** என்றும் பெயர் பெற்றான். வேல் ஏந்தி வெறிக்கூத்து ஆடியவன் **வேலன்** என்றழைக்கப்பட்டான். செருப்புத் தைத்தவன் **செருமான்** எனப்பட்டான்.

சங்ககாலப் புலவர் ஐந்நூற்றுவர்க்கு மேற்பட்டவராவர். ஆயினும், அவர்கள் பெயர்கட்குப் பின் ஐயர், ஐயங்கார், பிள்ளை, முதலியார் என்னும் இக்காலப் பட்டங்கள் இல்லாதிருத்தல் கவனிக்கத்தகும். இக்காலச் சாதிகள் அக்காலத்தில் இல்லை. அக்காலப் பெயர்கள் பண்பு பற்றியும் இடம் பற்றியும் தொழில் பற்றியுமே உண்டானவை. அப்பெயர்கள் காலப் போக்கில் சாதிப் பெயர்களாய் மாறிவிட்டன.

## இல்லங்கள்

அரசனது அரண்மனை மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கொண்டிருந்தது. செல்வர் மாளிகைகள் சுண்ணும்பும் செங்கல்லும் கொண்டு கட்டப்பட்டவை. அவ்வளமனைகளின் சுவர்களில் தெய்வங்களின் உருவங் களும் விலங்குகளின் உருவங்களும் ஓவியங்களாக வரை யப்பட்டிருந்தன. அரண்மனையும் வளமனையும் எங் ஙனம் கட்டப்பட வேண்டும் என்பதை விளக்கும் மனை நூல் வழக்கில் இருந்தது. பாண்டியன் அரண்மனை, அரசியின் பள்ளியறை, அங்கிருந்த தந்தக்கட்டில் பற்றிய வருணனை நெடுநல்வாடையில் விளக்கமாகத் தரப்பட் டுள்ளன. எளிய மக்கள் ஓட்டு வீடுகளிலும் தென்னை ஓலை, வைக்கோல், ஊகம்புல் முதலியவற்ருல் வேயப்பெற்ற கூரை வீடுகளிலும் வாழ்ந்தனர்.

## உடை

மன்னர் குடும்பத்தாரும் செல்வந்தரும் கலிங்கம், துகில் எனப் பெயர்பெற்ற உயர்ந்த பருத்தி ஆடைகளை யும் பட்டாடைகளையும் உடுத்தனர். பிறர் எளிய பருத்தி ஆடைகளை அணிந்தனர். ஆடைகளில் பல வகைக் கரைகள் இடப்பெற்றிருந்தன. அரசியல் அலுவலர் சட்டை அணிந்திருந்தனர். மன்னரும் செல் வரும் மேலாடைகளை அணிந்திருந்தனர். வீரர்கள் இடையில் கச்சை அணிந்திருந்தனர். மேனிலைப் பெண்டிர் 'மார்பில் கச்சினைக் கட்டியிருந்தனர். குற மகளிர் தழைகளையும் பூங்கொத்துகளையும் கொண்டு செய்யப்பட்ட தழை உடைகளை அணிந்திருந்தனர். மரப்பட்டை உடையும் வழக்கிலிருந்தது. விலங்கு களின் . தோல்களும் ஆடைகளாகப் பயன்படுத்தப் பட்டன.

## உணவு

சங்ககாலத் தமிழர் வீமன் எழுதிய சமையல் நூலை நன்கறிந்திருந்தனர். அந்நூலில் வல்ல சமையற்காரன் நல்லியக்கோடன் அரண்மனையில் இருந்தான் என்று, அவன் சமைத்த உணவுப் பொருள்களை உண்ட சிறு பாணன் செப்பியுள்ளான்.

குறிஞ்சி நில மக்கள் தேனையும் கிழங்கு வகைகளை யும் விலங்கு பறவைகளின் இறைச்சியையும் தினை முதலிய தானியங்களையும் உண்டனர்; பலாக் கொட்டை மா, புளிநீர், மோர் ஆகிய மூன்றையும் கொண்டு தயாரித்த குழம்பையும் அரிசிச் சோற்றையும் பயன் படுத்தினர். பாலை நில மக்கள் புல்லரிசியையும், ஈச்சங் கொட்டை போன்ற நெல்லரிசிச் சோற்றையும், புளிங்கறி இடப்பட்ட சோற்றையும், ஆமா, உடும்பு போன்ற விலங்குகளின் இறைச்சியையும் உண்டனர். முல்லை நில மக்கள் தினையரிசி, வரகரிசி, மூங்கிலரிசி, நெல்லரிசி, பால், தயிர், மோர், அவரைப் பருப்பு, வெள்ளாட்டு இறைச்சி முதலியவற்றை உண்டனர். மருத நிலத்தார் வெண்ணெல் சோற்றையும் செந்நெல் சோற்றையும் பல வகைக் காய்கறிகளையும் மான், கோழி முதலியவற்றின் இறைச்சியையும் உண்டனர். நெய்தல் நிலத்தார் மீன் களை விற்றுப் பிற நிலங்களில் கிடைத்த உணவுப் பண்டங்களையும் மீன், இறால், நண்டு முதலியவற்றையும் உண்டனர். வேதியர், பாற்சோறு, பருப்புச்சோறு, மாவடு ஊறுகாய் முதலியவற்றை உண்டனர்.

அரண்மனைகளில் பல வகைத் தின்பண்டங்கள் செய்யப்பட்டன. பலவகை இறைச்சித் துண்டங்கள் சுவைபெறச் சமைக்கப்பட்டன. முல்லை அரும்பை ஒத்த நெற்சோறு சமைக்கப்பட்டது. உணவுப் பொருள் கள் வெள்ளிப் பாத்திரங்களிலும் பொன் பாத்திரங்களி லும் வைத்து உண்ணப்பட்டன. மதுரை போன்ற பெரிய நகரங்களில் சிற்றுண்டிக் கடைகள் இருந்தன.

அவற்றில் வெல்லப்பாகில் சமைத்த தேனிருலேப் போன்ற மெல்லிய அடைகளும், பருப்பையும் தேங்காயையும் உள்ளீடாகக் கொண்டு சருக்கரை கூட்டிப்பிடித்த அப்ப வகைகளும் விற்கப்பட்டன.

சங்ககாலத் தமிழகத்தில் பலவகைக் குடிகள் வழக்கிலிருந்தன. பூந்தேனைக் கொண்டு ஒருவகைக் குடி செய்யப்பட்டது. வேறுவகைத்தேனைக் கொண்டு குடி தயாரிக்கப்பட்டது. பதனீர் வழக்கில் இருந்தது. அரிசியைக்கொண்டு தயாரிக்கப்பட்ட கள்ளும், தென்னங் கள்ளும், பனங்கள்ளும் வழக்கில் இருந்தன. தொண்டை நாட்டு வலையர் கள்ளை எங்ஙனம் தயாரித்தனர் என் பதைப் பெரும்பாணாற்றுப்படை விளக்கியுள்ளது. இக் குடி வகைகளோடு ரோம் நாட்டிலிருந்து வந்த குடிவகை களும் வழக்கில் இருந்தன. அக்காலக் குடிவகைகள் மட்டு, மது, நறவு, தேறல், கள் எனப் பல பெயர்களைப் பெற்றிருந்தன. அரசர் முதல் ஆண்டி ஈருக அனை வருமே இக்குடிவகைகளை உவப்போடு பருகிவந்தனர்.

## அணிகள்

சங்க காலத்தில் பலவகை அணிகள் வழக்கிலிருந் தன. அரசன் முடி, விலையுயர்ந்த மணிகள் பதிக்கப் பெற்றது. உயர்குடிப் பெண்கள் சீதேவி என்னும் அணியைத் தலையில் அணிந்தனர். பலவகைக் காதணி கள் அணியப்பட்டன. தொடி என்னும் அணி கைகளை அழகு செய்தது. கடகம் என்பதும் கை அணியாகும். 'கைவந்தி' என்னும் அணியே இக்காலத்தில் 'வங்கி' எனப்படுகிறது. சங்கு வளைகளும் பொன் வளைகளும் வழக்கிலிருந்தன. பொன் மோதிரங்களும், மணிகள் பதிக்கப் பெற்ற மோதிரங்களும், முடக்கு என்னும் மோதிரமும் விரல்களை அலங்கரித்தன. பெண்களின் இடையில் பல மணிகள் கோக்கப் பெற்ற ஏழு வட மாகிய மேகலை அழகு செய்தது. அத்துடன் பருமன்,

விரிசிகை, காஞ்சி என்னும் இடையணிகளும் வழக்கி லிருந்தன. கிண்கிணி, பொற்சிலம்பு, பொற்காப்பு, பொன்கொலுசு முதலிய காலணிகளும் அணியப் பெற் றன. முத்துமாலை, பொன்னரி மாலை, காசு மாலை, சரப்பளி முதலிய கழுத்தணிகள் வழக்கில் இருந்தன. இழைத்துச் செய்யப்பட்ட நகைகள் இழை எனப்பட்டன. குழந்தைகளின் நலத்தைக்கருதி அவர்கள் கழுத்தில் ஐம்படைத்தாலி அணியப்பட்டது. மன்னர்கள், பாணர்க் குப் பொற்பூவையும் விறலிக்குப் பொன்னரி மாலையையும் பரிசளித்தனர். செல்வச்சிறுமியர் பொன்னால் செய்யப் பட்ட கழங்குகளை வைத்து விளையாடினர். பொன்னை உரைத்து மாற்றுக்காணப் பயன்பட்ட கல் ‘கட்டளைக்கல்’ எனப்பட்டது.

வைரம், முத்து, மரகதம், மாணிக்கம், நீலம், புட்ப ராகம், வைடூரியம், கோமேதகம், பவழம் என்னும் ஒன்பதுவகை மணிகளும் மதுரைக் கடைத்தெருவில் இருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. இவை அனைத்தையும் நோக்க, சங்ககால மக்கள் நவரத்தினங் களையும் பொன்னையும் வெள்ளியையும் சங்குகளையும் நன்கு பயன்படுத்திப் பலவகை அணிகளைச் செய்து அணிந்து மகிழ்ந்தனர் என்பது தெரிகின்றது.

## மணப்பொருள்கள்

மணத்தைத் தரும் பொருள்களுள் மலர்கள் தலைசிறந் தவை. குறிஞ்சி நிலமாகிய மலைநாட்டில் மலர்களுக்குப் பஞ்சமில்லை. கபிலர் தொண்ணூற்றுக்கு மேற்பட்ட மலர் களின் பெயர்களைக் குறிஞ்சிப்பாட்டில் கூறியுள்ளார். குறமகளிர் இம்மலர்களின் புற இதழ்களை நீக்கிவிட்டு மலர்களையும் இளந்தளிர்களையும் நெருக்கமாக வைத்துத் தழையுடைகளைத் தயாரித்து அணிந்துகொண்டனர்; பலநிற மலர்களைத் தொடுத்து மாலைகளாய் அணிந்து இன்புற்றனர். உயர்குடிப் பெண்மணிகள் நறுமண

மலர் மாலைகளைத் தம் கூந்தலில் அணிந்தனர். அக்கால ஆடவரும் பெண்டிரும் மாலைகளை மகிழ்ச்சியோடு அணிந்துவந்தனர். தலைமாலை 'கண்ணி' எனவும், மார்பு மாலை 'தார்' எனவும் பெயர் பெற்றன. 'மாலை' என்பது பொதுப் பெயர். மதுரையில் நவமணிகள், பொன், சந்தனம், கருப்பூரம் முதலியவற்றைப் புழுகிலும் பனிநீரிலும் நனையவைத்து இடித்துச் சுண்ணம் தயாரிக்கப்பட்டது. செல்வமகளிர் தம் கூந்தலில் நறிய மலர்ச் சாந்தைப் பூசினர்; கஸ்தூரியை அரைத்தும் சந்தனத்தை அரைத்தும் பயன்படுத்தினர்; அகிற் புகை ஊட்டப்பெற்ற ஆடைகளையே அணிந்தனர்; கஸ்தூரி முதலிய மணப்பொருள்கள் அம்மியில் வைத்து அரைக்கப்பட்டன. அகிலின் நெய் கூந்தலுக்குப் பூசப்பட்டது. இத்தகைய மணப்பொருள்கள் சங்ககாலத்தில் பயன்பட்டன.

## விளையாட்டுகள்

சிறு பெண்கள் மணலில் உருவங்களை அமைத்து விளையாடினர்; பூந்தாதினைக் கொண்டு பாவை செய்து விளையாடினர். பலவகைக் கோரைகளைக் கொண்டு பாவை செய்து விளையாடினர். நெய்தல் நிலப் பெண்கள் மணல் வீடு கட்டியும் உப்பங்கழிகளுக்கு அருகில் மலர்ந்த மலர்களைப் பறித்தும் கடல் நீரில் குதித்தும் விளையாடினர். பாலைநிலச் சிறுவர் கட்டளைக்கல் போன்ற அரங்கைத் தரையில் கீறி நெல்லிக்காயை வட்டாகக் கொண்டு பாண்டில் ஆடினர். மகளிர் பனை நாரினால் திரித்த கயிற்றை மரக்கிளைகளில் பிணைத்துத் தொங்கவிட்ட ஊசலில் அமர்ந்து ஆடினர்; சிறுமியர் சிற்றில் கட்டி விளையாடினர்; வரிப்பந்து ஆடினர்; மரப்பாவையும் மரப்பானையும் வைத்து விளையாடினர். முல்லைநிலச் சிறுமியர் முல்லைக்கொடி படர்ந்த தோட்டத்தில் பலவகை மலர்களைக் கொண்டு தழையும் பாவையும் செய்து விளை

யாடினர். நெய்தல்நிலச் சிறுமிகள் சுருமீன் கொம்பால் செய்த பலகையைத் தாழையின் விழுதால் திரித்த கயிற்றில் கோத்து ஊசலாடினர். செல்வ மகளிர் வரிப்பந்துகளை வைத்து விளையாடினர்; சிறு தேர் உருட்டி விளையாடினர். செல்வமகளிர் தம் வளமனையின் மேல் மாடத்தில் பந்தடித்து விளையாடினர்.

வீரர்கள் போர்ப்பயிற்சி கொண்ட யானையைத் தம்மைத் தொடர்ந்து வந்து பிடிக்கும்படி ஓட்டம் காட்டினர்; அது தம்மைப் பின் தொடர்ந்தபோது அதன் போக்கைத் தடுக்க நெருஞ்சி முள் போன்ற இருப்பு ஆணிகளைத் தரையில் சிதறவிட்டனர். யானை அவற்றை மிதிக்க அஞ்சி நின்றுவிட்டது. இது ஒருவகை விளையாட்டு. மீனவர் தம் ஓய்வு நேரங்களில் ஆட்டுக்கிடாய்ப் போரையும் கவுதாரிப் போரையும் கண்டு களித்தனர்; ஆடியும் பாடியும் பொழுதைக் கழித்தனர்; மணல் முற்றத்தில் சுறவின் கொம்பை நட்டுப் பலவகை மலர்மாலைகளைச் சூட்டிப் பனங்கள்ளையும் நெற்கள்ளையும் உண்டு விளையாடினர்; கடல்நீரில் குதித்து விளையாடினர். உடம்பிற் படிந்த உப்புப் போகும்படி நன்னீரில் ஆடினர்; நண்டுகளைப் பிடித்து ஆட்டினர். செல்வமக்கள் இளவேனிற் காலத்தில் மரங்கள் அடர்ந்த சோலைக்குச் சென்றனர்; பலவகைப் பானங்களை அருந்தினர்; ஆடியும் பாடியும் களித்தனர்; அங்கு இருந்த நீர்த்துறையில் படிந்து ஆடினர்.

## வடவர் செல்வாக்கு

வடமொழியாளர் தமிழகம் புகுந்த காலம் ஏறத்தாழக் கி. மு. எட்டாம் நூற்றுண்டாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் அறைகின்றனர். அவர்கள் தமிழகத்தில் தங்கள் வேதங்களின் கருத்துக்களைப் பரப்பினர்; வேத வேள்விகளைச் செய்தனர். அவர்களது தெய்வபக்தியைக் கண்டு பாராட்டிய தமிழரசர் அவர்களுக்கென்று பல

புதிய ஊர்களை அமைத்தனர்; அவர்கள் குறைவின்றி வாழ வசதி செய்தனர்; அவருட் சிலரைத் தம் புரோகித ராகவும் பிற உயர் அலுவலராகவும் அமர்த்தினர்.

இங்ஙனம் தமிழர் சமுதாயத்தில் வேதியர் செல்வாக் குப் பெற்றமையால், தமிழ்நாட்டுச் சமயத்துறையில் புதிய வழிபாடுகள் நுழைந்தன. வடநாட்டுத் தெய்வங் கள் சில இந் நாட்டில் வழிபாடு பெறலாயின. முல்லை நிலக்கடவுளாகிய மாயோனுக்கு விஷ்ணுவின் அம்சங்கள் ஏற்றப்பட்டன. சிவன் 'உருத்திரன் ஆக்கப்பட்டான். இந்திர வணக்கம் தோன்றியது. பாலைநிலத் தேவதை யான கொற்றவை துர்க்கையாக மாற்றப்பட்டாள். குறிஞ்சி நிலக் கடவுளான முருகப்பெருமான் ஆறு தலைகளைக் கொண்ட கடவுளாக மாற்றப்பட்டான். இங் ஙனம் சமயத்துறையில் உண்டான மாறுதல்கள் பலவா கும். பழந்தமிழர் சமயங்களான சிவநெறியும் மால்நெறி யும் வேத நெறியால் தழுவப்பட்டுச் சைவ வைஷ்ணவங் களாக மாறின. இந்திரவிழா மிகப்பெரிய அரசியல் விழா வாகக் கொண்டாடும் நிலைமை ஏற்பட்டது. கொற்றவை பார்வதியின் அம்சமாகக் கருதப்பட்டாள். பல வீரச் செயல்கள் அவள்மீது ஏற்றிக் கூறப்பெற்றன.

தமிழகச் சமய வாழ்வில் சிறந்த பங்குகொண்ட வேதியரால் வழங்கப்பெற்ற **வடசொற்கள்** காலப்போக் கில் சங்ககாலத் தமிழரிடையே பரவலாயின. அவை நீக்கமுடியாத நிலைமையை அடைந்துவிட்டன. ஆதலால் கி. மு. நான்காம் நூற்றுண்டில் வாழ்ந்த தொல்காப்பியர் வடசொற்களை எங்ஙனம் தமிழில் ஆளவேண்டும், பிரா கிருதச் சொற்களை எங்ஙனம் ஆளவேண்டும் என்று இரண்டு நூற்பாக்களில் குறித்துள்ளார். அவர், தம் இலக்கண நூலில் வடநூல்கள் கூறும் எண்வகை மணங் களையும் கூறியுள்ளார்.

சங்ககாலப் புலவருள் காசிபன், கபிலன், உலோச் சன், தேவன், நிகண்டன், கௌசிகன், தத்தன், பராயன்,

பிரமசாரி எனப்பெயர் தாங்கிய வடமொழியாளர் இருந்தனர் என்பதைச் சங்கப்பாக்கள் தெரிவிக்கின்றன. ஆயின் இவரனைவரும் பைந்தமிழைப் பாங்குறக் கற்றுச் சிறந்த தமிழ்ப்புலவராய் விளங்கினர்; தமிழ் நாட்டையே தம் தாய்நாடாகக் கருதித் தமிழரோடு ஒன்றுபட்டு வாழ்ந்தனர். மறையவர் கூட்டுறவால் தமிழரசர் வேதவிதிப்படி வேள்விகள் செய்தனர் என்பது பதிற்றுப் பத்தாலும் புறநானூற்றாலும் சிலப்பதிகாரத்தாலும் நன்கறியலாம். சோழன் ஒருவன் இராஜசூய யாகம் செய்து 'இராயசூயம் வேட்ட' என்னும் அடைமொழியைப் பெற்றான். ஒரு பாண்டியன் பல்யாகசாலைகளை அமைத்து. 'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' எனப் பெயர் பெற்றான்.

வடவர் சேர்க்கையால் அசுரர், அஞ்சனம், அந்தி, அமிழ்தம், ஆகுதி, ஈமம், கரகம், கலாபம், குமரி, கௌரியர், சடை, சாபம், சாமரம், சிகரம், சித்திரம், தருப்பை, நேமி, பிண்டம், பூதம், மாயம், முண்டகம், யூபம் போன்ற சில வடசொற்கள் சங்கப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறே இருக்குவேதம் முதலிய வேதங்களில் சில திராவிடச் சொற்களும் வேற்றுமொழிச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. பல மொழியாளர் சமுதாயத்தில் கலந்து பழகும்பொழுது ஒருவர் சொற்கள் மற்றவர் மொழியில் இடம்பெறுதல் இயல்பேயாகும். இப்பொழுது பல ஆங்கிலச் சொற்கள் நமது பேச்சு வழக்கில் இடம் பெற்றாற் போலவே சங்ககாலத் தமிழர் முன்னர் அறியாத பலபொருள்களைப் பற்றிய சொற்களும் செயல்களைப்பற்றிய சொற்களும் பிறமொழிச் சொற்களாகத் தமிழில் இடம் பெற்றன.

## சமயம்

வீரர் (நடுகல்) வணக்கமும் முருகவணக்கமும் சிவ வணக்கமும் மால் வணக்கமும் கொற்றவை வணக்கமும்

தமிழர்க்கு உரியவை. வடவர் கூட்டுறவால் முன்பு கூறப்பெற்ற வணக்கங்களும் சேர்ந்தன. புத்தர் வணக்கமும் அருகர் வணக்கமும் பின்பு வந்தன. சங்ககாலத் தமிழகத்தின் பிற்பாதியில் (ஏறத்தாழக் கி.மு. 300—கி. பி. 300) இவ்வணக்கங்கள் யாவும் தமிழகத்தில் இடம் பெற்றன என்னலாம்.

வேங்கடமும் அரங்கமும் வெஃகாவும் திருமாலுக்குரிய சிறந்த இடங்களாகக் கருதப்பட்டன. பரங்குன்றம், அலவாய் முதலியன முருகனுக்குரிய இடங்களாக எண்ணப்பட்டன. மதுரை, வஞ்சி, காவிரிப்பூம் பட்டினம், உறையூர் போன்ற பெரிய நகரங்களில் சமணப் பள்ளியும் பௌத்தர் பள்ளியும் முனிவர் மடங்களும் நிலவின. நகரமக்கள் தத்தம் விருப்பத்துக்கேற்ப இம்மதங்களைத் தழுவினர். பெரிய நகரங்களில் சிவன் கோவில், பெருமாள் கோவில், முருகன் கோவில், பலராமன் கோவில் முதலிய பல கோவில்கள் இருந்தன. அதே சமயத்தில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் பழைய தமிழர் வழிபாடே நிலைபெற்றிருந்தது.

சமண முனிவரும் பௌத்த துறவிகளும் மலைக் குகைகளிலும் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த குகைகளில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்களின் காலம் கி. மு. மூன்றும் நூற்றுண்டாகும். சங்கத்தின் இறுதிக்காலம் கி. பி. 300 என்னலாம்.

# 3. பல்லவர் காலம்

(கி. பி. 300—900)

## பல்லவர் ஆட்சி

தமிழகத்திற்கு வடபால் கங்கைவரையில் பரவியிருந்த ஆந்திரப்பேரரசு கி. பி. 3ஆம் நூற்றுண்டின் இறுதியில் வலியிழந்தது. அப்பேரரசின் மாகாணத் தலைவராயிருந்தவர் தாம் தாம் ஆண்டுவந்த மாகாணத்திற்குத் தாமே அரசராயினர். ஆந்திரப் பேரரசின் தென் பகுதியை ஆண்டுவந்தவர் பல்லவர் என்பவர்.

அப் பல்லவர் தமது நாட்டை விரிவாக்க எண்ணித் தொண்டை நாட்டின்மீது படையெடுத்தனர். அப்பொழுது வேங்கடமலைப் பகுதியில் இருந்த **களவர்** (களப்பிரர்) தெற்கு நோக்கி வந்து சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் கைப்பற்றினர் ; பல்லவர் தொண்டை நாட்டைக் கைப்பற்றினர் ; காஞ்சியைத் தலைநகராய்க் கொண்டு தமக்குரிய வடபகுதியை ஆளலாயினர். பல்லவர் காஞ்சியைக் கைப்பற்றிய காலம் ஏறத்தாழக் கி. பி. 300 என்னலாம். ஆயினும் அவர்கள் ஏறக்குறையக் கி. பி. 575 வரையில் காஞ்சியில் நிலையாக இருந்து ஆளமுடியவில்லை. வாழையடி வாழையாகத் தமிழகத்தில் ஆண்டுவந்த சோழரும் பாண்டியரும் சேரரும் அவர்களை எதிர்த்தனர். கி. பி. 5 ஆம் நூற்றுண்டில் கோச்செங்கணுன் அவர்களை எதிர்த்துப் போரிட்டான்.

## சிம்ம விஷ்ணு

ஏறத்தாழக் கி. பி. 575 இல் **சிம்ம விஷ்ணு** என்ற பல்லவன் காஞ்சியில் தங்கித் தொடர்ந்து ஆளத்தொடங்கினுன். அவன் காவிரிவரையில் தனது ஆட்சியைச்

செலுத்தினன். ஏறக்குறைய அதே காலத்தில் **கடுங்கோன்** என்ற பாண்டிய மன்னன் களப்பிரரை விரட்டிப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினன். அக்காலத்தில் தட்சிணப்பீடபூமியில் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு சாளுக்கியர் ஆண்டு வரலாயினர். அவருள் வலிமை மிக்கவன் **இரண்டாம் புலிகேசி** என்பவன். அவன் தக்கணம் முழுவதையும் வென்ருன் ; கோதாவிரிக்கும் கிருஷ்ணைக்கும் இடைப்பட்ட **வேங்கி** நாட்டில் தன் தம்பியான விஷ்ணுவர்த்தனனை அரசனுக்கினன். விஷ்ணுவர்த்தனனும் அவன் மரபினரும் **கீழைச் சாளுக்கியர்** எனப்பட்டனர். புலிகேசியும் அவன் மரபினரும் **மேலைச் சாளுக்கியர்** எனப் பெயர் பெற்றனர்.

## பல்லவர் - சாளுக்கியர் போர்கள்

சிம்ம விஷ்ணுவின் மகனுன முதலாம் **மகேந்திர வர்மன்** (கி. பி. 600—630) காஞ்சியை ஆண்ட காலத்தில் இரண்டாம் புலிகேசி பல்லவநாட்டின்மீது படையெடுத்தான் ; பல்லவநாட்டின் வடமாகாணத்தைக் கைப்பற்றிக் கொண்டான் ; மகேந்திரவர்மன் மகனுன முதலாம் **நரசிம்மவர்மன்** காலத்தில் (கி. பி. 630—668) மீண்டும் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். நரசிம்மவர்மன் மணிமங்கலம் முதலிய பல ஊர்களில் நடைபெற்ற போர்களில் புலிகேசியை முறியடித்தான் ; பின்பு அவனது தலைநகரான **வாதாபியைக்** கைப்பற்றி அதனைப் பதின் மூன்று ஆண்டுகள் தன் ஆட்சியில் கி. பி. 642—655 வைத்திருந்தான் ; தன்னை 'மல்லன்' என்று அழைக்துக் கொண்ட புலிகேசியை வென்றமையால் நரசிம்மவர்மன் **மகாமல்லன்** என்ற விருதுப் பெயரைப் பெற்ருன். அவனுல் புதுப்பிக்கப்பட்ட துறைமுக நகரம் '**மகாமல்லபுரம்**' எனப் பெயர் பெற்றது. பல்லவனுக்கும் சாளுக்கியனுக்கும் நடைபெற்ற போரில் பல்லவனது உதவி பெறவந்த இலங்கை இளவரசனுன **மானவர்மன்**

மிக்க உதவி புரிந்தான். அதனல் மகிழ்ந்த பல்லவன் அவனுடன் தன் கடற்படையை இலங்கைக்கு அனுப்பி, அவனே அரசனுக்கினன்.

இரண்டாம் புலிகேசியின் மகனை **முதலாம் விக்கிர மாதித்தன்** (கி. பி. 655—681) தன் பாட்டனை துர்வி நீதன் என்ற கங்க அரசனேடு சேர்ந்து வாதாபியைக் கைப்பற்றினன்; சாளுக்கிய அரசை முன்போல நிலே நிறுத்தினன்.

மகாமல்லன் மகனை **முதலாம் பரமேசுவரவர்மன்** (கி. பி. 668 - 680) காஞ்சியை ஆண்ட பொழுது முதலாம் விக்கிரமாதித்தன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான்; பல்லவனே வெற்றிகொண்டு, உறை யூரில் சென்று தங்கினன். அப்பொழுது பாண்டிய நாட்டை ஆண்டவன் **அரிகேசரி மாறவர்மன்** என்பவன் (கி. பி. 670–700). அவன் மகன் **கோச் சடையன்** என்பவன். விக்கிரமாதித்தன் பல்லவனே வென்று உறையூரில் தங்கியிருந்ததை அறிந்ததும் பாண்டியன் பெரும்படையுடன் சாளுக்கியனேத் தாக்கி னன். இருவர்க்கும் புதுக்கோட்டைச் சீமையில் உள்ள **நெல்வேலி** என்னுமிடத்தில் கடும்போர் நடை பெற்றது. அவ்வமயம் சாளுக்கியனிடம் தோற்று ஓடிய முதலாம் பரமேசுவரவர்மன் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு தெற்கு நோக்கி வந்தான்; ஒரு பகுதிப் படையை வாதாபியின்மீது ஏவினன். உறையூரை அடுத்த பெருவளநல்லூரில் பல்லவனுக்கும் சாளுக்கிய னுக்கும் கொடிய போர் நடைபெற்றது. அப்போரில் சாளுக்கியன் முற்றிலும் முறியடிக்கப்பட்டான். இரண ரசிகன் என்ற பட்டத்தைப் பெற்ற சாளுக்கியனே வென் றமையால் கோச்சடையன் தன்னே '**இரணதீரன்**' என்று அழைத்துக்கொண்டான்; பல்லவ வேந்தன் மக னை **இராசசிம்மன்** தன்னே '**இரண சயன்**' என்று அழைத்துக்கொண்டான். பரமேசுவரவர்மனுடைய கூரம்

பட்டயம் பெருவளநல்லூர்ப் போரை மிக்க விரிவாய்க் கூறியுள்ளது.

பரமேசுவரவர்மன் மகனுன இராசசிம்மன் என்ற இரண்டாம் நரசிம்ம வர்மன் காலத்தில் (கி. பி. 680–720) பல்லவ நாட்டில் அமைதி நிலவியது. அதே காலத்தில் விக்கிரமாதித்தன் மகனுன விநயாதித்தன் சாளுக்கிய வேந்தனுயிருந்தான் (கி. பி. 681–696). அவன் மகனுன விசயாதித்தன் (கி. பி. 696–733) ஆட்சியிலும் நாட்டில் அமைதி நிலவியது.

அவன் மகனுன **இரண்டாம் விக்கிரமாதித்தன்** (கி. பி. 734–745) சிறந்த போர்வீரன். இராசசிம்மன் மகனுன **இரண்டாம் பரமேசுவரவர்மன்** (கி. பி. 720–731) காலத்தில் இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சியைக் கைப்பற்றினுன்; பின்னர் மன்னனுக வந்த இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் (கி. பி. 731–795) இரண்டு முறை காஞ்சியைக் கைப்பற்றினுன். காஞ்சியை மூன்று முறை வென்ற விக்கிரமாதித்தன் பல்லவனிடமே ஆட்சியை விட்டு அகன்ருன். தனது பேராற்றலைப் பல்லவன் உணர வேண்டும் என்பதே அவனது விருப்பம்போலும்! அப் பெருமகன் இராசசிம்மன் கட்டிய கயிலாசநாதர் கோவிலையும் அதன் அளப்பரிய செல்வத்தையும் கண்டு வியந்தான்; அச் செல்வத்தைக் கைக்கொள்ளாது அக் கோயிலுக்கே விட்டகன்ருன் என்று காஞ்சி - கயிலாசநாதர் கோவிலிலுள்ள அவனது கன்னடக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

## பல்லவர் - பாண்டியர் போர்கள்–I

பாண்டியன் கோச்சடையன் (கி. பி. 700–730) கொங்குநாட்டைக் கைப்பற்றினுன்; ஆய்நாட்டை வென்ருன். அவன் மகன் **முதலாம் இராசசிம்மன்**, இரண்டாம் நந்திவர்மனைக் குடந்தையை அடுத்துள்ள நந்திபுரக் கோட்டையில் முற்றுகையிட்டான். பல்லவர் படைத்

தலைவனான உதயசந்திரன் பாண்டியனை முறியடித்து விரட்டினான்; அவனுக்கு உதவியாக வந்த கங்கர் முதலிய அரசர் பலரையும் வென்றான்.

## இராட்டிரகூடர் தோற்றம்

இரண்டாம் விக்கிரமாதித்தன் ஆட்சிக்கு அடங்கிய சிற்றரசருள், இராட்டிரகூட மரபைச் சார்ந்த **தந்திவர்மன்** ஒருவன். அவன் பெருவீரன். அவன் எல்லோராப் பகுதியை ஆண்டுவந்தான். அவன் சாளுக்கியப் பேரரசைக் கைப்பற்ற நேரம் பார்த்திருந்தான்; இரண்டாம் விக்கிரமாதித்தன் மகனான **இரண்டாம் கீர்த்திவர்மன்** காலத்தில் (கி. பி. 744–755) தந்திவர்மன் தன் வலிமையைப் பெருக்கினான். அதேகாலத்தில் பாண்டியன் முதலாம் இராசசிம்மன் காவிரியைத் தாண்டி, மழகொங்கு நாட்டைக் கைப்பற்றினான். தந்திவர்மன் கி. பி. 755இல் சாளுக்கிய நாட்டைக் கைப்பற்றினான். அவன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்துத் தன் மகளான **ரேவா** என்பவளை இரண்டாம் நந்திவர்மனுக்கு மணம் செய்வித்தான். இந்த மண உறவினால் பல்லவனும் இரட்டனும் தங்கள் அரசியல் உறவை வலுப்படுத்திக்கொண்டனர்.

## பல்லவர் - பாண்டியர் போர்கள்–II

முதலாம் இராசசிம்ம பாண்டியன் மகனான **வரகுண மகாராசன்** காலத்தில் (கி. பி. 765–815) பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் போர் நடைபெற்றது. பாண்டியன் தென் திருவாங்கூர் நாடான வேணாட்டைக் கைப்பற்றினான்; ஆய் மன்னனை அடக்கினான். அவன் பெற்ற வெற்றிகளால் சோழநாடும் கொங்கு நாடும் அவன் ஆட்சிக்கு உட்பட்டன.

நந்திவர்மனுக்குப் பின்பு அவன் மகனான **தந்திவர்மன்** (கி. பி. 795–845) பல்லவ அரசனானான். அவன் காலத்தில் பாண்டிய மன்னனாயிருந்த **சீமாறன் சீவல்ல**

**பன்** (கி. பி. 815–862) வட இலங்கையைக் கைப்பற்றி ஞன் ; தன் தந்தை கைப்பற்றிய பல்லவ நாட்டின் தென் பகுதியையும் உறுதியாகப் பற்றிக்கொண்டான். இராட்டிரகூட மன்னஞன மூன்ரும் கோவிந்தன் பல்லவ நாட்டின் வடபகுதியைத் தாக்கிஞன். தனது நாட்டின் வட பகுதியில் இரட்டர் தாக்குதலும் தெற்கில் பாண்டியர் தாக்குதலும் ஏற்பட்டதால், தந்திவர்மன் தத்தளித்தான்.

அவனுக்குப்பின் வந்த அவன் மகஞன **மூன்ரும் நந்திவர்மன்** (கி. பி. 844–866) சிறந்த போர்வீரன் ; அரசியல் அறிஞன். அவன் தனது நாட்டின் வட பகுதியை இரட்டரிடமிருந்து மீட்டான். அவனது போர்த்திறனைக் கண்டு மகிழ்ந்த இரட்ட அரசஞன **முதலாம் அமோகவர்ஷ நிருபதுங்கன்** தன் மகளான **சங்கா** என்பவளை அவனுக்கு மணம் செய்வித்து மகிழ்ந்தான். இந்த மணவுறவால் மகிழ்ந்த பல்லவன் தனது நாட்டின் தென்பகுதியைக் கைப்பற்றியிருந்த சீமாறன் சீவல்லபன் என்ற பாண்டியனைத் **தெள்ளாறு** என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் முறியடித்தான் ; அன்று முதல் **'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்'** என்று அழைக்கப்பட்டான்.

நந்திவர்மன் சிறந்த தமிழறிஞன் ; சிறந்த சிவ பக்தன் ; புலவர்களை ஆதரித்த பெருவள்ளல். நந்திக் கலம்பகத்திற்கு நாயகன் அவனே. பாரத வெண்பாப் பாடிய பெருந்தேவஞர் அவன் காலத்தவரேயாவர். அவனுக்கு அவனி நாரணன், குமார மார்த்தாண்டன் எனப் பல பெயர்கள் வழங்கின. அவன் காலத்தில் பல்லவநாட்டு வணிகர் சயாம் நாட்டில் 'தகோபா' என்னும் இடத்தில் தங்கி வாணிகம் செய்தனர் ; அவனி நாரணன் என்ற பெயர் கொண்ட குளத்தை வெட்டுவித்தனர்.

நந்திவர்மனுக்கும் சங்கா என்பவளுக்கும் பிறந்த **நிருபதுங்கவர்மன்** (கி. பி. 885–896) அரிசிலாற்றங்

கரையில் சீமாறன் சீவல்லபனை முறியடித்தான். அதே சமயத்தில் இலங்கை மன்னன் தன் படையை அனுப்பி மதுரையைக் கைப்பற்றச் செய்தான். சீமாறன் போரில் உண்டான காயங்களால் இறந்தான். அவன் மகனை **இரண்டாம் வரகுணன்** அரசுகட்டில் ஏறினன். அவன் பத்தொன்பது ஆண்டுகள் அரசாண்டான் (கி. பி. 862–880).

நிருபதுங்கன் ஆட்சிக்காலத்தில் **அபராசித பல்லவன்** இளவரசனய் இருந்தான். நிருபதுங்கனது முதுமைக் காலத்தில் இரண்டாம் வரகுணன் பெரும்படையுடன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்து வந்தான். பல்லவர் ஆட்சிக்காலத்தில் **சோழர்,** குடந்தையை அடுத்த **பழையாறை** என்னும் நகரில் சிற்றரசராய் இருந்தனர். அவர்கள் பல்லவர்க்கு அடங்கி நாடாண்டனர். நிருபதுங்கவர்மன் காலத்தில் இருந்த சோழன் **விசயாலயன்** என்பவன். அவன் பல்லவர்க்காகப் பல போர்களில் ஈடுபட்டுப் பல விழுப்புண்களைப் பெற்ற பெருவீரன். அவன் முத்தரையரை முறியடித்துத் தஞ்சாவூரைக் கைப்பற்றிக்கொண்டான். அவன் மகனை **முதலாம் ஆதித்தன்** மிகச் சிறந்த போர்வீரன். அவன் தம் முன்னேர் இழந்த நாட்டைக் கைப்பற்றவும் பேரரசனய் விளங்கவும் ஆவல் கொண்டவன்.

ஆதித்த சோழன் தன் பேரரசனை பல்லவனுடன் இருந்து இரண்டாம் வரகுணனை எதிர்க்கலானன். அபராசிதன் பாட்டனை கங்க அரசன் முதலாம் பிருதிவீபதியும் பல்லவனுக்கு உதவிபுரிந்தான். கி. பி. 880இல் **திருப்புறம்பியத்தில்** மிகக் கொடிய போர் நடைபெற்றது. அப்போரில் பிருதிவீபதி இறந்தான். இரண்டாம் வரகுணன் முற்றிலும் முறியடிக்கப்பட்டான். பல்லவன் ஆதித்தனது போர்த்திறத்தைப் பாராட்டினன். ஆதித்தன் சோழநாடு முழுமையும் கைக்கொண்டான்; பின்பு பெரும் படையைத் திரட்டிப் பல்லவ நாட்டின்மீது படை

யெடுத்தான் ; அபராசிதனைப் போரில் கொன்றான் ; பல்லவ நாட்டையும் கைப்பற்றினான். கி. பி. 300 முதல் அடங்கிக்கிடந்த சோழர் ஏறத்தாழ 600 ஆண்டுகட்குப் பின்பு மீண்டும் தலையெடுக்கலாயினர். சோழப் பேரரசின் எழுச்சிக்கும் பாண்டியர் வலிமை குறைந்ததற்கும் திருப் புறம்பியப் போரே அடிப்படையாய் அமைந்தது.

## ஆட்சியும் பிறவும்

### அரசியல்

பல்லவருள் தந்தைக்குப் பின்பு மகன் பட்டத்தை அடைந்தான். மகன் இல்லாதபோது பங்காளி மகன் பட்டத்தைப் பெற்றான். இங்ஙனம் பட்டம் பெற்றவனே இரண்டாம் நந்திவர்மன். பல்லவரிடம் அமைச்சர், தானைத்தலைவர், உள்படு கருமத்தலைவர் (அந்தரங்க செய லாளர்) எனப் பல அதிகாரிகள் இருந்தனர். பல்லவரிடம் சிறந்த கடற்படை இருந்தது. பல்லவர்க்கு அடங்கிய சிற்றரசர் சிலர் படைத்தலைவராயும் இருந்தனர்.

பல்லவர் ஆட்சிக்கு உட்பட்ட தொண்டைநாடு 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோட்டமும் பல நாடுகளாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு நாட்டிலும் பல ஊர்கள் அடங்கியிருந்தன. சோழ பாண்டிய நாடுகள் கூற்றங்களாகவும் நாடுகளாகவும் பிரிந்திருந்தன. நாட்டின் பெரும் பிரிவுகள் அரசாங்க அலுவலர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. சிற்றூர்கள் ஊரவையார் ஆட்சியில் இருந்தன. காஞ்சியில் தருமா சனம் எனப்பட்ட பெரிய நீதிமன்றம் இருந்தது.

பல்லவர் நந்தி முத்திரையை அரசாங்க முத்திரை யாகப் பயன்படுத்தினர் ; செம்பு, வெள்ளி, பொன் நாண யங்களை வெளிப்படுத்தினர். நாழி, உரி, உழக்கு, பிடி, மரக்கால், பதக்கு, குறுணி, காடி, கலம் என்ற முகத்த லளவைகள் வழக்கில் இருந்தன. நாலு சாண் கோல்,

பன்னிரு சாண் கோல், பதினறு சாண் கோல் என்ற நீட்டலளவைகள் இருந்தன. கழஞ்சு, மஞ்சாடி என்பன பொன் முதலியன நிறுக்கப் பயன்பட்டன. பல்லவர் காலத்தில் மிகப் பல வரிகள் விதிக்கப்பட்டன. மருந்துச் செடிகளைப் பயிரிடவும் வரி கட்டப்பட்டது. குயவன் செலுத்திய வரி 'குசக்காணம்' எனப்பட்டது. இக் காலத்தில் உள்ளவாறே நிலவரி, தண்ணீர் வரி முதலிய பலதிறப்பட்ட வரிகள் வழக்கில் இருந்தன.

பல்லவருள் தந்தை சைவனுக இருப்பின் மகன் வைணவனுக இருப்பான். இந்த முறை தொடர்ந்து வந்தது. பல்லவர் தங்கள் நாட்டிற்கு மேற்கிலிருந்து கங்கரோடு முதலில் அரசியல் உறவு கொண்டிருந்தனர். அவர்கள் கதம்பருடனும் சாளுக்கியருடனும் பாண்டிய ருடனும் பல போர்களைப் புரிந்தனர்.

## கற்கோவில்கள்


முதலாம் மகேந்திரவர்மன் மலைச்சரிவுகளையே குடைந்து கற்கோவில்களாக அமைத்தான். அவை குடைவரைக் கோவில்கள் எனப்பட்டன. அக்கோவில் கள் மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல், சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானுர், திருச்சி ராப்பள்ளி முதலிய இடங்களில் காணப்படுகின்றன. இவற்றுள் பல சிவன் கோவில்கள்; சில பெருமாள் கோவில்கள்; ஒன்று மும்மூர்த்தி கோவில். கோவி லின் அளவு மிகச் சிறியது; மூன்று முதல் ஐந்து தூண் கள் வரையில் காணப்படும். எதிர்ப்புறக் கற்பாறையில் சிறிய புரைகள் அமைந்திருக்கும். அவற்றில் வழிபாட்டுக் குரிய கற்சிலைகள் காணப்படும். நடுப்புரையின் இரு பக்கங்களிலும் வாயிற் காவலர் உருவங்கள் செதுக்கப்பட் டிருக்கும். வாயிற் காவலரது வலக்கை இடக்கைமீது பொருந்தியிருக்கும். இடக்கை ஒரு தடியை (கதையை)ப் பற்றியிருக்கும். வாயிற் காவலர் அக்கதைமீது முன்

புறம் சிறிது சாய்ந்தபடி பார்ப்பவரைத் தாக்க முயல்பவரைப்போலக் காணப்படுவர்.

முதலாம் நரசிம்மவர்மன் பாறைகளையே கற்கோவில்களாகக் குடைவித்தான். அவையே மாமல்லபுரத்திலுள்ள **ஒற்றைக் கற்கோவில்கள்.** இக்காலத்தார் அவற்றைப் பஞ்சபாண்டவர் இரதங்கள் என்று தவருகக் கூறுவர். நரசிம்மன் தன் தந்தையைப் போலவே குடைவரைக் கோவில்களையும் அமைத்தான். மாமல்லபுரத்தில் உள்ள மகிஷாசுர மண்டபம், வராக மண்டபம், திருமூர்த்தி மண்டபம் என்பனவும், திருச்சிராப்பள்ளி மலையின் அடிப்பகுதியிலுள்ள கங்காதர மூர்த்தம் உள்ள குடைவரைக் கோவிலும் நரசிம்மன் காலத்தனவே. மாமல்லபுரத்திலுள்ள **பாறைச் சிற்பங்களும்** இவன் காலத்தவையேயாகும். பாறைச் சிற்பங்கள் நேற்றுச் செதுக்கியவைபோல இன்றும் புதுமையாகக் காணப்படுதல், அக்காலச் சிற்பங்களின் சிற்பத் திறனுக்கோர் எடுத்துக்காட்டாகும்.


கருங்கற்களைப் பெரும் பலகைகளாக வெட்டி அவற்றை அடிப்படையாக அமைத்து, அவற்றின்மேல் செங்கற்களை அடுக்கிக் கோவில் கட்டிய பெருமை முதலாம் பரமேசுவரவர்மனைச் சார்ந்ததாகும். அவன் காஞ்சியை அடுத்துள்ள கூரத்தில் இத்தகைய சிவன் கோவில் ஒன்றைக் கட்டினுன். அவன் மகனுன இராசசிம்மன் கற்களை உடைத்து அவற்றை ஒன்றன்மீது ஒன்ருக அடுக்கிக் கட்டப்பட்ட கோவிலே காஞ்சி-**கயிலாசநாதர் கோவில்.** அதன் சிறிய அளவினதே மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோவில்.

கயிலாசநாதர் கோவில் உலகப் புகழ்பெற்ற சிற்பக் கலைச்சிறப்பு வாய்ந்தது. அதன் திருச்சுற்றின் உட்பகுதியில் நாற்புறங்களிலும் ஐம்பதுக்கு மேற்பட்ட புரைகள் உள்ளன. ஒவ்வொரு புரையிலும் இதிகாச புராண நிகழ்ச்சிகளை உணர்த்தும் சிற்பங்கள் அமைந்




[பக்கம் 70] மாமல்ல புரம்—ஒற்றைக்கற் கோவில்கள்

—Copyright Archaeological Survey of India



[பக்கம் 85]

தஞ்சை—இராசராசேசுவரம்

—*Copyright Archaeological Survey of India*

துள்ளன. அவை பிண்டிக் கல்லில் செய்யப்பட்டமையால் காலப்போக்கில் அழிவை அடைந்துள்ளன. கருவறையைச் சுற்றியுள்ள புரைகளிலும் சிற்பங்களே நிறைந்துள்ளன. இராஜசிங்கன் காலத்து லிங்கங்கள் பட்டை தீட்டப்பெற்ற பெரிய லிங்கங்கள். காஞ்சியிலுள்ள ஐராவதேசுவரர் கோவில் முதலிய பல சிறு கோவில்கள் இராஜசிங்கன் காலத்தவை. அவை அனைத்திலும் சிவ பெருமானுடைய பலவகை நடனச் சிற்பங்களைக் காணலாம்.

முதலாம் நரசிம்மவர்மன் காலத்துத் தூண்கள் உட்கார்ந்துள்ள சிங்கங்களை அடியில் பெற்றிருக்கும். இராஜசிங்கன் காலத்துத் தூண்களில் நிற்கும் நிலையில் சிங்கங்கள் காணப்படும். அவற்றின்மீது வீரர் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவன் காலத்துக் கோவில் விமானம் அடி பருத்து நுனி குறுகியிருக்கும். நுனியில் கலச அமைப்புக் காணப்படும்.

காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலும் சிற்பக் கலைக்கூடம் என்னலாம். அதன் திருச்சுற்றின் உட்புறச் சுவர்கள் முழுமையிலும் சிற்பங்களே காட்சியளிக்கின்றன. அச்சிற்பங்கள் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் அமைந்தவை. அவற்றுள் பல்லவ மன்னர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை உணர்த்தும் சிற்பங்கள் குறிப்பிடத் தக்கவை. கருவறையில் பெருமாள் இருந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். பெருமாளின் சிலை மிக்க உயரமுடையது. அக்கோவில் **பரமேசுவர விண்ணகரம்** என்று அக்காலத்தில் பெயர் பெற்றிருந்தது.

## கலை வளர்ச்சி

கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை என்பன பல்லவ நாட்டில் நன்கு வளர்ச்சி அடைந்தன. மேலே கூறப்பெற்ற பலவகைக் கற்கோவில்களுக்கு முதலில் **ஓவியங்கள்** வரையப்

பட்டன. அவ்வோவியங்களைக் கொண்டே குடைவரைக் கோவில்கள் மலைச்சரிவுகளில் குடையப்பட்டன; ஒற்றைக் கற்கோவில்களும் அமைக்கப்பட்டன; கற்களை அடுக்கிக் கோவில்கள் கட்டப்பட்டன. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் பல்லவர் காலத்துச் சிற்பக்கலையறிவை நன்கு தெரிவிப்பவையாகும். பல்லவர் அமைத்த மூவகைக் கோவில்களும் அக்காலக் கட்டடக்கலை அறிவை உணர்த்தப் போதியவை என்னலாம்.

முதலாம் மகேந்திரவர்மன் இசைக்கலையை நன்கறிந்தவன். அவன் தனது ஆராய்ச்சியால் புதிய பண்களைக் கண்டறிந்தான்; சங்கீரணம் என்னும் தாளவகையைக் கண்டறிந்தான்; அவன் கண்டறிந்த பண்கள் எட்டு நரம்புகளையுடைய வீணைக்கும் ஏழு நரம்புகளைக் கொண்ட வீணைக்கும் உரியவை. மகேந்திரன் எட்டு நரம்புகளையுடைய வீணையைக் கண்டறிந்தவன் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அம்மன்னன் தான் செய்துள்ள 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற வேடிக்கை நாடக நூலில், "இசை எனது செல்வம்; நடிப்பவர் தாளத்திற்கும் இசைக்கும் பொருந்தும்படி மெய்ப்பாடுகளை விளக்கி நடனமாடுதல் உள்ளத்தைக் குளிர்விக்கிறது", என்று கூறியுள்ளமை, அவனுடைய இசையறிவையும் நடன அறிவையும் நன்கு விளக்குவதாகும்.

இராசசிங்கனும் இசைப்புலவன். அவனுடைய விருதுப் பெயர்களுள் வாத்ய வித்யாதரன் (இசைக்கருவிகளை இசைப்பதில் வித்தியாதரனை ஒத்தவன்), ஆதோத்ய தும்புரு (அதோத்ய வீணை வாசிப்பதில் தும்புருவை ஒத்தவன்), வீணு நாரதன் (வீணை வாசிப்பதில் நாரதனை ஒத்தவன்) என்பன அவனது இசைப்புலமைக்கு ஏற்ற சான்றுகளாகும்.

பல்லவர் காலத்தில் சைவ வைணவ சமயங்களைப் பரப்பிய நாயன்மாரும் ஆழ்வார்களும் பண்சுமந்த பாடல்களையே ஒவ்வொரு கோவிலிலும் பாடினர்.

பண் சுமந்த பாடலே மக்கள் மனத்தை இழுப்பது. நாயன்மார் குறிஞ்சி, காந்தார பஞ்சமம், தக்கராகம், இந்தளம், கௌசிகம், அந்தாளிக்குறிஞ்சி, கொல்லி, பியந்தைக் காந்தாரம், பழம் பஞ்சுரம், சீகாமரம், தக்கேசி, காந்தாரம், நட்டபாடை, பஞ்சமம், வியாழக் குறிஞ்சி, செவ்வழி, சாதாரி, புறநீர்மை முதலிய பண்களில் பக்திச்சுவை பொருந்திய இசைப் பாடல் களைப் பாடினர் என்பது திருமுறைகளால் தெரிகின்றது.

அக்காலக் கோவில்கள் பலவற்றில் இசைப்பாடல்கள் பாடப்பட்டன என்று திருமுறைப் பாடல்கள் கூறு கின்றன. "பாட்டோவாச் சாய்க்காடு", "இசை பாடும் பூம்புகார்", "பாடல் அருத ஆரூர்" போன்ற தொடர் கள் இந்த உண்மையை உணர்த்தல் காண்க. யாழ், வீணை, குழல், கின்னரி, சச்சரி, தக்கை, கொக்கரி, முழவம், மொந்தை, மத்தளம், தமருகம், துந்துபி, குடமுழவு, முரசம், தத்தலகம், உடுக்கை, துடி, கொடுகொட்டி, தாளம் முதலிய இசைக்கருவிகள் திரு முறைப் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்விவரங் கள் அனைத்தும் பல்லவர் இசைக்கலை வளர்ச்சியைப் படம்பிடித்துக் காட்டுவனவாகும்.

பல்லவர் காலத்தில் இசையும் நடனமும் கோவில் களில் இடம் பெற்றன. அவை சமய வளர்ச்சிக்கு மிகப் பெரிய அளவில் உதவி புரிந்தன. ஆடலையும் பாடலையும் கண்டும் கேட்டும் களியாதவர் யாவர்? கோவில்களில் ஆடல் மகளிரும் பாடல் மகளிரும் இருந்தனர். அவர்கள் மாணிக்கத்தார், கணிகையர் எனப் பெயர் பெற்றனர். குடந்தையில் உள்ள கும்பேசுவரர் கோவிலில் நடன மகளிர் இருந்தனர்.

"தேனார் மொழியார் திளைத்தங் காடித் திகழும் குடமூக்கில்" என்பது ஞானசம்பந்தர் பாடல் அடி யாகும். இவ்வாறே திருவையாறு, காஞ்சி, புகார் முதலிய

ஊர்க் கோவில்களில் நடன மகளிர் நடனமாடினர் என்பதைத் திருமுறைப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

காஞ்சி - வைகுந்தப் பெருமாள்கோவிலில் ஆடவரும் பெண்டிரும் நடனக்கோலத்துடன் இருத்தலை உணர்த்தும் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒருவன் நங்கையர் இருவருடன் நடனமாடத் தயாராக நிற்கின்றான். மற்றொரு சிற்பத்தில் எழுவர் ஆடவரும் விறலியர் இருவரும் அரசனது அவையை அடைவது போன்ற காட்சி காட்டப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பல்லவர் காலத்து நடனக்கலை வளர்ச்சியை நமக்கு அறிவிப்பனவாகும் அல்லவா?

## கல்வி

பல்லவர் பிராக்ருத மொழியிலும் வடமொழியிலும் தங்கள் செப்பேடுகளை வெளியிட்டனர்; கி. பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்தே சில தமிழ்க் கல்வெட்டுக்கள் தோன்றின; செப்பேட்டுப் பகுதிகள் சிலவும் தமிழில் தோன்றின. பல்லவர் காலத்தில் காஞ்சியில் இந்தியப் புகழ்பெற்ற **வடமொழிக் கல்லூரி** ஒன்று இருந்தது. அதனில் இலக்கணம், தருக்கம், வேதம் முதலிய பல துறைக் கல்வி அளிக்கப்பட்டது. அங்குப் படித்துச் சிறந்தவர் நாலந்தாப் பல்கலைக் கழகத் தலைவராயும் பேராசிரியருமாயிருந்தனர். கதம்ப அரசைத் தோற்றுவித்த மயூரசர்மன் தன் ஆசிரியருடன் அக்கல்லூரியில் கல்வி கற்றான். அக்கல்லூரிப் பேராசிரியர்கள் பல்லவ மன்னரால் சிறப்பிக்கப் பெற்றனர்.

அரக்கோணத்தை அடுத்த சோழசிங்கபுரத்து மலைமீது ஒரு வடமொழிக் கல்லூரி இருந்தது. கல்லூரி அக்காலத்தில் கடிகா (Ghatika) எனப்பட்டது. கடிகா இருந்த அசலம் (மலை) **கடிகாசலம்** எனப் பெயர் பெற்றது.

திருப்பாதிரிப்புலியூர்க்கும் புதுச்சேரிக்கும் இடையில் **பாகூர்** என்னும் சிற்றூர் உள்ளது. அவ்வூரிலும் ஒரு வடமொழிக் கல்லூரி இருந்தது. அதனில் பதினான்கு கலைகளும் பதினெட்டு வித்தைகளும் கற்பிக்கப்பட்டன. அக்கல்லூரி நடைபெற மூன்று சிற்றூர்கள் தானமாக விடப்பட்டன.

பல்லவ மன்னர் வேதங்களில் வல்ல தனிப்பட்ட மறையவர்களையும் ஆதரித்து அவர்களிடம் மறையவர் மக்கள் கல்வி கற்கச் செய்தனர்; அவர்கட்குப் பல சிற்றூர்களைத் தானமாக வழங்கினர். அவை அக்கிர காரங்கள், **அகரங்கள்** எனப்பட்டன. அவ்வகரங்கள் பெரும்பாலும் நீர்வளமுள்ள இடங்களில் அமைப் புண்டன. நான்கு வேதங்களில் வல்லவர் சதுர்வேதிகள் எனப்பட்டனர். அவர்கட்கு வழங்கப்பட்ட சிற்றூர் **சதுர்வேதி மங்கலம்** எனப் பெயர் பெற்றது. பிராமணர் போர்ப் பயிற்சியையும் பயின்றனர். அக்கலையில் வல்லுநர் படைத்தலைவராய் விளங்கினர்.

பெரிய ஊர்களில் பிராமணர் கூட்டமாகத் தங்கி யிருந்த பகுதி **பிரமபுரி** எனப்பட்டது. பலதிறக் கல்வி பெற்ற மறையவர் வாழ்ந்த ஊர் **பிரம தேசம்** எனப் பட்டது. தனிப்பட்ட மறையவர் பலரும் கல்வியின் பொருட்டுச் சிறப்புப் பெற்றனர். அவர்க்கு நிலங்கள் விடப்பட்டன. அவர்கள் ஆசிரியராய் அமர்ந்து பிராமண இளைஞர்கட்கு வடமொழிக் கல்வி அளித்தனர்; ஓய்வு நேரங்களில் வேதம் ஓதினர்.

பல்லவர் காலத்தில் சில கோவில்களை அடுத்திருந்த **மடங்களிலும்** பிராமண இளைஞர்க்கு வடமொழிக் கல்வி கற்பிக்கப்பட்டது. அரசர்கள் அம் மடங்கட்குத் தனி மானியங்கள் வழங்கினர். பல்லவ வேந்தர் இவ்வாறு பல துறைகளிலும் வடமொழிக் கல்வியை வளர்த்தனர்.

பல்லவ நாட்டில் மடங்களை அமைத்துக்கொண்டு சமயப் பிரசாரம் செய்துவந்த **பௌத்தரும் சமணரும்**

பாலி மொழியிலும் வடமொழியிலும் வல்லவராவர். அவர்கள் வாழ்ந்த மடம் பள்ளி எனப்பட்டது. அதனைச் சுற்றியிருந்த கூடத்தில் மாணவர் தங்கிக் கல்வி பயின்றனர். அதனுற்றுன் கல்வி பயிலுமிடம் 'பள்ளிக்கூடம்' எனப் பெயர் பெறலாயிற்று. அவர்கள் தமிழ்க் கல்வியும் பயின்று தமிழில் பல நூல்களைச் செய்தனர்; தங்கள் சமயக் கொள்கைகளைத் தமிழிலே பரப்பினர்.

திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் ஒரு மடத்தை உண்டாக்கினுர். அவரும் திருஞானசம்பந்தரும் திருவீழிமிழலையில் இரு மடங்களில் தங்கியிருந்தனர். சம்பந்தர் மதுரையில் ஒரு மடத்தில் தங்கியிருந்தார். இவற்றை நோக்கச் சிவன்கோவில்களை அடுத்துச் சில ஊர்களிலேனும் மடங்கள் இருந்தன என்று கூறலாம். அம்மடங்களிலும் சைவ சமய நூல்கள் கற்பிக்கப்பட்டன எனக் கருதுதல் தகும்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்றவர் செய்யுளியற்றும் வன்மை பெற்றிருந்ததை நோக்கப் பல்லவர் காலத்துத் தமிழகத்தில் தமிழ் தொடக்கநிலைக் கல்வியும் உயர்நிலைக் கல்வியும் நல்ல முறையிற் கற்பிக்கப்பட்டன என்று கருதலாம்; சங்க கால மகளிர் கல்வி கற்றுற்போலவே பல்லவர் காலத்துப் பெண்மணிகளும் கல்வி கற்றனர் என்பதும் தெரிகிறது.

மூன்றும் நந்திவர்மன் "பைந்தமிழை ஆய்கின்ற நந்தி" என்று நந்திக் கலம்பகத்தில் பாராட்டப்பட்டான். அவனது அவைக்களப் புலவரான பெருந்தேவனுர் பாரத வரலாற்றை வெண்பா யாப்பில் பாடினுர். அபராசிதன் வெண்பா ஒன்றைப் பாடினுன். பல்லவ மல்லன் என்ற இரண்டாம் நந்திவர்மன்மீது பல தனிப் பாடல்கள் பாடப்பட்டன. ஐயடிகள் காடவர்கோன் என்ற பல்லவ மன்னர் 'க்ஷேத்திர வெண்பா' என்னும் நூலைப் பாடினுர். இவை அனைத்தும் பல்லவர்

காலத் தமிழ்க் கல்வி நிலையை உணர்த்தும் சான்றுகள் ஆகும்.

## சமயம்

சைவசமய நாயன்மார் அறுபத்துமூவரும் ஆழ்வார் பன்னிருவரும் சமயத்தொண்டு செய்த காலம் பல்லவர் காலமேயாகும். அக்காலத்தில் பாண்டிய நாட்டிலும் சோழநாட்டிலும் தொண்டைநாட்டிலும் சமணம்—பௌத்தம்—சைவம்—வைணவம் ஆகிய நான்கு சமயங்களும் இருந்தன. ஒருபால் சைவமும் மற்றொருபால் வைணவமும் பௌத்த சமண சமயங்களைத் தாக்கின. அவற்றிடையே பல வாதங்கள் நிகழ்ந்தன. திருநாவுக்கரசர் முதலில் சமணசமயத்திலிருந்து பின்பு சைவராய் மாறினார். சிவன் கோவில் இருந்த ஒவ்வோர் ஊருக்கும் நடந்து சென்று கோவிலில் திருப்பதிகம் பாடிச் சைவசமயப் பிரசாரம் செய்தார். அவரது பிரசார வலிமையால் பல்லவநாட்டில் சைவசமயம் புத்துயிர் பெற்றது. முதலாம் மகேந்திரவர்மன் சமண சமயச் சார்பிலிருந்து விலகிச் சைவனாய் மாறினான். திருஞான சம்பந்தரது பிரசாரத்தால் பாண்டிய நாட்டில் சைவ சமயம் வேரூன்றியது; பாண்டியன் நெடுமாறன் சைவனாய் மாறினான்.

அப்பர் சம்பந்தர் தொண்டினால் சோழநாடு சைவத்தில் ஈடுபாடுகொண்டது. சைவப் படையெழுச்சி நாடு முழுமையும் ஏற்பட்டது. இவ்வாறே ஆழ்வார்களின் திருத்தொண்டினால் பௌத்தமும் சமணமும் ஒடுக்கப்பட்டன. பாண்டிய மன்னர்களும் பல்லவரைப் போலவே சைவத்தையும் வைணவத்தையும் பேணி வளர்க்கலாயினர். பாண்டிய நாட்டிலும் ஆனைமலை, திருப்பரங்குன்றம், கழுகுமலை முதலிய இடங்களில் குகைக் கோவில்கள் ஏற்பட்டன. பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் ஆகிய மூவரும் பாண்டிய

நாட்டைச் சேர்ந்தவர். அவர்களுடைய அருட்பாடல்கள் அந் நாட்டில் வைணவத்தைச் செழிக்கச் செய்தன. முதலாழ்வார் மூவராலும் திருமழிசை ஆழ்வாராலும் தொண்டை நாட்டில் வைணவம் வளர்ச்சி பெற்றது. திருமங்கை ஆழ்வார் சோழ நாட்டினர். அவரது திருத் தொண்டினுல் சோழநாடு சிறப்புற்றது.

முதலாம் நரசிம்மவர்மன் சார்பில் வாதாபிமீது படையெடுத்த பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் சாளுக்கிய நாட்டிலிருந்து விநாயகர் சிலேகளேத் தமிழகத் திற்குக் கொணர்ந்தார். அன்று முதல் கணபதி வணக்கம் தமிழகத்தில் தோன்றி வளரலாயிற்று. கணபதி சிவபிரா னுடைய மூத்த பிள்ளேயாகவும் முருகனுக்குத் தமையனு ராகவும் கருதப்பட்டார்.

## இலக்கிய வளர்ச்சி

பல்லவ மன்னர் வடமொழிப் புலமையில் சிறந்து விளங்கினர். சிறந்த வடமொழிப் புலவரான பாரதி, தண்டி ஆகிய இருவரும் பல்லவ நாட்டில் வாழ்ந்தவராவர். முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாசப் பிரகசனம் என்னும் வேடிக்கை நாடகத்தை வடமொழியில் எழுதி ஞன். தண்டி காவியாதர்சம் என்னும் அணியிலக்கணத் தையும் அவந்தி சுந்தரீ கதா என்னும் நூலேயும் வடமொழியில் இயற்றினுர். அக் காவியாதர்சத்தைத் தழுவியே தண்டியலங்காரம் கி. பி. 12 ஆம் நூற்ருண்டில் தமிழில் செய்யப்பட்டது.

திருநாவுக்கரசர் ஏறத்தாழ மூவாயிரம் பாடல்கள் பாடியுள்ளார். திருஞானசம்பந்தரும் அங்ஙனமே பாடியுள்ளனர். திருமூலர் மூவாயிரம் பாக்களேப் பாடினுர். சுந்தரர் ஏறத்தாழ ஆயிரம் பாடல்களேப் பாடியுள்ளார். கி. பி. 9ஆம் நூற்ருண்டில் முதல் வரகுணன் காலத்தவ ரான மாணிக்கவாசகர் திருவாசகத்தையும் திருக்கோவை யாரையும் பாடினுர். கி. பி. ஆரும் நூற்ருண்டில் வாழ்ந்த

காரைக்கால் அம்மையார் பாடிய சிறு நூல்கள் சில. முன்பு கூறப்பெற்ற ஐயடிகள் காடவர்கோன் பாடிய க்ஷேத்திர வெண்பா என்னும் நூல் இக்காலத்ததேயாகும். இவ்வாறே வைணவ ஆழ்வார்கள் பாடிய நாலாயிரம் பாக்களும் பல்லவர் காலத்துச் சமய இலக்கியமாகும். பெருங்கதை என்னும் பெரியநூல் கொங்குநாட்டில் பாடப்பட்டது. திருக்குறள் ஒழிந்த பதினெண் கீழ்க் கணக்கு நூல்களும் பல்லவர் காலத்தில் செய்யப் பட்டனவே. நந்திக்கலம்பகம், பாரத வெண்பா, சேரமான் பெருமாள் நாயனுர் பாடிய பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா ஆகிய நூல்கள் இக்காலத்தனவேயாகும். வடநூற் புலமைபெற்ற தமிழாசிரியர் பலர் வடமொழி யிலக்கணத்தைப் பின்பற்றித் தமிழ் யாப்பிலக்கணத்தில் தாண்டகம், விருத்தம் முதலியவற்றை நுழைத்த காலமும் பல்லவர் காலமேயாகும்.

# 4. சோழர் காலம்

## (கி. பி. 900–1300)

### ஆதித்த சோழன்

ஆதித்த சோழன் (கி. பி. 871–907) பல்லவனைக் கொன்று சோழப் பேரரசை அமைத்தான் என்று சென்ற பகுதியின் இறுதியிற் கூறப்பட்டதன்றோ? பல்லவ நாடு வடக்கில் துங்கபத்திரை ஆற்றங்கரை வரையில் பரவியிருந்தாற் போலவே சோழப் பெருநாடும் பரவியது. துங்கபத்திரைக்கு வடபால் இராட்டிரகூடப் பேரரசு பரவியிருந்தது. மைசூரின் ஒரு பகுதியில் கங்கர் ஆண்டு வந்தனர். திருப்புறம்பியப் போரில் இறந்த முதலாம் பிருதிவீபதியின் பெயரனை இரண்டாம் பிருதிவீபதி ஆதித்த சோழன் ஆட்சிக்கு உட்பட்டான். பராந்தக வீர நாராயணன் (கி.பி. 880–900) என்ற பாண்டியன் ஆட்சியிலிருந்த கொங்கு நாடும் ஆதித்தன் ஆட்சிக்கு உட்பட்டது. அக்காலத்தில் தாணுரவி என்பவன் சேரநாட்டை ஆண்டுவந்தான். அவன் தன் மகளை ஆதித்தனுக்கு மணம் செய்வித்தான். அவ்வாறே இரட்ட அரசனை இரண்டாம் கிருஷ்ணன் தன் பெண்களுள் ஒருத்தியை ஆதித்த சோழனுக்கு மணம் செய்வித்தான். அவளுக்குக் கன்னரதேவன் என்ற மைந்தன் ஒருவன் பிறந்து வளர்ந்தான்.

ஆதித்தன் காவிரியின் தோற்றுவாயிலிருந்து அது கடலொடு கலக்கும் இடம் வரையிலும் அதன் இரு கரைகளிலும் கற்களைக் கொண்டு சிவன் கோவில்களைக் கட்டுவித்தான் என்று பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அப்பேரரசன் திருக்காளத்தி நாட்டுக்கு அருகிலுள்ள தொண்டைமான் நாடு என்னும் ஊரில் இறந்தான். அவன் மகனை பராந்தகன் அங்கு அவ

னுக்கு ஒரு கோவில் கட்டினான். அக்கோவில் ஆதித்தன் விருதுப் பெயர்களுள் ஒன்றான 'கோதண்டராமன்' என்னும் பெயரால் 'கோதண்ட ராமேசுவரம்' என்று வழங்கப்பட்டது.

## முதற் பராந்தகன்

பராந்தகன் 48 ஆண்டுகள் (கி. பி. 907–955) அரசாண்டான். இவன் தந்தையைப் போலவே வலிமை மிக்கவன். இவன் கி. பி. 910இல் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினான்; அது முதல் 'மதுரை கொண்ட கோப் பரகேசரி' என்றழைக்கப் பட்டான். ஆட்சியை இழந்த பாண்டியன் இரண்டாம் இராசசிம்மன் (கி. பி. 900–920) இலங்கை அரசனது உதவியை நாடினான். பராந்தகன் பாண்டியன் படையையும் இலங்கைப் படையையும் போரில் முறியடித்தான். இராசசிம்மன் இலங்கைக்கு ஓடிவிட்டான்; அங்குத் தன் முடியையும் பிறவற்றையும் ஒப்படைத்தான்; பின்பு தன் தாயின் நாடான சேரநாட்டை அடைந்தான். பராந்தகன் இலங்கையைத் தாக்கிப் பாண்டியன் முடியைக் கொண்டு வர முனைந்தான்; அம்முயற்சி பயனளிக்கவில்லை.

பராந்தகன் காலத்தில் இரண்டாம் கிருஷ்ணன் இரட்ட அரசனாய் இருந்தான். அவன் தக்கணம் முழுமையும் வென்ற பேரரசனாய் விளங்கினான். அவன் தன் பெயரனை கன்னரதேவன் சோழப் பேரரசனாக வேண்டும் என்று விரும்பினான்; அதனால் பாணரையும் வைதும்பரையும் சேர்த்துக்கொண்டு சோழ நாட்டைத் தாக்கினான். பராந்தகன் கங்க அரசனுடன் திருவல்லம் என்னும் இடத்தில் இரண்டாம் கிருஷ்ணனை முறியடித்தான். பராந்தகன் வெற்றியால் திருவல்லமும் அதனைச் சேர்ந்த பாணர் நாடும் கங்க அரசனுக்குப் பரிசளிக்கப்பட்டன. இந்த வெற்றியால் பராந்தகன் தென்னிந்தியப் பேரரசனாய்ச் சிறந்து விளங்கினான்.

கங்க அரசனுன இரண்டாம் பிருதிவீபதிக்குப் பின்பு அவன் மகனுன இரண்டாம் பூதுகன் இரட்டர் மகளை மணந்தான்; அதனுல் அவன் இரட்டர் பக்கம் சேர்ந்து கொண்டான். முன்பு சோழனிடம் தோற்ற பாணரும் வைதும்பரும் இரட்டருடன் சேர்ந்துகொண்டனர். இரட்டரது படையெடுப்பு எந்த நேரத்திலும் நிகழலாம் என்ற அச்சம் நிலவியது. அதனுல் பராந்தகன் சோழப் பெருநாட்டில் வடமேற்கு எல்லையில் தன் பெரும் படையின் ஒரு பகுதியைத் தன் மூத்த மகனுன **இராசாதித்தன்** தலைமையில் நிறுத்தினுன்; மற்றொரு மகனுன **அரிகுல கேசரி** என்பவனை அவனுக்கு உதவியாக இருத்தினுன். பராந்தகனது ஆட்சியின் பிற்பகுதியில் இரட்ட அரசனுய் விளங்கிய **மூன்ரும் கிருஷ்ணன்** என்ற **கன்னரதேவன்** (கி. பி. 939–966). அவனுடைய மைத்துனன்தான் கங்க அரசனுன இரண்டாம் பூதுகன். கி. பி. 949இல் அரக் கோணத்தை அடுத்த தக்கோலத்தில் சோழருக்கும் இரட்டர்க்கும் இடையே கடும்போர் ஏற்பட்டது. யானை மீது இருந்து போரிட்ட இராசாதித்தன் அம்பினுல் தாக்கப்பட்டு இறந்தான். இரட்டர் வெற்றி பெற்றனர். கன்னரதேவன் சோழப் பெருநாட்டின் வடபகுதியைக் கைக்கொண்டான்; 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்' என்று தன்னை அழைத்துக்கொண்டான்.

### பராந்தகனுக்குப் பின்பு

பராந்தகனுக்குப் பின்பு அவன் மகனுன **கண்ட ராதித்தன்** அரசுகட்டில் ஏறினுன் (கி. பி. 949–959). அவனும் அவன் மனைவியான **செம்பியன் மாதேவியாரும்** சிறந்த சிவபக்தர்கள். கண்டராதித்தனுக்குப் பின்பு **அரிஞ்சயன்** ஒரே ஆண்டு அரசனுய் இருந்து இறந்தான். அவனுக்குப் பின்பு அவன் மகனுன **இரண்டாம் பராந் தகன்** என்ற **சுந்தரசோழன்** (956–973) அரசனுனுன். அவனுக்குக் **குந்தவ்வை** என்னும் மகளும், **இரண்டாம் ஆதித்தன், அருள்மொழி** என்ற மைந்தர் இருவரும்

இருந்தனர். இரண்டாம் ஆதித்தன் தந்தையின் ஆட்சியில் இளவரசனுய் இருந்தான். அவன் சிறந்த வீரன். அக்காலத்தில் சோழனுக்கு அடங்கிப் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த வீரபாண்டியன் விடுதலை வேண்டி நின்ருன். அவனுக்கு உதவியாக இலங்கை அரசனும் படை அனுப்பினுன். சுந்தர பாண்டியன் இரண்டு போர்களிலும் வீரபாண்டியனையும் இலங்கைப் படையையும் முறியடித்தான். இரண்டாம் ஆதித்தன் வீரபாண்டியனைக் கொன்ருன்.

கண்டராதித்தனுக்கும் செம்பியன் மாதேவிக்கும் பிறந்த **உத்தமசோழன்** சோழ அரசுதலை விரும்பிச் சூழ்ச்சி செய்து இரண்டாம் ஆதித்தனைக் கொன்றுவிட்டான். சுந்தர சோழன் அத்துயரத்தில் இறந்தான். நாட்டில் உத்தம சோழனுக்கு எதிராகக் குழப்பம் உண்டாகும் நிலையில் இருந்தது. சுந்தர சோழனின் இரண்டாம் மகனுன அருள்மொழி, தன் நற்பண்புகளால் குழப்பம் நேராமல் பாதுகாத்து, உத்தம சோழனை அரசனுக்கினுன்; தான் அவனுக்கு உதவியாய் இருந்து கன்னர தேவன் வென்ற பகுதியை மீண்டும் கைப்பற்றினுன்.

### சாளுக்கியர் எழுச்சி

பல்லவர் காலத்தில் சாளுக்கிய அரசு இருந்து மறைந்ததன்ருே? அந்த மரபைச் சேர்ந்தவர் பின்வந்த இரட்டரது பேரரசில் சிற்றரசராய் இருந்துவந்தனர். அச்சிற்றரசர் மரபில் **சத்தியாசிரைய மரபு** ஒன்ருகும். அம்மரபைச் சேர்ந்தவன் **ஆகவமல்லன் தைலபன்** என்பவன். அவன் மூன்ரும் கிருஷ்ணன் காலத்திலும் பின்னரும் இரட்டர்க்கு அடங்கிய சிற்றரசனுய் இருந்தான். அவன் உத்தம சோழன் ஆட்சிக்காலத்தில் இரட்ட அரசனை வென்று தக்கணம் முழுமையும் கைக்கொண்டான். முன்பு பல்லவர்க்கும் வாதாபிச்சாளுக்கியருக்கும் தொடர்ந்து பல போர்கள் நடைபெற்ருற் போலவே அருள்மொழி என்ற

முதலாம் இராசராசன் காலம் முதல் சோழர்க்கும் சாளுக்கியர்க்கும் கொடிய போர்கள் பல நடைபெற்றன. அவற்றை அடுத்துக் காண்போம்.

## முதலாம் இராசராசன் (கி. பி. 985–1016)

இராசராசன் சிறந்த கல்விமான்; சமயப்பற்றும் தெய்வபக்தியும் மிக்கவன்; ஆட்சிக்கலையிலும் வல்லவன்; உயர் பண்புகள் மிக்கவன்; அஞ்சா நெஞ்சினன். அவன் தன் உயர் பண்புகளால் குடிமக்கள் உள்ளங்களைக் கவர்ந்தான்; பெரும் படையைத் திரட்டினான்; அழுத்தமான போர்ப்பயிற்சியை அளித்தான்; கடற்படையையும் தயாரித்தான். அவன் காலத்தில் சேரனும் பாண்டியனும் இலங்கை மன்னனும் அவனுக்கு எதிராகக் கூட்டுச் சேர்ந்தனர். சோழன் இரண்டு போர்களை நிகழ்த்திப் பாண்டியனையும் சேரனையும் அடக்கினான்; இலங்கையின் மீது கடற்படையைச் செலுத்தி வட இலங்கையைக் கைக்கொண்டான். பண்டைக்காலம் முதல் இலங்கையின் தலைநகராய் இருந்த அநுராதபுரத்தை அழித்தான்; பொலந்நருவை என்னும் ஊரைத் தலைநகராக்கினான். இலங்கை அரசன் தென்னிலங்கைக்கு ஓடி மறைந்து வாழ்ந்தான்.

இராசராசன் கங்கபாடி, நுளம்பபாடி, தடிகை பாடி என்னும் கன்னட நாடுகளை வென்றான். அவனுடைய வெற்றிகளைக்கண்ட சாளுக்கிய மன்னனான தைலபன் கி. பி. 992இல் சோழனைத் தாக்கினான். தைலபன் மகனான சத்தியாசிரயன் கி. பி. 997இல் பட்டம் அடைந்தான். அக்காலத்தில் கிழைச் சாளுக்கிய நாட்டில் பட்டம் பற்றிய குழப்பம் ஏற்பட்டது. போரில் தோற்ற கீழைச் சாளுக்கிய மன்னனுடைய மக்கள் இருவரும் இராசராசனிடம் சரண் அடைந்தனர். அவர்கள் முதலாம் சக்தி வர்மன், விமலாதித்தன் என்பவராவர். இராசராசன் இளையவனான விமலாதித்தனுக்குத் தன் மகளான

குந்தவ்வையை மணம் செய்துகொடுத்தான்; ஒரு படையை அனுப்பி, மேலைச் சாளுக்கியரது உதவியால் நாட்டை ஆண்டுகொண்டிருந்தவனை முறியடித்துச் சக்தி வர்மனை அரசனாக்கினான்; அவனைத் தனக்கு அடங்கிய சிற்றரசனாய் இருந்து கீழைச் சாளுக்கிய நாட்டை ஆண்டுவருமாறு ஏற்பாடு செய்தான். இச் செயலைப் பொறாத சத்தியாசிரயன் கி. பி. 1006இல் வேங்கியின்மீது படையெடுத்தான். உடனே இராசராசன் மேலைச் சாளுக்கிய நாட்டைத் தாக்கும்படி தன் தவமைந்தனான இராசேந்திர சோழனை ஏவினான். இராசேந்திரன் மேலைச் சாளுக்கிய நாட்டைக் கொள்ளையடித்தான்; தலை நகரான மான்ய கேடத்தைச் சூறையாடினான். சோழனது மற்றொரு படை மேலைச்சாளுக்கிய நாட்டின் வேறொரு பகுதியில் புகுந்து ஊர்களை அழித்தது; பல கோட்டை களைக் கைப்பற்றியது. இத்தகைய போராட்டத்தைச் சத்தியாசிரயன் எதிர்பார்க்கவில்லை. அவன் கதிகலங்கி னான்; வேங்கியைக் கைவிட்டுத் தன் நாட்டிற்குத் திரும் பினான்.

இராசராசன் தனது கடற்படையை ஏவி **மாலத்தீவு களை** வென்றான். அவை 'முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரம்' என்று அக்காலத்தில் பெயர் பெற்றன. இராச ராசன் தன் தலைநகரான தஞ்சாவூரில் உலகம் இன்றளவும் வியந்து பாராட்டும் **இராசராசேசுவரம்** என்ற பெரிய கற்கோவிலைக் கட்டினான். அவன் காலத்தில் மலேயா நாட்டையும் கிழக்கிந்தியத் தீவுகளையும் ஆண்டுவந்த மன்னனது வேண்டுகோளின்படி நாகையில் புத்தர் கோயிலொன்றைக்கட்ட இடமும் பொருளுதவியும் அளித் தான். அவன் காலத்தில் சோழநாட்டுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் கடல் வாணிகம் சிறப்பாக நடைபெற்றது.

தான் பட்டம் பெற்றது முதல் தனது ஆட்சிக் காலத் தில் நடைபெற்ற போர்களைக் காலமுறைப்படி வரிசைப் படுத்தித் தன் கல்வெட்டுகளில் முதன்முதலாக வெளி

யிட்ட பெருமை இராசராசனையே சாரும். அத்துடன் கல்வெட்டின் தொடக்கம் மங்கலச் சொற்களோடு அமையும்படி செய்தவனும் அப்பெருமகனே ஆவன்.

## முதலாம் இராசேந்திரன் (கி. பி. 1012–1044)

முதலாம் இராசேந்திரன் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே நீண்டகாலம் சோழ இளவரசனாயும் பெரும் படைத்தலைவனாயும் விளங்கியவன்; ஆதலால் ஆட்சியிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினான். அவன் கி. பி. 1018இல் தன் முதல் மகனான இராசாதிராசனை இளவரசனாக்கினான். இராசேந்திரன் இலங்கை முழுமையும் கைப்பற்றினான்; அதன் அரசனான ஐந்தாம் மகிந்தனைச் சோழநாட்டுச் சிறையுள் வைத்தான். அம்மன்னன் சோழநாட்டிலேயே பன்னிரண்டு ஆண்டுகள் இருந்து இறந்தான். அவன் மகன் பல போர்களுக்குப் பின்பு தென்னிலங்கையைக் கைப்பற்றி முதலாம் விக்கிரமபாகு என்ற பெயரில் ஆளத்தொடங்கினான்.

இராசேந்திரன் சேர பாண்டியர் எழுச்சியை அடக்கித் தன் மைந்தருள் ஒருவனை அவ்விரண்டு நாடுகளுக்கும் அரசப்பிரதிநிதியாக்கி மதுரையில் இருத்தினான்.

மேலைச்சாளுக்கிய நாட்டில் அப்பொழுது அரசனாய் இருந்தவன் இரண்டாம் ஜயசிம்மன். அவன் கீழைச் சாளுக்கியர் அரசியலில் தலையிட்டான்; குந்தவ்வையின் மகனான இராசராச நரேந்திரன் பட்டம் பெறுதபடி செய்தான்; அவனுக்குச் சோழர் உதவி கிடைக்காதபடி வேங்கிநாட்டின் தென்பகுதியில் தங்கினான். இராசராச நரேந்திரன் முதலாம் இராசேந்திர சோழனுக்குத் தங்கை மகன். அதனால் அவன் இரண்டு படைகளை ஏவினான். ஒரு படை ஜயசிம்மனைத் தாக்கி முறியடித்தது. மற்றொரு படை வேங்கிநாடு சென்று அங்கு இருந்த அரசனை விரட்டியது. பின்பு அப்படை வடக்குநோக்கிச் சென்று வழியில் அரசர் பலரை வென்று கங்கைக்கரையை அடைந்




[பக்கம் 140] திருமலை நாயக்கர் மகால், மதுரை

—*Copyright Archaeological Survey of India*



[பக்கம் 87] சண்டேசுவர அநுக்கிரக மூர்த்தி
(கங்கைகொண்ட சோழபுரம்)

—*Copyright Archaeological Survey of India*

தது. அப்படை திரும்பி வராதபடி செய்யப் பகைவர் முனைந்தனர். அதனை உணர்ந்த இராசேந்திரன் பெரும் படையுடன் சென்று கோதாவிரிக் கரையில் தங்கினான். கங்கைவரை சென்ற படைகள் பெருவெற்றியுடன் மீண்டு வந்தன. இராசராச நரேந்திரன் அரசனாக்கப்பட்டான். கங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட நீர் இராசேந்திரன் புதிதாக அமைத்த தலைநகரில் தெளிக்கப்பட்டது. அந்நகரம் **கங்கைகொண்ட சோழபுரம்** என்று பெயரிடப் பட்டது. அந்நகரில் அமைக்கப்பட்ட பெரிய கற்கோவில் **கங்கைகொண்ட சோழேச்சுவரம்** எனப்பட்டது. அந்நகரில் வெட்டுவிக்கபெற்ற பெரிய ஏரி **சோழகங்கம்** எனப்பெயர் பெற்றது. மலேயா நாட்டுடன் வாணிக உறவு கொண்டிருந்த இராசேந்திரன் எக்காரணத்தாலோ அந்நாட்டைத் தாக்கினான். அவனது கப்பற்படை கடல் கடந்து சென்று ஸ்ரீவிஜய நாட்டின் பல ஊர்களைக் கைப் பற்றியது. அவ்வெற்றிக்குப் பின்பு இராசேந்திரன் **கடாரம் கொண்டான்** என்ற விருதுப் பெயரைப் பெற்றான்.

இரண்டாம் ஜயசிம்மனுக்குப் பின்பு அவன் மகன் முதலாம் சோமேசுவரன் என்ற ஆகவமல்லன் சாளுக்கிய நாட்டு மன்னனானான். அவன் தன் தலைநகரைக் **கலியாணபுரத்திற்கு** மாற்றிக்கொண்டான். அவன் தக்கணம் முழுமையும் தன் அடிவணங்கச் செய்தான். ஆகவமல்லன் கீழைச்சாளுக்கியர் அரசியலில் தலையிட் டான். இதனை அறிந்த இராசேந்திரன் ஒரு பெரும் படையை அங்கு அனுப்பினான்.

## இராசேந்திரன் மக்கள்

முதலாம் இராசாதிராசன் கி. பி. 1044இல் சோழப் பேரரசனானான். அவன் பட்டம் அடைந்தவுடன் ஒரு பெரும்படையுடன் வடக்குநோக்கிச் சென்று ஆகவமல்ல னையும் அவன் மக்களான ஆரும் விக்கிரமாதித்தன் விசயா

தித்தன் என்னும் இருவரையும் முறியடித்தான்; மேலைச் சாளுக்கிய நாட்டில் புகுந்து பல ஊர்களுக்கு எரியூட்டினான்; எதகிரி என்னும் இடத்தில் வெற்றிக்கொடி நாட்டினான். தலைநகரான கலியாணபுரமே சூறையாடப்பட்டது. இராசாதிராசன் அத்தலைநகரத்தில் வீரமுழுக்குச் செய்துகொண்டான்; 'விசய இராசேந்திரன்' என்ற விருதுப்பெயரைப் பெற்றான்; அந்நகரிலிருந்து பல பொருள்களைக் கொண்டுவந்தான். அவற்றுள் ஒன்று வாயிற்காவலர் சிலை. அது இன்று தஞ்சை அரண்மனையிலுள்ள பொருட்காட்சி மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கி. பி. 1053இல் கிருஷ்ணையாற்றங் கரையில் **கொப்பம்** என்னுமிடத்தில் சோழருக்கும் மேலைச் சாளுக்கியர்க்கும் கடும்போர் ஏற்பட்டது. அப்போரில் இராசாதிராசன் இறந்தான். சோழர்க்குத் தோல்வி ஏற்பட இருந்தது. இராசாதிராசன் தம்பியான **இரண்டாம் இராசேந்திரன்** தோல்வியை வெற்றியாக மாற்றினான்; பகைவர் விட்டுச் சென்ற பெரும்பொருளைக் கைப்பற்றினான். அவன் அப்போர்க்களத்திலேயே மணிமுடி சூடினான். பகைவர் நாட்டினுள் கொல்லாபுரம் வரையிற் சென்று அங்கு வெற்றித்தூண் ஒன்றை நாட்டினான்.

ஆகவமல்லன் மீண்டும் வேங்கிநாட்டு அரசியலில் தலையிட்டான்; தன் மக்களான ஆறும் விக்கிரமாதித்தனையும் அவன் தம்பி ஜயசிம்மனையும் கங்கபாடியைத் தாக்கும்படி ஏவினான்; இராசராச நரேந்திரன் மகனும் கங்கைகொண்ட சோழனது மகள் வயிற்றுப் பெயரனுமான கீழைச் சாளுக்கிய **இராசேந்திரனை** அரசனாக விடாமல் வேறொருவனை அரசனாக்கினான். இரண்டாம் இராசேந்திரன் அச்சமயத்தில் காலமானான். அவன் மகனான இராசமகேந்திரனும் காலமானான். இவற்றால் இரண்டாம் இராசேந்திரன் தம்பியான **வீரராசேந்திரன்** (கி. பி. 1063–1069) அரசுகட்டில் ஏறினான். வீரராசேந்

திரன் ஆகவமல்லன் முயற்சிகளை முற்றிலும் முறியடித்தான்.

வீரராசேந்திரனிடம் பல போர்களில் தோற்று ஓடிய ஆகவமல்லன் **கூடல் சங்கமம்** என்னும் இடத்தில் சோழனுடன் போர் புரிவதாக ஒருநாளைக் குறிப்பிட்டான். வீரராசேந்திரன் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான். ஆயின், குறித்த நாளில் ஆகவமல்லன் வரவில்லை. சோழன் ஒரு மாதம் காத்திருந்தான்; பயனில்லை. வீரராசேந்திரன் வெகுண்டெழுந்து சாளுக்கியர் படையை முற்றிலும் முறியடித்தான். ஆகவமல்லன் தன் உடலில் உண்டான நோயின் காரணமாகக் குறித்த நாளில் போருக்கு வரமுடியாமல் அவமானப்பட நேர்ந்ததை எண்ணியும் தன் படைகள் சீரழிந்ததை எண்ணியும் துங்கபத்திரை ஆற்றில் விழுந்து இறந்தான். அவனுக்குப் பின்பு அவன் மகனை **இரண்டாம் சோமேசுவரன்** பட்டம் அடைந்தான். அவன் தம்பியான **ஆறும் விக்கிரமாதித்தன்** தன் தம்பியான சயசிம்மனேடு சேர்ந்து தன் தமையனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யலானன்.

தன் தமையனை விரட்டிச் சாளுக்கியப் பேரரசனுக விரும்பிய ஆறும் விக்கிரமாதித்தன், வீரராசேந்திரன் மகளை மணந்துகொண்டான். சோழன் தன் மற்றொரு மகளைக் கலிங்க மன்னனுக்கு மணம் செய்வித்தான். இவற்றின் விளைவாக ஆறும் விக்கிரமாதித்தன் சாளுக்கிய இளவரசனுய் முடி சூட்டப்பட்டான்.

## **முதற் குலோத்துங்கன்** (கி. பி. 1070–1122)

வீரராசேந்திரன் ஏழு ஆண்டுகளே அரசாண்டான். அக்குறுகிய காலத்தில் அவன் இலங்கையோடும் போரிடல் நேர்ந்தது. அவன் கி. பி. 1069-இல் காலமானன். அவன் மகனை அதிராசேந்திரன்—ஆறும் விக்கிரமாதித்தனுக்கு மைத்துனன் சோழப் பேரரசனுனன். ஆயின்,

எவ்வாருே அவன் கி. பி. 1070இல் கொல்லப்பட்டான். கீழைச்சாளுக்கிய பட்டத்திற்குரிய இராசேந்திரன் **முதற் குலோத்துங்கன்** என்ற பெயருடன் சோழப் பேரரசனுன். இவன் தந்தை வழியில் சாளுக்கியன்; தாய் வழியில் சோழன். நேரான சோழர் பரம்பரையில் அப்பொழுது பட்டம் ஏற்க ஆள் இல்லாமையால் சாளுக்கிய சோழனுன முதற் குலோத்துங்கன் கி. பி. 1070இல் அரசு கட்டில் ஏறினுன். இவன் வழியினர் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் சோழப் பெருநாட்டை ஆண்டனர்.

முதற் குலோத்துங்கன் சாளுக்கிய சோழனுயினும், தமிழ்ப்பற்று நிறைந்தவன்; சிறந்த சிவபக்தன்; இளமைப் பருவத்திலேயே தன் அம்மான்மாருடன் இருந்து அரசியல் பயிற்சியும் போர்ப் பயிற்சியும் நிரம்பப் பெற்றவன்; சிறந்த அரசியல் அறிஞன்.

ஆரும் விக்கிரமாதித்தன் குலோத்துங்கனைத் தன் பகைவனுய்க் கருதினுன். அவனுடைய அரசியல் சூழ்ச்சிகளைப் பொருமல் அவன் தமையனுன இரண்டாம் சோமேசுவரன் குலோத்துங்கன் உதவியை நாடினுன். இதனுல் குலோத்துங்கனுக்கும் விக்கிரமாதித்தனுக்கும் 1075இல் போர் நடைபெற்றது. அப்போரில் இரண்டாம் சோமேசுவரன் தன் தம்பியால் கைதியாக்கப்பட்டான். ஆரும் விக்கிரமாதித்தன் சாளுக்கியப் பேரரசனுக முடி சூடிக்கொண்டான்.

குலோத்துங்கன் ஆட்சியல் பாண்டியனும் சேரனும் தம்மாட்சி பெற முனைந்தனர். குலோத்துங்கன் அவ்விருவரையும் போரில் முறியடித்தான்; தனக்கு அடங்கி ஆளும்படி ஏற்பாடு செய்தான்; கோட்டாறு முதலிய இடங்களில் தன் படைகளை நிலையாக நிறுத்தினுன்; வேங்கி நாட்டை ஆளும்படி தன் மக்களை அனுப்பினுன். அவன் மைந்தர் ஐவர் ஒருவர்பின் ஒருவராய் அவன் காலத்திலேயே வேங்கியை ஆண்டனர். அக்காலத்தில்

ஏறத்தாழக் கி. பி. 1097இல் அனந்தவர்மன் சோழ கங்கன் என்ற கலிங்க அரசன் சோழர்க்கு எதிரியாகக் கிளம்பினான். குலோத்துங்கன் மகனான விக்கிரம சோழன் அவனையும் அவனைச் சேர்ந்த சிற்றரசர்களை யும் அடக்கி ஒடுக்கினான். கி. பி. 1110இல் சோழகங்கன் சோழனுக்குத் திறை செலுத்த மறுத்தான். அவன் குலோத்துங்கன் படைத் தலைவனான கருணாகரத் தொண்டைமானால் போரில் முற்றிலும் முறியடிக்கப்பட் டான். அப்பொழுது நடைபெற்ற போரைப் பற்றிய விவரங்களைக் கூறுவதே **கலிங்கத்துப்பரணி** என்னும் நூலாகும். முதற் குலோத்துங்கன் அவைப்புலவரான **சயங்கொண்டார்** தம் புலமைத்திறனைக் காட்டி இப் பரணியை நன்முறையில் பாடியுள்ளார்.

## விக்கிரம சோழன் (கி. பி. 1118-1135)

விக்கிரம சோழன் ஆட்சியில் அமைதி நிலவி யிருந்தது. அதனால் அவன் சிதம்பரம் நடராசர் கோவி லைப் பல துறைகளில் விரிவாக்கினான்; சீரங்கம் பெரு மாள் கோவிலையும் விரிவாக்கினான். அவன் மகனான **இரண்டாம் குலோத்துங்கன்** ஆட்சியிலும் (கி. பி. 1135—1150) அமைதியே நிலவியிருந்தது. அதனால் அவன் தன் தந்தையைப் பின்பற்றிச் சிதம்பரம் கோவில் திருப்பணிகளில் முற்றிலும் ஈடுபட்டான்; **சேக் கிழாரைக்** கொண்டு **பெரியபுராணம்** பாடுவித்தான். அம்மன்னன் சிதம்பரம் நடராசர் கோவிலில் இருந்த கோவிந்தராசர் சிலையைக் கடலில் எறிந்துவிட்டான். அவன் மகனான **இரண்டாம் இராசராசன்** (கி. பி. 1146-1173) ஆட்சியிலும் சோழப் பெருநாட்டில் அமை தியே நிலைத்திருந்தது. அவன் கும்பகோணத்தை அடுத்த ஓர் ஊரில் **இராசராசேசுவரம்** என்னும் பெரிய சிவன் கோவிலைக் கட்டினான். அப் பெயரே இன்று 'தாராசுரம்' என மருவி வழங்குகின்றது. அவன்

தனக்குப் பிள்ளையில்லாமல் விக்கிரம சோழனுடைய மகள் வயிற்று மைந்தனை இரண்டாம் இராசாதிராசன் என்ற பெயருடன் இளவரசனுக்கினான்.

## இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1163–1179)

இராசாதிராசன் காலத்தில் பாண்டிய அரசபதவி குறித்துப் பங்காளிகள் போர் நடைபெற்றது. இலங்கையரசன் ஒரு பங்காளியை ஆதரித்தான். சோழன் மற்றொருவனை ஆதரித்தான். சோழர்க்கு அடங்கியிருந்த பாண்டியன் பராக்கிரம பாண்டியன்; அவனை எதிர்த்தவன் குலசேகர பாண்டியன். பராக்கிரமன் இலங்கையரசன் உதவியை நாடினான். இராசாதிராசன் குலசேகர பாண்டியனுக்கு உதவி செய்தான். இலங்கைப்படை பராக்கிரம பாண்டியன் மகனை அரசனுக்கியது. பின்பு உண்டான போரில் இலங்கைப்படை முறியடிக்கப்பட்டது. குலசேகரன் அரசனுக்கப்பட்டான். ஆயின், குலசேகரன் இலங்கை அரசனுடன் சேர்ந்துகொண்டு தனக்கு உதவிசெய்த சோழனைப் பகைத்துக்கொண்டான். அதனுல் வெகுண்ட சோழன் குலசேகரனை நாடு கடத்தி வீரபாண்டியனை அரசனுக்கினான்.

## மூன்றும் குலோத்துங்கன் (கி. பி. 1178–1218)

சோழப் பேரரசருள் மூன்றும் குலோத்துங்கன் குறிப்பிடத்தக்கவன். இவன் காலத்திலும் சோழர்க்கும் பாண்டியர்க்கும் பல போர்கள் நடைபெற்றன. சோழன், பாண்டியனுக்கு உதவியாய் வந்த ஈழ அரசனை வென்றான்; கொங்குநாட்டை வென்றான்; சேர மன்னனை அடக்கினான்; கருவூரில் வெற்றி முழுக்கை மேற்கொண்டான்; தன் மகளை இரண்டாம் வல்லாளன் என்ற ஹொய்சள வேந்தனுக்கு மணம் செய்வித்தான்.

சடையவர்மன் குலசேகரபாண்டியன் (கி. பி. 1190–1218) சோழர்க்கு அடங்கவில்லை. அதனுல் மூன்றும்

குலோத்துங்கன் கி. பி. 1205இல் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான்; மதுரையைச் சூறையாடினன்; அரண்மனையை இடித்துத் தரைமட்டமாக்கினன்;

**தெலுங்குச் சோழர்** முதலாம் இராசராசன் காலம் முதல் சோழர்க்கு அடங்கிவந்தனர். சோழப் பேரரசு வலிகுன்றத் தொடங்கியதும், அவர்கள் தம்மாட்சி பெற விரும்பினர். அவருள் ஒருவன் கி. பி. 1193இல் காஞ்சியைக் கைப்பற்றினன். குலோத்துங்கன் அவனை வென்று காஞ்சியை மீட்டான். குலோத்துங்கன் காலத்தில் சேரர் படிப்படியாக வளர்ச்சி பெற்றுவந்தனர். அவர்கள் சோழர்க்கு அடங்கியவராய் இருந்துகொண்டே தங்கள் வலிமையைப் பெருக்கிவந்தனர்.

## மூன்றும் இராசராசன் (கி. பி. 1216–1246)

மைசூர் நாட்டில் துவரை என்ற துவார சமுத்திரத்தைத் தலைநகராய்க் கொண்டு **ஹொய்சளர்** என்ற அரச மரபினர் மைசூர் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தனர். அவர்கள் மேலைச் சாளுக்கியருக்கு அடங்கியிருந்தனர்; மேலைச் சாளுக்கியர் வலிகுன்றத் தொடங்கியதும், படிப்படியாகத் தம்மாட்சியை விரிவாக்கினர்; அதிகைமான்களையும் பிறரையும் வென்று சோழர் மதிக்கத்தக்க வலிமையை அடைந்தனர். மூன்றும் குலோத்துங்கன் ஆட்சியிறுதியில் சோழப் பேரரசு கலகலக்கத் தொடங்கியது. மூன்றும் இராசராசன் ஆட்சியில் **முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன்** (கி. பி. 1216–1238) கி. பி. 1218இல் சோழநாட்டைத் தாக்கினன்; மூன்றும் குலோத்துங்கன் மதுரையை அழித்தாற் போலவே பாண்டியன் தஞ்சாவூரையும் உறையூரையும் பாழாக்கினன். கரிகாற் சோழன் தன்மீது **பட்டினப்பாலை** என்னும் நீண்ட பாடலைப்பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனர் நினைவாக விட்ட **பதினறுகால் மண்டபத்தை** மட்டும் இடிக்காமல் விட்டுவிட்டான் என்று ஒரு கல்வெட்டுக் கூறு

கின்றது. நாடு துறந்த மூன்றும் இராசராசன் தன் மனைவியோடும் மைந்தனோடும் பாண்டியனிடம் சென்று குறையிரந்தான். பாண்டியன் அவனைச் சோழநாட்டை ஆளும்படி விடுத்து அகன்றான்.

சோழர்க்கு அடங்கித் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு பகுதியை ஆண்டுவந்த **கோப்பெருஞ்சிங்கன்** சோழ அரசனை வீழ்த்திப் பேரரசனாக விழைந்தான். அவ்வமயம் மூன்றும் இராசராசன் தனக்கு நாடளித்த பாண்டியனைப் பகைத்துக்கொண்டான். அதனால் சுந்தர பாண்டியன் மீண்டும் சோழ நாட்டின்மீது படையெடுத்து இராசராசனை விரட்டினான். இராசராசன் காஞ்சியில் தங்கியிருந்த ஹொய்சளரோடு சேர்ந்துகொள்ள விரும்பி வடக்கு நோக்கிச் சென்றான். வழியில் கோப்பெருஞ் சிங்கனால் தாக்கப்பட்டுச் சிறை செய்யப்பட்டான். ஹொய்சள மன்னனான இரண்டாம் நரசிம்மன் கோப்பெருஞ்சிங்கனை முறியடித்து இராசராசனை அரசனாக்கினான்.

## மூன்றும் இராசேந்திரன் (கி. பி. 1246–1279)

இவன் மூன்றும் இராசராசனின் மகன். இவன் அரசியல் திறமையும் போர்த்திறமையும் அற்றவன். இவன் காலத்து **ஹொய்சளன் வீர இராமநாதன்** என்பவன். இவன் காலத்துப் பாண்டியன் **மாறவர்மன் முதலாம் குலசேகரன்** என்பவன். அவன் ஹொய்சளனையும் சோழனையும் கி. பி. 1279இல் நடைபெற்ற போரில் முறியடித்தான். இப்போருடன் சோழப்பேரரசு முடிவுற்றது. குலசேகரன் தமிழகம் முழுமைக்கும் பேரரசனானன்.

## அரசியல்

### பெருநாடும் உட்பிரிவுகளும்

சோழராட்சி ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் தென்னிந்தியாவில் நிலைபெற்றிருந்தது. சோழப் பெருநாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகப் பிரிந்திருந்தது. சில மண்டலங்களில் **நாடு** என்பது **கூற்றம்** என்றும் பெயர் பெற்றது. ஒவ்வொரு நாடும் பல ஊர்களையும் சதுர்வேதிமங்கலங்களையும் கொண்டிருந்தது. ஒவ்வொரு **வளநாடும்** இரண்டிரண்டு ஆறுகளுக்கு நடுவில் அமைந்திருந்தது. உய்யக்கொண்டார் வளநாடு என்பது, அரிசில் ஆற்றுக்கும் காவிரியாற்றுக்கும் நடுவில் அமைந்திருந்த நிலப்பரப்பின் பெயராகும். வளநாடுகளின் பெயர்கள் சோழ மன்னர்களின் இயற்பெயரையும் விருதுப் பெயரையும் பெற்றிருந்தன. நாடுகளும் கூற்றங்களும் அவ்வவற்றிலிருந்த பேரூர் ஒன்றைத் தலைநகரமாய்க் கொண்ட காரணத்தால் அப்பேரூர்களின் பெயர்களையே தம் பெயர்களாய்க்கொண்டு விளங்கின. நாங்கூர் நாடு என்பது நாங்கூரைத் தலைநகராய்க் கொண்ட நாடாகும். ஆவூரைத் தலைநகராய்க் கொண்ட கூற்றம் ஆவூர்க்கூற்றம் எனப்பட்டது. இக்கால மாகாணங்கள் போன்றவை அக்கால மண்டலங்கள்; இக்கால மாவட்டங்கள் போன்றவை அக்கால வளநாடுகள்; இக்காலத் தாலுகாக்கள் போன்றவை அக்கால நாடுகளும் கூற்றங்களும் என்பவை.

### அரசன்

அரசனின் மூத்த மகனே தந்தைக்குப் பின்பு பட்டத்தை அடைந்தான். தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே அம்மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி அவனுக்கு

அரசியல் பயிற்சியும் போர்ப் பயிற்சியும் அளித்தல் மரபு. இளவரசுப்பட்டம் பெற்றவன் இறந்துவிடின் அவன் தம்பி அப்பட்டத்தைப் பெறுவது வழக்கம்.

அரசனுக்கு உதவியாக இருந்து நாட்டு ஆட்சியைக் கவனித்தவர் அமைச்சர் ஆவர். அவர்கள் 'உடன் கூட்டத்து அதிகாரிகள்' என்று பெயர் பெற்றனர். அவர்கள் அரசனால் அளிக்கப்பட்ட பட்டங்களையும் பிற சிறப்புக்களையும் பெற்றிருந்தனர்.

## அரசியல் அதிகாரிகள்

அமைச்சர்களுக்கு உதவியாக அரசியலை நடத்த **அதிகாரிகள்** பலர் இருந்தனர். அவர்கள் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் நிறைந்தவர். '**திருமந்திர ஓலை**' என்பது ஓர் அதிகாரியின் பெயர். அரசன் கூறும் செய்தி களையும் கட்டளைகளையும் நேரில் கேட்டு ஓலையில் எழுது வது அவன் வேலை. அவன் எழுதியதை மேற்பார்த்துக் கையொப்பமிடும் உயர் அலுவலன் '**திருமந்திர ஓலை நாயகம்**' என்பவன் ஆவன். அரசனுடைய ஓலைகளை உரியவர்க்குச் சேர்ப்பித்தலும் விடைதருதலும் கவனித்த வன் **விடையில் அதிகாரி** எனப்பட்டான். அரசாங்கத் துறைகளில் நிகழும் நிகழ்ச்சிகளை அரசனது ஆணையின் படி சென்று ஆராயும் அலுவலர் **கருமம் ஆராயும் அதிகாரிகள்** எனப்பட்டனர். தன் நாட்டு ஊர்களில் களவு குழப்பம் முதலியன நிகழாமல் காத்து உள் நாட்டில் அமைதியை நிலைநிறுத்தி வந்தவன் **நாடுகாவல் அதிகாரி** எனப்பட்டான். அக்காலத்தில் நிலவரியே அரசாங்கத்திற்குச் சிறந்த வருவாயாகும். ஆதலால் விளை நிலங்களை நன்கு அளந்து தரம் இட்டு அவற்றிற்கு உரிய வரிகளை விதித்து ஆண்டுதோறும் அவ்வரிகளை வாங்குதற்கு **நிலவரிக் கழகம்** ஒன்று இருந்தது. அது '**புரவுவரித் திணைக்களம்**' எனப்பெயர் பெற்றது. அது, இக்கால ரெவின்யூ போர்டுக்குச் சமம் என்னலாம்.

நிலவரிக்கழகத்தில் பலவகை அலுவலர் இருந்தனர். அவர்கள் புரவுவரித்திணைக்கள நாயகம், புரவுவரித்திணைக் களக் கண்காணி, வரிப்பொத்தகம், வரிப்பொத்தக நாயகம், வரிப்பொத்தகக் கணக்கு, வரியிலிடு, முக வெட்டி, கீழ் முகவெட்டி, பட்டோலை என்பவராவர்.

**புரவுவரித்திணைக்கள நாயகம்** என்பவன் நிலவரிக் கழகத்தின் தலைவன் ஆவன். **புரவவரித்திணைக்களக் கண்காணி** என்பவன் ஒவ்வோர் ஊருக்கும் சென்று, நிலவரிக் கணக்குகள் ஒழுங்காக எழுதப்பட்டுள்ளனவா என்பதை மேற்பார்த்து வருபவன். அரசாங்கத்திற்கு ஒவ்வோர் ஊரிலிருந்தும் வரியாக வரத்தக்க தொகை இவ்வளவு என்பதை உணர்த்தும் புத்தகம், **வரிப்பொத்தகம்** எனப்பட்டது. அப்புத்தகம் வைத்திருந்த அதிகாரிகளும் வரிப்பொத்தகம் என்றே அந்நாளில் பெயர் பெற்றனர். அவர்தம் தலைவன் **வரிப்பொத்தக நாயகம்** எனப் பெயர் பெற்றான். ஒவ்வோர் ஊர்க் குடிமக்களிடம் வாங்க வேண்டிய பலவகை வரிகளும் இத்துணைய என்பதும், அவற்றுள் அரசாங்கத்திற்குச் செலுத்தியுள்ள தொகை இஃது என்பதும் செலுத்தாமல் எஞ்சிநிற்கும் தொகை இஃது என்பதும் எழுதப்பட்ட கணக்குப் புத்தகம் **வரிப் பொத்தகக் கணக்கு** எனப்பட்டது. அக்கணக்கினை வைத்திருந்த அலுவலனும் அப்பெயரையே பெற்றான். நிலவுரிமை பற்றி அவ்வப்பொழுது உண்டாகும் மாறுதல்களை வரிப்புத்தகத்தில் குறித்து வைப்பவன் **வரியிலிடு** எனப்பட்டான். ஊர்களின் பெயர்கள் முதலியவற்றிற்கு அட்டவணை தயாரித்து அவற்றை வரிப்புத்தகம் முதலியவற்றில் எளிதில் தேடிப்பார்ப்பதற்கு உதவிய அதிகாரி **முகவெட்டி** எனப்பட்டான். அவனுக்கு உதவி செய்தவன் **கீழ்முகவெட்டி** எனப்பட்டான். திணைக்களத்தார் அலுவல்கள் இவை என்று நாள்தோறும் நிகழ்ச்சிக் குறிப்பு எழுதியவன் **பட்டோலை** எனப்பட்டான். நாடுகளை அளந்து பல கூறுகளாகப் பிரித்தவர்கள் நாடுகூறு

செய்வார் எனப் பெயர்பெற்றனர். விளை நிலங்களுக்குத் தரம் கண்டு வரி விதித்த அதிகாரிகள் **நாடுவகை செய்வார்** எனப்பட்டனர்.

இத்தகைய அதிகாரிகள் அனைவரும் மன்னனிடம் நிலம் பெற்று அதன் வருவாயையே ஊதியமாய்க்கொண்டு வாழ்ந்தனர். அந்நிலம் அந்த உயர் அலுவலனுக்கு மட்டும் உரியது. அவன் மரபினர் அவனுக்குப்பின் அந்நிலத்தின் பயனை அநுபவிக்க இயலாது. அருந் தொண்டு ஆற்றிய அதிகாரிகள் மன்னனால் நிலம் வழங்கப்பட்டனர். அத்தகைய நிலமே அவ்வதிகாரிகளுக்கும் அவர்தம் வழியினர்க்கும் உரிமையுடையது.

மன்னன் தன் அரசியல் அலுவலர்க்குத் தன் இயற்பெயரோடு சேர்த்துச் சில பட்டங்களை வழங்குதல் வழக்கம். அவை—மாராயன், அரையன், பேரரையன், விழுப்பரையன், மூவேந்த வேளான், தொண்டைமான், பல்லவராயன், கச்சிராயன், காடவராயன், சேதிராயன், காளிங்கராயன், மழவராயன், மாவலி வாணராயன், கேரள ராசன், வாணகோவரையன், சோழகோன், நாடாள்வான், பிரம்மாதிராசன், பிரம்மமாராயன் முதலியன. இவற்றுள் மாராயன், பேரரையன் என்னும் பட்டங்கள் அரசியல் அலுவலர்க்கேயன்றிப் பிற துறைகளிலும் மேம்பட்டவர்களுக்கும் அளிக்கப்பட்டன. சிறந்த கூத்தன் நாடகப் பேரரையன், நிருத்தப் பேரரையன், வாச்சிய மாராயன் என்ற பட்டங்களைப் பெற்றான்.

அரசியல் அலுவலர் பெருந்தரம், சிறுதரம் என்று இருபிரிவினராய் இருந்தனர். **பெருந்தரம்** என்ற அதிகாரிகள் இக்காலப் பதிவுபெற்ற அதிகாரிகள் என்னலாம்; **சிறுதரம்** என்பவர் இக்காலப் பதிவு பெறாத அரசாங்க அலுவலர் போன்றவர் என்னலாம்.

ஆர். சே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

## சிற்றூர் ஆட்சி

ஊர் ஆட்சி, நகர ஆட்சி, நாட்டு ஆட்சி, மண்டல ஆட்சி ஆகிய இவையனைத்தும் பெருநாட்டின் நடு ஆட்சியுடன் தொடர்பு கொண்டிருந்தன. நடு ஆட்சிக்குரிய உயர் அலுவலர் கிராம ஆட்சி வரையிலும் தொடர்பு கொண்டு எல்லா அலுவல்களையும் மேற்பார்த்துவந்தனர். ஊர் அவைகள் இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்பட்டுவந்தன என்பதை உத்தரமேரூர்க் கல்வெட்டுத் தெளிவாக விளக்குகின்றது. ஊர், சில பகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பகுதி மக்களும் தம் பிரதிநிதியாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பர். அங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பெறுபவர் தம் சொந்த மனையில் வீடு கட்டி வாழ்பவராக இருத்தல்வேண்டும், கால்வேலி நிலமுடையவராயும் சிறந்த கல்வியறிவுடையவராயும் ஒழுக்கமுடையவராயும் முப்பத்தைந்துக்கு மேல் எழுபதுக்கு உட்பட்ட வயதினராயும் இருத்தல்வேண்டும் என்பது விதி. ஒருமுறை ஆட்சிக் குழுவில் உறுப்பினராயிருந்து கணக்குக் காட்டாமலிருந்தவரும் தீய பழக்க வழக்கங்கள் உடையவரும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறார். ஊரின் ஒவ்வொரு பகுதியும் 'குடும்பு' எனப்பட்டது. ஒவ்வொரு குடும்பினரும் தாமே கூட்டம் நடத்தி, உறுப்பினராகும் தகுதியுடையவர் பெயர்களைத் தனித்தனி ஓலைத்துண்டுகளில் எழுதுவர்; அவ்வோலைகளைத் ஒன்றுகக்கட்டி அக்குடும்பின் பெயர் எழுதப்பெற்ற வாயோலை ஒன்றைச் சேர்த்துக்கட்டி அவ்வோலைக் கட்டை ஒரு குடத்தில் இடுவர்.

இவ்வாறே எல்லாக் குடும்புகளின் குடங்களும் குறித்த நாளில் ஊர் மன்றத்திற்குக் கொண்டுவரப்படும். அந்நாளில் ஊர்மக்கள் அனைவரும் கூடியிருப்பர். அக்கூட்டத்திற்கு அரசன் ஆணையின்படி அரசாங்க உயர் அலுவலர் ஒருவர் வந்திருந்து தேர்தலைக் கவனிப்பார். அவ்வூர்க் கோவில் அருச்சகர் அனைவரும் அங்கு

வந்திருப்பர். அவருள் வயது முதிர்ந்த ஒருவர் குடும்பு களின் ஓலைக்கட்டுகள் இருந்த குடங்களை மேல்தூக்கிக் கூட்டத்தின் நடுவில் நிற்பர்; ஒன்றும் அறியாத இளைஞனைக்கொண்டு அக்குடத்திலிருந்த ஓலைக்கட்டை அவிழ்த்து வேறொரு குடத்திலிட்டுக் குலுக்கி ஒன்றை எடுக்கச் செய்வர். அது நடுவன் கையில் கொடுக்கப் பெறும். அவன் தன் ஐந்து விரல்களையும் அகல விரித்து அவ்வோலைத்துண்டை உள்ளங்கையில் வாங்குவான்; அதில் எழுதப்பெற்றுள்ள பெயரை அனைவரும் கேட்கப் படிப்பான். அதன் பின்பு அப்பெயர் ஓர் ஓலையில் எழுதப்படும். அவ்வோலையில் எழுதப்பெற்றவரே தேர்ந் தெடுக்கப்பெற்றவராவர். இங்ஙனமே எல்லாக் குடும்பு களுக்கும் உரிய உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பெறுவர்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஊர் ஆட்சி அலுவல்கட்குத் தக்கபடி பல உட்குழுவினராகப் பிரிக்கப் படுவர். ஒவ்வோர் உட்குழுவும் **வாரியம்** எனப்படும். ஊரிலுள்ள அறநிலையங்களைக் கண்காணிப்பது, அறங் களை ஏற்று நடத்துவது, நியாய விசாரணை செய்து முடிவு கூறுவது ஆகியவை **சம்வற்சரவாரியர்** கடமைகளாகும். ஏரி, குளம் முதலிய நீர்நிலைகளைப் பாதுகாத்தலும் பயிர்களுக்கு நீரைப் பாய்ச்சுவித்தலும் **ஏரிவாரியர்** கடமைகளாகும். புன்செய் நிலங்களையும் தோட்டங்களையும் பற்றிய அனைத்தையும் கவனித்தல் **தோட்டவாரியர்** பொறுப்பாகும். அரசனுக்குக் குடிகள் செலுத்தவேண்டிய நிலவரியையும் பிற வரிகளையும் பெற்று அரசாங்கத்திற்கு அனுப்புதல் **பஞ்சவாரியர்** கடமையாகும். ஊரில் வழங்கும் பொன் நாணயங்களை ஆராய்வது **பொன்வாரியர்** கடமையாகும்.

ஊராட்சியில் **கணக்கன்** இருந்தான்; பணிமக்கள் இருந்தனர். இவர்கள் பிழைப்புக்கு ஊர்மக்கள் நெல் முதலியவற்றினை வழங்கிவந்தனர். மேலே கூறப்பெற்ற

வாரியங்கள் தவிர ஊர்களின் நிலைக்குத் தக்கபடி வெவ் வேறு வாரியங்கள் இருந்து செயற்படுதலும் உண்டு.

பல்லவர் காலத்தில் இருந்தாற்போலவே தறி, செக்கு, மனை, அங்காடி, நாடு, ஊர், திருமணம் முதலிய அனைத்திற்கும் வரி விதிக்கப்பட்டது. அக்கால வரிகள் இறை, **பாட்டம், பூட்சி, கூலி, ஆயம், காணம், வரி** என்று பலவாறு பெயர் பெற்றன. **உல்கு** என்பது சுங்கவரி. அது வாணிகத்தின் பொருட்டுக் கடல் வழி யாகக் கப்பல்களிலும் உள்நாடுகளிலிருந்து வண்டிகள் மூலமாகவும் வந்த பண்டங்களுக்கு வாங்கிய வரியாகும். அது ஆயம் என்றும் சொல்லப்படும். விநியோகம் என்ற பெயரும் வரிக்குப் பயன்பட்டது. வெள்ளங்களில் கரைகள் பழுதடைந்தால் அவற்றைப் பழுதுபார்க்க வாங்கப்பட்ட வரி ஆற்றின் பெயரோடு கரையையும் சேர்த்து **விநியோகம்** (காவிரிக்கரை விநியோகம் என்ருற் போல) எனப் பெயர் பெற்றது. ஊராட்சி நடத்துவதற்கு வாங்கப்பட்ட வரி 'ஊரிடு வரிப்பாடு' எனப்பட்டது.

நிலவரி முதலியவற்றைச் செலுத்தாமல் வேறு ஊர் களுக்குச் சென்றுவிட்டவரது நிலத்தை ஊரவையார் கைப்பற்றி அதனை விற்று வரும் தொகையை வரிகளுக்கு ஈடு செய்வது வழக்கம். '**பெருவிலை**' என்பது இக்கால ஏலத்தைக் குறிக்கப் பயன்பட்ட சொல்லாகும்.

## நில அளவும் பிறவும்

சோழப் பெருநாடு முழுமையும் சோழர் ஆட்சிக் காலத்தில் மூன்றுமுறை அளக்கப்பட்டது. முதல் இராசராச சோழன் காலத்தில் முதன் முறையாக நில அளவு எடுக்கப்பட்டது. நிலம் அளந்த கோல் 'உல களந்த கோல்' எனப்பட்டது. அது பதினறு சாண் நீளமுடையது. நிலங்கள் நீர்நிலம், கொல்லை, நத்தம், காடு என்று வகுக்கப்பட்டன. நீர்நிலை என்பது நன்செய் நிலம்; கொல்லை என்பது புன்செய். நத்தம்

என்பது மக்கள் வாழும் ஊர். **குழி, மா, வேலி** என்பன நில அளவைப் பெயர்கள். நூறு குழி கொண்டது ஒரு மா. இருபது மா கொண்டது ஒரு வேலி. நிலம் அளக்கப்பட்டு அதன் எல்லைகள் எளிதில் தெரியும்படி கற்கள் நடுவது அக்கால வழக்கம். அக்கற்கள் 'புள்ளடிக் கற்கள்' எனப்பட்டன. திரிசூலம் குறிக்கப்பெற்ற கற்கள் சிவன் கோவிலுக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லையைக் குறிக்கப் பயன்பட்டன. இவ்வாறே சக்கரம் பொறிக்கப்பட்ட கற்கள் பெருமாள் கோவில் நிலங்களுக்குப் பயன்பட்டன. சமணர் கோவிலுக்கு விடப்பட்ட நிலங்களில் குண்டிகை அல்லது முக்குடை பொறிக்கப்பட்ட கற்கள் பயன்படுத்தப்பட்டன.

சோழப் பெருநாடு முழுமையும் அளந்து கணக்கிட்டவன் 'உலகளந்தான்' என்ற பட்டம் பெற்றான். ஒவ்வோர் ஊரிலும் வரி விதிக்கப்படாமல் சில இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவை கோவில்கள், குளம், நந்தவனம், நெல்லடிக்கும் களம், ஓடை, ஆறு, படுகை, பெருவழி, மன்றம், கடை, கடைத்தெரு, உவர் நிலம் முதலியனவாகும். முதற் குலோத்துங்கன் ஆட்சியில் இரண்டாம் முறை நிலம் அளக்கப்பட்டது. மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் சோழப் பெருநாடு முழுமையும் மூன்றாம் முறையாக அளந்து கணக்கெடுக்கப்பட்டது.

தொன்றுதொட்டு உழவுத் தொழிலையே மேற்கொண்டு நிலங்களை உழுது பயிரிட்டுவந்த குடிகளுக்கே உரிமையுள்ள நிலங்கள் ஒருவகை. அந்நிலங்கள் வரி விதிக்கப்பட்டன. கோவில்களுக்கும் வேதியர்க்கும் சிறந்த சான்றோர்க்கும் விடப்பட்ட நிலங்கள் மற்றொரு வகையாகும். சிவன் கோவிலுக்கு விடப்பட்ட நிலம் **தேவதானம்** எனப்பட்டது; பெருமாள் கோவிலுக்கு விடப்பட்ட நிலம் **திருவிடையாட்டம்** எனப்பட்டது; சமணர் பௌத்தர் கோவில்களுக்கு விடப்பட்ட நிலம்

**பள்ளிச் சந்தம்** எனப்பட்டது. மடங்களுக்கு விடப்பட்ட நிலம் **மடப்புறம்** எனப் பெயர்பெற்றது. சிவயோகிகள் முதலிய சான்றோர்க்கு உணவு வழங்கிய அறச்சாலை களுக்கு விடப்பட்ட நிலம் **சாலாபோகம்** எனப்பட்டது. வேதியர்களுக்கு விடப்பட்ட நிலம் **பிரமதேயம்** எனப் பட்டது. இவ்வகை நிலங்களுக்கு வரி விதிக்கப்படவில்லை. எனவே, இவை **இறையிலி நிலங்கள்** எனப் பெயர் பெற்றன.

சில குறிப்பிட்ட செயல்களைச் செய்வதற்காக அர சாங்க அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் சீவிதம், முற்றூட்டு, போகம், காணி, பட்டி, பற்று எனப் பலவாறு பெயர்பெற்றது. இவற்றுக்கும் வரி விதிக்கப்பட வில்லை. கோவில் அருச்சகர், மருத்துவர், கூத்தர், இசைவாணர் முதலியோர் இச்சீவிதம் பெற்று வாழ்ந் தனர்.

சங்ககாலத்தில் கரிகாற் சோழன் காவிரியின் கரை களை உயர்த்திச் சோழ நாட்டினை வளப்படுத்தினான் என் பது முன்பு கூறப்பட்டதன்றோ! பிற்காலச் சோழர்கள் காவிரியிலிருந்து பல கிளையாறுகளை வெட்டுவித்தனர். பழைய **ஆறுகள்** திருத்தி அமைக்கப்பெற்றன. அவை சோழ அரசன் பெயர்களைப் பெற்றன. அவை வீரசோழ வடவாறு, மதுராந்தக வடவாறு, உய்யக் கொண்டான் ஆறு, முடிகொண்டான் ஆறு, வீரசோழன் ஆறு, விக்கிரமன் ஆறு எனப் பலவாறு பெயர்பெற்றன. சோழ மன்னர்களால் வெட்டுவிக்கப்பெற்ற **ஏரிகள்** பல வாகும். அவை வீரநாராயணன் ஏரி, மதுராந்தகப் பேரேரி, கண்டராதித்தப் பேரேரி, செம்பியன் மாதேவிப் பேரேரி, சுந்தர சோழப் பேரேரி, குந்தவைப் பேரேரி, சோழகங்கம் எனப் பலவாறு பெயர்பெற்றன. வீர ராசேந்திர சோழன் காவிரியில் அமைத்த **அணை**யே இன்று **பேரணை** என்பது. கிளையாறுகளிலிருந்து பல கால்வாய்கள் வெட்டுவிக்கப்பட்டன. காவிரியும் அதன்

கிளையாறுகளும் அவற்றின் கால்வாய்களும் நீரை நாடெங்கும் பரப்பிச் சோழநாட்டைச் சோறு கொழிக்கும் நாடாக்கின. ஒவ்வொரு சிற்றூரிலும் நீர்ப்பாசன வசதியைக் கவனிக்க ஊரவையில் **ஏரி வாரியப் பெருமக்கள்** இருந்தனர். ஏரிகள் ஆண்டுதோறும் ஆழமாக வெட்டப்பட்டன; அவற்றின் கரைகள் உயர்த்தப்பட்டன. ஏரி நீரைப் பெற்ற மக்கள் நீர் வரி செலுத்தினர். அவ் வரி 'ஏரி ஆயம்' எனப்பட்டது. ஒரு நாட்டின் நிலங்கள் **பூமி** என்னும் பேரளவை கொண்டு மதிப்பிடப்பட்டன. திருக்கோவலூரைத் தலைநகராய்க் கொண்ட மலையமான் நாடு இரண்டாயிரம் பூமியைப் பெற்றிருந்தது. ஐயங்கொண்ட சோழமண்டலம் நாற்பத்தெண்ணாயிரம் பூமியைப் பெற்றிருந்தது. வேங்கை நாடு ஆறாயிரம் பூமியைப் பெற்றிருந்தது.

## கைத்தொழிலும் வாணிகமும்

சோழப் பேரரசர் பல நாடுகளை வென்று பெருநாட்டை அமைத்து ஆண்டவர். அதனால் போர்க்கருவிகள் நிரம்பத் தேவைப்பட்டன. போர்க்கருவிகளைச் செய்யும் கொல்லத்தொழில் செழித்து வளர்ந்தது. அரண்மனைகளும் மாடமாளிகைகளும் மிகவுயர்ந்த விமானங்களைக் கொண்ட கோவில்களும் கட்டுவதற்குக் கொல்லர், தச்சர் முதலியோர் தேவைப்பட்டனர். கல் உருவங்களைச் சமைக்கக் கல் தச்சர் தேவைப்பட்டனர். இவர் தம் கைத்தொழில்கள் அக்காலத்தில் நன்கு வளர்ந்தன. ஆடை நெய்தல், பாத்திரங்கள் செய்தல் முதலிய பல வகைத் தொழில்களும் சோழப் பெருநாட்டில் வளர்ச்சியடைந்தன. உள்நாட்டு வாணிகத்திற்குப் பாதுகாக்கப்பட்ட பெருவழிகளும் சிறுவழிகளும் இருந்தன. பெரும் படைகள் சோழ நாட்டிலிருந்து வடக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் சென்று கடும் போர்கள் புரிந்தன என்பதை நோக்க, அக்காலத்தில் பெருவழிகள் அமைந்திருந்தமை

அறியப்படும். **கொங்கப் பெருவழி, வடுகப் பெருவழி** என்பன போன்ற பெருவழிகள் அக்காலத்தில் இருந்தன. பெருவழிகளிற் காவற்படைகள் அமைந்திருந்தன. வணிகர் கூட்டமாகச் சென்று உள்நாட்டு வாணிகம் செய்தனர். அக் கூட்டம் **வாணிகச் சாத்து** எனப்பட்டது. அக் கூட்டத்தின் தலைவன் **சாத்தன்** எனப்பட்டான்; அவருட் பெரியவன் **மாசாத்தன்** என்றும் **மாசாத்துவான்** என்றும் பெயர் பெற்றான்.

சோழர் காலத்தில் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் சீனத்துக்கும் **கடல் வாணிகம்** பெரிய அளவில் நடைபெற்றது. **நாகப்பட்டினம், மயிலாப்பூர், பழைய காயல்** முதலியன துறைமுகப்பட்டினங்களாய் விளங்கின. சோழநாட்டு வணிகர் அராபியருடனும் பாரசீகருடனும் சீனர் முதலியோருடனும் வாணிகம் செய்தனர். மேற்கு நாடுகளிலிருந்து குதிரை வாணிகம் சிறப்பாக நடைபெற்றது. கிழக்கு நாடுகளிலிருந்து மணப்பொருள்களும் பட்டாடைகளும் சோழப் பெருநாட்டில் இறக்குமதியாயின. கடல் வாணிகம் செய்தவருள் மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சுவண்ணத்தார், நாஞதேச – திசையாயிரத்து – ஐந்நூற்றுவர் என்ற பல குழுவினர் குறிப்பிடத்தக்கவர்.

**மணிக்கிராமம்** என்பது அரசனால் வணிகர் பெற்ற பட்டமாகும். இவர்கள் உறையூர், காவிரிப்பூப்பட்டினம் முதலிய பெரிய நகரங்களில் இருந்து வாணிகம் செய்தவராவர். நகரத்தார் என்பவர் பெரிய நகரங்களில் தங்கி வாணிகம் செய்தவராவர். இவர்கள் வாணிகத் தொழிலுடன் தாம் தங்கிய நகரத்து ஆட்சியையும் கவனித்துவந்தனர். இலங்கையிலிருந்து வந்து தமிழ்நாட்டில் தங்கி வாணிகம் செய்தவர் **வளஞ்சியர்** எனப்பட்டனர். அவர்கள் தமிழகத்தில் பல அறங்களைச் செய்தனர். **அஞ்சு வண்ணத்தார்** என்பவர் முஸ்லிம் வணிகராவர். அவர்கள் **சோனகர்** என்றும் பெயர் பெற்றனர். அவர்கள் துறைமுக

நகரங்களில் தங்கி வாணிகம் செய்தனர். நானாதேச – திசையாயிரத்து – ஐந்நூற்றுவர் என்பவர், ஐந்நூற்று வரைக் கொண்ட குழுவினர். அவர்கள் புதிய ஊர்களை ஏற்படுத்தி அங்குத் தங்கி வாணிகம் செய்தனர். அவர் கள் தங்கிய ஊர்கள் **வீரபட்டினம்** எனவும், **எரிவீர பட்டினம்** எனவும் பெயர்பெற்றன.

சோழப் பேரரசர் சீன நாட்டிற்குத் தங்கள் தூதர் களை அனுப்பினர் ; பல பொருள்களைச் சீன அரசனுக்குப் பரிசளித்தனர். இத்தகைய அரசியல் உறவினால் சீனத் தொடு நடைபெற்ற கடல்வாணிகம் நன்கு வளர்ச்சி யடைந்தது. அரேபியாவிலிருந்து ஆண்டுதோறும் மிகுதி யான குதிரைகள் கடல்வழியே சோழநாட்டுக்கும் பாண் டிய நாட்டுக்கும் வந்தன. பெரும் பொருள் கொடுத்து அக் குதிரைகள் வாங்கப்பட்டன. சுங்க வருவாய் கடல் வாணிகத்தினால் மிகுந்தது.

## நாணயங்கள்

சோழ மன்னர் பொற்காசுகளை அச்சிட்டு வெளிப் படுத்தினர். இதுவரையில் கிடைத்துள்ள சோழவேந்தர் நாணயங்களுள், உத்தமசோழன் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பெற்ற பொற்காசுதான் பழையது. அக் காசின் நடுவில் புலி உருவமும், அதன் வலப் பக்கத்தில் மீன் உருவமும் பொறிக்கப்பெற்றுள்ளன. அக்காசின் ஓரத்தில் உத்தம சோழன் பெயர் கிரந்த எழுத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. அக்காசு வட்டமானது. மதுராந்தக தேவன் மாடை என்ற பொற்காசும் உத்தம சோழன் காலத்ததேயாகும். ‘மாடை’ என்பது நாற்பது குன்றிமணி எடையுள்ளது. இரண்டு காசு கொண்டது ஒரு மாடை. எனவே ஒரு காசு இருபது குன்றிமணி எடை உள்ளதாகும். இவ்வாறு ஒவ்வோர் அரசன் காலத்திலும் காசுகள் வெளியிடப்பட்டன. ஓர் அரசன் காலத்தில் வெளியிடப் பெற்று அவன் ஆட்சியில் வழங்கி

வந்த காசு 'அன்றுடு நற்காசு' எனப்பட்டது; அவனுக்கு முற்பட்ட அரசர்களின் காசு 'பழங்காசு' எனப்பட்டது. 'ஈழக்காசு' என்னும் பெயருடன் ஒரு வகைப் பொற்காசுகள் சோழர் ஆட்சிக்காலத்தில் வழங்கிவந்தன. 'ஈழக் கருங்காசு' என்னும் நாணயமும் வழக்கில் இருந்தது. வெள்ளி நாணயங்களும் சோழர் காலத்தில் வழக்கில் இருந்தன. 'காணம்' என்னும் பெயர் கொண்ட நாணயம் வழக்கில் இருந்தது. 'அக்கம்' என்ற பெயருடன் ஒரு நாணயமும் வழங்கி வந்தது. 'திரமம்' என்னும் பெயருடன் ஒரு நாணயமும் வழக்கில் இருந்தது.

சோழர்களைப் போலவே பாண்டியர்களும் நாணயங்களை வெளியிட்டனர். அவை பொன்னாலும் செம்பாலும் செய்யப் பெற்றவை. கோளகை, குளிகை, காணம், பொன் என்னும் பெயர்களில் காசுகள் வழங்கிவந்தன. 'அவநிப சேகரன்', 'சோணாடு கொண்டான்', 'எல்லாம் தலையானான்' என்ற பெயர்களுடன் சில நாணயங்கள் வழங்கிவந்தன. இவை பாண்டியர் சிலரின் விருதுப்பெயர்களாகும். காசின் ஒரு பக்கத்தில் இரு கயல்களின் வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன; மற்றொரு பக்கத்தில் அதனை வெளியிட்ட அரசனின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. பத்துப் பொன் கொண்டது ஒரு காசு; பத்துக் காணம் கொண்டது ஒரு கழஞ்சு. ஒரு காணம் நான்கு குன்றிமணி எடையுள்ளது.

## ஆவணக்களரி

ஆவணம் என்பது பிற்காலத்தில் பத்திரம் எனப்பட்டது. இக்காலத்தில் பத்திரங்கள் பதிவு செய்யப்படுவது போலவே அக்காலத்திலும் பதிவு செய்யப்பட்டன. அங்ஙனம் பதிவு செய்யப்பட்ட இடம் 'ஆவணக் களரி' எனப்பட்டது.

## சமூக வாழ்க்கை

சோழர் காலத்தில் சமூகத்தில் பல வகுப்புகள் நிலவியிருந்தன. ஒவ்வொருவரும் தமக்கு வழிவழியாக வந்த தொழிலைச் செய்துவந்தனர். பார்ப்பனர், வடமொழிக்கல்வியைத் தம் இனத்துப் பிள்ளைகளுக்குக் கற்பித்தனர்; கோவில் மண்டபங்களில் அல்லது அம்பலங்களிலிருந்து இராமாயணம், பாரதம், புராணம் என்பவற்றைப் படித்துப் பொதுமக்களுக்கு விளக்கிவந்தனர். அவர்கள் அரசர்களாலும் பொது மக்களாலும் கொடுக்கப்பட்ட இறையிலி நிலங்களை அநுபவித்துவந்தனர்.

அக்காலத்தில் ஒவ்வொரு சாதியாரும் சமுதாயத்தில் இன்னவை செய்யலாம், இன்னவை செய்யலாகாது என்று விதியிருந்தது. பொற்கொல்லர் பூணூல் அணிந்துகொள்ள உரிமையளிக்கப்பட்டனர். பொற்கொல்லர் தங்கள் வீட்டு நன்மை தீமைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதலாம், பேரிகை கொட்டலாம், காலில் செருப்பணியலாம், தம் வீடுகளுக்குச் சுண்ணும்புச் சாந்து பூசலாம் என்னும் உரிமைகள் சோழ மன்னனல் வழங்கப்பட்டன. ஆயர் தங்கள் வீட்டின் இருபுறமும் வாயிற்படி அமைத்துக்கொள்ளாம், வீடுகளுக்குச் சுண்ணும்புச் சாந்து பூசலாம், நற்செயல்களுக்குப் பல்லக்கில் ஏறலாம், நன்மை தீமைகளுக்குப் பேரிகை கொட்டலாம் என்பன போன்ற உரிமைகள் வழங்கப்பட்டன என்பதை நோக்க, அம்மக்கள் இந்த உரிமைகள் இல்லாமலிருந்தனர் என்பது புலப்படும்.

அக்கால மன்னர் மனைவியர் பலரை மணக்கும் வழக்கம் இருந்தது. அரசர் பக்கத்து நாட்டு அரசர்களோடும் தம் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களோடும் மணவுறவு கொண்டு தங்கள் நாட்டு ஆட்சியைப் பாதுகாத்துக் கொண்டனர். முதலாம் இராசராசனுக்கு மனைவியர் பலர் இருந்தனர். இவ்வாறே முதற் குலோத்துங்கனுக்கும் மனைவியர் பலர் இருந்தனர். மன்னரைப் பின்பற்றிச்

செல்வரும், அவரைப் பின்பற்றிப் பொதுமக்களும் ஒருத்திக்கு மேற்பட்ட பெண்களை மணந்தனர்.

கணவரை இழந்த மனைவியர் உடன்கட்டையேறும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. சுந்தர சோழன் இறந்ததும் அவன் மனைவியும் முதல் இராசராசன் தாயுமான வானவன் மாதேவி என்பவள் உடன்கட்டை ஏறினாள். முதலாம் இராசேந்திரன் இறந்தவுடன் அவன் மனைவியான வீரமாதேவி உடன்கட்டை ஏறினாள். இவ்வாறே சிற்றரசர் மனைவியர் சிலரும் உடன்கட்டை ஏறினர்.

மணம் செய்துகொள்ளாமல் கோவில்களில் திருத் தொண்டு செய்துவந்த பெண்டிர் 'அடிகள்மார்' எனப் பட்டனர். ஆடல் பாடல்களில் வல்லவர் 'பதியிலார்' எனப்பட்டனர். ஆண்களும் பெண்களும் வறுமை மேலீட்டால் தம்மை விற்றுச் செல்வரிடத்தும் கோவில் களிலும் மடங்களிலும் அடிமைகளாயிருந்தனர். வழி வழியாக அடிமைகளாகவே வாழ்ந்துவந்த குடும்பத் தினரும் அக் காலத்தில் இருந்தனர். இன்றுள்ளது போலவே அக்காலத்திலும் கூலிவேலை இருந்தது. ஆண்மகன் பெற்ற கூலியில் பாதியே பெண்மகள் பெற்றுவந்தாள். ஓர் ஊரில் இருந்த பட்டர், ஆசிரியர், கணக்கர், தச்சர் முதலியோர் தத்தம் தொழில்களை அவ்வூரிலேயே செய்துகொண்டு இருத்தல் வேண்டும் என்ற கட்டுப்பாடும் அக்காலத்தில் ஓரளவு இருந்தது.

## சமயநிலை

சோழப் பேரரசர் அனைவரும் சைவ சமயத்தின ராவர். பாண்டியரும் சைவரே. ஆதித்த சோழன் முதல் பின்வந்த சோழர் அனைவரும் ஆர்வத்தோடு கற்கோயில் களைக் கட்டினர். பல்லவர் காலத்தில் நாயன்மாராலும், ஆழ்வார்களாலும் பாடப்பட்ட கோயில்கள் அனைத்தும் சோழர் காலத்தில் கற்கோயில்களாய் மாறின. சிதம்பரம்

நடராசர் கோயில் ஒவ்வோர் அரசனாலும் சிறப்பிக்கப் பட்டது. அங்குள்ள அம்பலங்கள் பொன் வேயப் பட்டன. அப்பொன் தகடுகளில் 'நமசிவாய' என்னும் ஐந்து எழுத்துக்களும் பொறிக்கப்பட்டன. தஞ்சைப் பெரிய கோவில் பல ஆண்டுகள் முயன்று கட்டப்பட்ட பெரிய கற்கோயிலாகும். அதனைக் கட்டியவன் முதல் இராசராச சோழன். அவன் மகனான முதல் இராசேந் திரன் கங்கை கொண்ட சோழபுரத்தில் தஞ்சைப் பெரிய கோவிலைப் போலவே பெரிய கற்கோயிலைக் கட்டுவித் தான். இரண்டாம் இராசராசன் தாராசுரத்தில் சிறந்த சிற்ப வேலைப்பாடமைந்த சிவன் கோவிலைக் கட்டுவித் தான். குடந்தைக்கு நான்கு கல் தொலைவில் உள்ள திரிபுவன வீரேசுவரம் என்னும் பெரிய சிவன் கோவில் மூன்றாம் குலோத்துங்கனால் கட்டப்பட்டதாகும். இக் கோவில்களில் உள்ள தூண்களும் மண்டபங்களும் வாயிற்காவலர் உருவங்களும் விமானங்களும் சோழர் காலக் கோவில் சிறப்பினை நன்கு எடுத்துக்காட்ட வல்லவை.

முதல் இராசராசன் பல ஊர்க் கோவில்களில் ஆடல் பாடல்களை நிகழ்த்தி வந்த பதியிலார் நானூற்றுவரைத் தஞ்சைப் பெரிய கோவிலில் அமர்த்தினான்; ஒவ்வொருத் திக்கும் ஒரு வீடும், ஒரு வேலிநிலமும் உதவினான்; இவ்வாறே தேவராம் ஓதுவதற்கும் வேதம் ஓதுவதற்கும் பலரை அமர்த்தினான். ஒவ்வொரு கோவிலிலும் பணி மக்கள் இருந்தனர். கோவிலுக்காக நகைகளும் பாத்திரங் களும் மிகப் பலவாகச் செய்யப்பட்டன. இங்ஙனம் சமயம் கட்டடக் கலையை வளர்த்தது; இசைக்கலையை வளர்த்தது; நடனக்கலையை வளர்த்தது; பல்வேறு தொழில்களையும் வளர்த்தது. பெரிய கோவில்களில் சமயத்தொடர்பான நாடகங்களும் நடைபெற்றன; சொற் பொழிவுகள் நடைபெற்றன; ஒவ்வோர் ஆண்டிலும் பல விழாக்கள் நடைபெற்றன.

முதலாம் இராசராசன் சிவபாத சேகரன் என்று அழைக்கப்பட்டான். முதற் குலோத்துங்கன் தில்லை நடராசப் பெருமானைத் தன் குலதெய்வமாகக் கொண்டான். இரண்டாம் குலோத்துங்கன் நடராசப் பெருமான் திருவடித் தாமரையில் உள்ள தேனைப்பருகும் வண்டு எனத் தன்னைக் கூறிக்கொண்டான். அவனும் அவன் தந்தையுமான விக்கிரம சோழனும் தில்லையில் செய்த திருப்பணிகள் பலவாகும். சோழமாதேவியர் செய்த திருப்பணிகளும் மிகப் பல. சிற்றரசர்களும் சேனைத் தலைவர்களும் பெருமக்களும் செய்த திருப் பணிகள் மிகப் பலவாகும். சுருங்கக் கூறின், சோழர் காலம் சமயப் பற்று மிகுந்த காலமாகும். சோழரைப் போலவே பாண்டியரும் தம்நாட்டில் சமயம் வளரப் பாடுபட்டனர். சோழரும் பாண்டியரும் சைவராய் இருந்தபோதிலும் தங்கள் நாடுகளிலிருந்த வைணவம், சமணம்'பௌத்தம் ஆகிய சமயங்களையும் வளர்த்தனர்; அச்சமயங்களைச் சேர்ந்த கோவில்களுக்குப் பல அறங்கள் செய்தனர்.

## இலக்கிய வளர்ச்சி

பல்லவர் காலம் முதலே தமிழகத்தில் வடமொழியாளர் செல்வாக்கு வளர்ந்துவந்தமை சென்ற பகுதியில் கூறப் பட்டதன்றோ? அச்செல்வாக்குச் சோழர் காலத்தில் மிகுதியாக வளர்ந்தது. தேவாரப் பாடல்களில் நுழைந்த விருத்தம் முதலிய வடமொழி வழிவந்த பாடல்கள் சோழர் காலத்தில் மிகுதிப்பட்டன. சங்க காலத்தில் ஆசிரியப் பாவிலேயே பெரும்பாலான பாடல்கள் செய்யப் பட்டன. சோழர் காலத்தில் பெரும்பாலான நூல்கள் பல வகை விருத்தப் பாக்களால் செய்யப்பட்டன.

முதல் இராசராச சோழன் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு சைவத் திருமுறைகளை முறைப்படுத்தினன். திருஞான சம்பந்தர் பாடிய பாக்கள் முதல் ஏழு

திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடிய பாக்கள் அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் பாடியது ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையும் எட்டாம் திருமுறையாகவும், திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், பிற அடியார் பாடிய பாடல்கள் ஒன்பது, பதினோராம் திருமுறைகளாகவும் பாகுபாடு செய்வித்தான். அது முதல் அந்நூல்கள் மக்களால் மதித்துப் படிக்கப்பட்டன.

முதலாம் ராசேந்திரன் சிறந்த தமிழ்ப் புலவனுதலால் 'பண்டித சோழன்' எனப்பட்டான். வீர ராசேந்திரன் காலத்தில் வாழ்ந்த புத்தமித்திரர் என்ற பௌத்த சமயப் புலவர் **வீரசோழியம்** என்ற இலக்கண நூலைச் செய்தார். முதற் குலோத்துங்கன் அவைப் புலவரான சயங்கொண்டார் அவனது கலிங்க வெற்றியினைப் பாராட்டிக் **கலிங்கத்துப் பரணி** என்னும் நூலைப் பாடினர். விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூவர் காலத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் என்ற புலவர் பெருமான் அம்மூவர்மீதும் மூன்று **உலா நூல்களைப்** பாடினர். அவரே **தக்கயாகப் பரணி** என்னும் நூலினைச் செய்தார். இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் முதலமைச்சராயிருந்த **சேக்கிழார்** பெருமான் நாயன்மார்களின் வரலாற்றை ஒரு பெரிய நூலாகப் பாடினர். அதுவே **பெரிய புராணம்** எனப்படும். அக்காலத்திலேயே **தண்டி அலங்காரம்** என்னும் அணி இலக்கண நூல், காவியாதரிசம் என்னும் வடமொழி நூலின் உதவிகொண்டு இயற்றப்பட்டது. இரண்டாம் குலோத்துங்கன் ஒரு கோவை நூலைச் செய்தான். அது **குலோத்துங்கன் கோவை** எனப்பட்டது. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் **கம்பர் இராமாயணத்தைப்** பாடினர். **சூளாமணி**, சிந்தாமணி என்ற காவியங்கள் சமணரால் செய்யப்பட்டவை. சிவபெருமான் திருவிளையாடல்களைக் குறிக்கும் **கல்லாடம்** என்ற நூலும் சோழர்

காலத்தில் செய்யப்பட்டது. புகழேந்திப் புலவர் **நள வெண்பாவைப்** பாடினார். திருவிளையாடல்களை முறைப் படுத்திக் கூறும் முதல் நூலான **நம்பி திருவிளையாடற் புராணமும்** இக் காலத்ததேயாகும். **தஞ்சைவாணன் கோவையும்** இக்காலத்தில்தான் பாடப்பட்டது. இராச ராச விசயம், இராசராசேசுவர நாடகம், குலோத்துங்க சோழ சரிதை, பூம்புலியூர் நாடகம், கன்னிவன புராணம், வீர அணுக்க விசயம், வல்லை அந்தாதி என்ற நூல்களும் அக்காலத்தில் செய்யப்பட்டன என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகிறது.

ஆழ்வார்கள் பாடிய அருட்பாடல்கள் நாதமுனி களால் முறைப்படுத்தப்பட்ட காலமும், நம்மாழ்வார் செய்த திருவாய்மொழிக்குப் பேருரை வரையப்பட்ட காலமும் சோழர் காலமேயாகும். இராமாநுசருடைய மாணவரான திருவரங்கத்து அமுதனார் என்பவர் **இராமாநுசர் நூற்றந்தாதி** என்னும் நூலைப் பாடினார். அமிதசாகரர் என்ற சமண முனிவர் **யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை** என்னும் யாப்பிலக்கண நூல் களிரண்டினை இயற்றினார். குணவீர பண்டிதர் என்ற சமணப் பெரியார் **நேமிநாதம்** என்னும் இலக்கண நூலைச் செய்தார். மூன்றும் குலோத்துங்கன் காலத்து வாழ்ந்த பவணந்தி முனிவர் என்ற சமணப் பெரியார் **நன்னூல்** என்ற இலக்கண நூலைப் பாடினார். மாறவர்மன் முதலாம் குலசேகர பாண்டியன் காலத்தில் **நம்பி அகப் பொருள்** நூல் பாடப்பட்டது.

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய இளம்பூரணர், சேனாவரையர் ஆகிய இருவரும் இக்காலத்தவர். திருக் குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரும் இக்காலத்தவரே யாவர். இறையனார் அகப்பொருளுக்கு உரை எழுதப் பட்ட காலமும் இதுவேயாகும். சில வடமொழி நூல்களும் இக் காலத்தில் செய்யப்பட்டன.

சிந்தாமணியும் சூளாமணியும் சமண சமய காப்பி யங்களாகும். கல்லாடம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் என்பவை சைவ நூல்களாகும். இராமா யணம் வைணவப் பெருநூலாகும். இம்மூவகைச் சமய நூல்களும் சோழர் காலத்தில் உண்டாயின என் பதை நோக்க, சோழரது பரந்த சமய நோக்கம் நன்கு புலனுதல் காணலாம். சைவ சித்தாந்த சாத்திரங்களுள் திருவுந்தியார், திருகளிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம் ஆகிய ஆறு நூல்களும் சோழர் காலத்தில் செய் யப்பட்டவை. இவை அனைத்தும் சோழர் கால இலக்கிய வளர்ச்சியை நன்கு தெரிவிப்பனவாகும்.

## மார்க்கோ-போலோ

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1268–1311) காலத்தில் இத்தாலி நாட்டு வெனிசு நகரத் தைச் சேர்ந்த மார்க்கோ-போலோ என்பவன் பாண்டியன் ஆட்சியைப் பற்றியும் அக்காலத்தில் சிறப்புற்றிருந்த காயல் என்னும் துறைமுகம் பற்றியும் அங்கு நடைபெற்ற முத்துக்குளித்தல் பற்றியும் கடல் வாணிகம் பற்றியும் பல விவரங்களைப் பார்த்து எழுதியுள்ளான். அவற்றின் சுருக்கமாகக் கீழ்வரும் செய்திகளைச் சொல்லலாம்.

"பாண்டிய நாட்டைப் பாண்டியர் ஐவர் ஆண்டு வருகின்றனர். அவருள் மூத்தவன் சுந்தர பாண்டியன் (குலசேகர பாண்டியனின் மறுபெயராகலாம்). அவன் தன் தலைநகரில் பெரும்பொருள் சேர்த்து வைத்துள் ளான். அவன் உறவினர் விலையுயர்ந்த நகைகளை அணிந் துள்ளனர். பாண்டியன் செங்கோலாட்சியில் சிறந்தவன்; அயல்நாட்டு வணிகரிடத்தும் பேரன்பு கொண்டவன். அதனுல் அவ்வணிகர் அவன் நாட்டிற்கு வர விரும்பினர். அவனது நாட்டில் காயல் சிறந்த துறைமுகப்பட்டின மாகும். மேலைநாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் குதிரை

களையும் பிற பொருள்களையும் இந்நகரத்தில் இறக்குமதி செய்கின்றன. இந்நாட்டில் குதிரைகள் உற்பத்தியில்லை. பாண்டியன் குதிரைகள் வாங்க ஆண்டுதோறும் பெரும் பொருள் செலவழிக்கிருன்.

''இந்நாட்டில் விலையுயர்ந்த பெரிய முத்துக்கள் கடலிலிருந்து எடுக்கப்படுகின்றன. முத்தெடுப்பவர் சிறியவையும் பெரியவையுமான கப்பல்களில் சென்று கடலில் மூழ்கி முத்தெடுக்கின்றனர்; ஏப்ரல் மாதத் துவக்கத்திலிருந்து மே மாதம் முதற் பாதிவரையில் இவ்வேலை நடக்கின்றது. அவர்கள் கடற்கரையிலிருந்து அறுபது கல் தொலைவு கடலில் சென்று, சிறிய படகுகளில் ஏறி அங்கிருந்து தனித்தனியே சென்று கடலில் குதித்து முத்தெடுப்பர். இம்முத்தெடுக்கும் தொழிலை நடத்தும் வணிகர் குழுக்கள் பலவாகும். எடுக்கப்படும் முத்துக்களில் பத்தில் ஒரு பகுதி அரசனுக்குக் கொடுக்கப்படும். முத்தெடுப்பவரைப் பெரிய மீன்கள் தடுக்காதபடி மந்திர தந்திரம் செய்பவர்க்கு இருபதில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும். கடலடியில் சென்ற தொழிலாளிகள் முத்துச் சிப்பிகளைப் பொறுக்கித் தமது இடையிற் கட்டியுள்ள வலைப்பையில் நிரப்பிக்கொண்டு நீர்மட்டத்திற்கு வருவர்; சிப்பிகளைப் படகில் போட்டுவிட்டு மீண்டும் நீரில் மூழ்குவர்; இங்ஙனம் பலமுறை மூழ்கி முத்தெடுப்பர். இத்தொழிலால் பாண்டியனுக்கு மிகுந்த வருமானம் கிடைக்கிறது. இங்ஙனம் எடுக்கப்படும் முத்துக்கள் உலக நாடுகளில் விலையாகின்றன. எவரும் விலையுயர்ந்த முத்துக்களைப் பாண்டிய நாட்டிற்கு வெளியில் கொண்டு செல்லலாகாது என்பது மன்னன் ஆணை. அதனைத் தன்னிடம் கொண்டு வருபவர்க்கு இரு மடங்கு விலை கொடுத்து வாங்குவது அரசன் வழக்கம். இதனுல் பாண்டியனிடம் விலையுயர்ந்த முத்துக்கள் மிகுதியாக உள்ளன.

'' பாண்டிய அரசன் விலையுயர்ந்த மணிகள் பதித்த மாலையைக் கழுத்தில் அணிந்துள்ளான்; 108 முத்துக்

களும் மாணிக்கங்களும் கலந்த பட்டுநூல் மாலையொன் றையும் அணிந்துள்ளான். அவன் காலையிலும் மாலையி லும் அம்மணிகளை உருட்டி மந்திரம் செபிக்கிறான் என்பது கூறப்படுகிறது. அப்பாண்டியனைப் போலவே அவன் முன்னோரும் அம்மாலையை அணிந்து செபித்து வந்தனராம். நான் சொல்லும் பாண்டியன் முத்துக்கள் பதித்த கடகங்களைக் கைகளில் அணிந்துள்ளான்; கால் களில் கழல்களை அணிந்துள்ளான்; கால்விரல்களிலும் முத்துக்கள் பதித்த மோதிரங்களை அணிந்துள்ளான். ஒரு நகரத்தைக் கொள்ளையடித்தால் எவ்வளவு பொருள் கள் கிடைக்குமோ அவ்வளவு பொருள்களின் விலைமதிப்பு அரசன் அணிந்துள்ள நகைகளிலிருந்து கிடைக்கலாம்.

" தந்தை இறந்தால் பிள்ளைகள் அவனது பண்டாரத் தைத் தொடுவதில்லை. அவர்களும் தந்தையைப் போலவே பண்டாரத்தைப் பெருக்குவதில் முனைகின்றனர். மதுரை யிலுள்ள அரச பண்டாரம் பெருஞ்செல்வத்தை உடை யது. அரசனுக்கு மனைவியர் ஏறத்தாழ ஐந்நூற்றுவர் உள்ளனர்; மக்கள் பலர் உளர். பிரபுக்கள் பலர் எப் பொழுதும் அரசனுடன் உள்ளனர். அவர்கள் அரசனது நம்பிக்கைக்குரியவர்கள். அரசனுடன் செல்லும் மெய் காப்பாளரும் பலருள்ளனர். அவரும் அரசனுடன் உடன் கட்டையேறுவர்; இவ்வுலகத்தில் அவனுடன் இருந்தாற் போலவே மறு உலகத்திலும் அவனுடன் இருக்க விரும் பியே அவன் இறந்தவுடன் தாமும் இறக்கின்றனர்.

" இந் நாட்டு மக்கள் ஓர் ஆடையுடன் காணப் படுகின்றனர். மன்னனும் அப்படியே காணப்படு கிறான். இவர்கள் பசுவை வணங்குகின்றனர்; மாட்டு இறைச்சியை உண்பதில்லை; தங்கள் இல்லங்களைச் சாணங்கொண்டு மெழுகுகின்றனர்; அரசன் உள்பட அனைவரும் தரைமீது அமருகின்றனர்; தரை என்னும் தாய்க்கு மதிப்புத் தருகின்றனர். போர்வீரர் இடுப்பி லுள்ள ஆடையுடன், ஈட்டியையும் கேடயத்தையும்

ஏந்திப் போரிடச் செல்கின்றனர். இந்நாட்டு மக்கள் ஒருநாளில் இருமுறை நீராடுகின்றனர்; அங்ஙனம் நீராடாதவரை இழிவாகக் கருதுகின்றனர்; வலக்கையால் உண்கின்றனர். ஒவ்வொருவரும் நீர் அருந்துவதற்குத் தனிப்பாத்திரம் வைத்துள்ளனர்; நீரைத் தூக்கியே அருந்துகின்றனர்; பாத்திரம் உதடுதொடும்படிவைத்துக் குடிப்பதில்லை; பாத்திரம் இல்லாத புதியவன் கைகளில் நீர் ஊற்றிக் குடிக்கச்செய்வர்.

"இந் நாட்டார் நீதி செலுத்துவதில் நேர்மையுடையவர். கடன் கொடுத்தவன் கடன்பெற்றவனைப் பலமுறை சந்தித்துக் கடனைத் திருப்பித் தரும்படி கேட்பான்; ஒருநாள் அவனைக்கண்டு அவனைச் சுற்றிலும் தரையில் வளையத்தைக் கீறுவான். கடன்பெற்றவன் இறுதியாக ஒரு தவணையைக் கூறியே அவ்வளையத்தை விட்டு வெளியேறுவான்; தவணைப்படி கடனைக் கொடுத்துவிடுவான். தவணை சொல்லாமல் வளையத்தைத் தாண்டுவானாயின், அவன் நியாயத்திலிருந்தும் நீதியிலிருந்தும் தவறிய குற்றத்திற்காகக் கொல்லப்படுவான்.

"இந் நாட்டு மக்கள் சகுனம் பார்ப்பவர்; குழந்தை பிறந்ததும் அதற்குச் சாதகம் கணிப்பவர். அவர்கள் ஒவ்வொரு செயலுக்கும் சாதக உதவியை நாடுவர். கோவில்களில் ஆடல்பாடல்களில் வல்ல மகளிர் இருக்கின்றனர். இந் நாட்டார் அனைவரும் தாம்பூலம் தின்பதில் ஆர்வம் உடையவர். அரசனும் செல்வரும் பலவகை மணப் பொருள்களைக் கலந்து தாம்பூலம் சுவைக்கின்றனர். அவர்கள் இது உடலுக்கு நல்லது என்று கூறுகின்றனர். செல்வர் கட்டில்கள்மீது படுக்கின்றனர். ஏழைகள் தெருக்களில் உறங்குகின்றனர். இந் நாட்டு மக்கள் உடல் உழைப்பில் தேர்ந்தவர்; சோம்பல் வாழ்க்கையை வெறுப்பவர்; பல உயர் பண்புகள் உடையவர்."

# 5. விசயநகர வேந்தர் காலம்

(கி. பி. 1336—1649)

## முஸ்லிம் படையெடுப்பு

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்பு பாண்டியர் சிறிது காலம் பேரரசராய் விளங்கினர். மைசூர் நாட்டை ஆண்ட ஹொய்சளர் தமிழகத்தில் தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்தினர். ஆந்திர நாட்டில் வாரங்கல்லைத் தலைநகராய்க்கொண்டு ஆண்டுவந்த காகதீயர் காஞ்சி வரையில் தங்கள் செல்வாக்கைப் பரப்பினர். நெல்லூரை ஆண்டுவந்த தெலுங்குச் சோழர் காகதீயர் ஆட்சிக்கு உட்பட்டனர்.

கி. பி. 14ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பேரரசனுய் விளங்கிய குலசேகர பாண்டியனுக்குச் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்ற மக்கள் இருவர் இருந்தனர். சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் மகன்; வீரபாண்டியன் வேறு மனைவியின் மகன். அவ் விருவருள் வீரபாண்டியன் போர்த் திறமையும் ஆட்சித் திறமையும் மிக்கவன். அதனுல் குலசேகர பாண்டியன் வீரபாண்டியனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினுன். இச் செயலால் மனம் வெறுத்த சுந்தரபாண்டியன் கி. பி. 1310 இல் தன் தந்தையைக் கொன்று அரியணை ஏறினுன். வீரபாண்டியன் தென்பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அவன் மதுரையைக் கைப்பற்ற முனைந்தான். அப்பொழுது நடைபெற்ற போரில் சுந்தரபாண்டியன் தோல்வியுற்றுன். வீரபாண்டியன் பாண்டியநாடு முழுமைக்கும் அரசன் ஆனுன்.

அக் காலத்தில் டில்லியைத் தலைநகராய்க்கொண்டு அலாவுத்தீன் கில்ஜி என்பவர் வடஇந்தியாவை ஆண்டு வந்தார். அவருடைய படைத்தலைவனுன **மாலிக் காபூர்**

தக்கணத்தின்மீது படையெடுத்துவந்தான். இப் படையெழுச்சி கி. பி. 1310 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. மாலிக் காபூர் முதலில் தேவகிரியைத் தலைநகராகக்கொண்டு தக்கணத்தின் பெரும்பகுதியை ஆண்டு வந்த யாதவரைத் தாக்கிப் பெரும் பொருள்களைக் கவர்ந்தான்; பின்பு காகதீயரை முறியடித்தான்; ஹொய்சளரைப் புறங் கண்டான். வீரபாண்டியனிடம் தோற்ற சுந்தரபாண்டியன் மதுரைமீது படையெடுக்கும்படி மாலிக் காபூரை வேண்டினன். அப் படைத்தலைவன் மதுரையைத் தாக்கினன். பாண்டிய நாடு மகமதிய வீரர்களால் கொள்ளையிடப்பட்டது; அறநிலையங்களும் கோவில்களும் அழிவுற்றன. மாலிக் காபூர் பாண்டியர் இருவருக்கும் உரிய யானைகளையும் குதிரைகளையும் பெருஞ் செல்வத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு டில்லிக்குத் திரும்பினன்.

## மதுரையில் சுல்தான் ஆட்சி

முஸ்லிம் படையெடுப்பினல் நாடு அமைதி இழந்தது. பாண்டியருக்கு அடங்கியிருந்த **வாணாதி ராயர்கள்** பாண்டிய நாட்டை ஆட்சி செய்யலாயினர். **சம்புவராயர்கள்** படைவீட்டிலிருந்து தொண்டை மண்டலத்தை ஆளளாயினர். சேரமன்னன் இரவிவர்மன் குலசேகரன் என்பவன் பாண்டிய நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டான். முகமது பின் துக்ளக் என்ற அரசனல் டில்லியிலிருந்து அனுப்பப்பட்ட **ஜலாலுத்தீன் அசன்ஷா** என்பவர் பாண்டிய அரசனை வென்று மதுரையைக் கைப்பற்றி ஏறத்தாழக் கி. பி. 1334 இல் ஆளத்தொடங்கினர். அவர் காலம் முதல் கி. பி. 1378 வரையில் ஒன்பதின்மர் சுல்தான்களாக இருந்து பாண்டிய நாட்டை ஆண்டனர். அக்காலத்தில் பாண்டிய நாட்டில் அமைதி இல்லை; கோவில்கள் கொள்ளையடிக்கப் பட்டன. பாண்டிய நாட்டின் தென்பகுதியில் பாண்டியர்

சிலர் இருந்து அக் காலத்தில் நாடாண்டனர். ஆயின் அவர்களால் சுல்தான்களின் கொடுமையை அடக்க முடிய வில்லை. சுல்தான்களை அடக்க முயன்ற ஹொய்சள மன்னனுன மூன்ரும் வல்லாளன் வெற்றி பெருது போர்க் களத்தில் உயிர் துறந்தான்.

## விசயநகரப் பேரரசு

கி. பி. 14 ஆம் நூற்ருண்டின் முற்பாதியில் தக்கணத்திலும் தென்னிந்தியாவிலும் உண்டான முஸ்லிம் படையெடுப்புகளால் யாதவர், காகதீயர் ஹொய்சளர், பாண்டியர் அரசுகள் நிலை தளர்ந்தன. நாட்டில் கொள்ளையும் குழப்பமும் நிலவின; சமய மாற்றமும் நடைபெற்றது. இம்மாறுபாடுகளைக் கண்ட இந்துப் பெருமக்கள் மனம் புண்ணுயினர்; இந்து சமயத்தைக் காக்கத்தக்க பேரரசு ஒன்று ஏற்படுத்த விழைந்தனர். அவருள் **ஹரிஹரர், புக்கர்** என்ற சகோதரர் இருவரும் குறிப்பிடத்தக்கவர். அவ்விருவரும் தம் ஆசிரியரான **வித்தியாரண்யர்** என்பவரது ஆசி பெற்றுத் துங்கபத்திரைக்கரையில் கி. பி. 1336இல் ஒரு நகரத்தை அமைத்தனர்; அதற்கு **வித்தியாநகரம்** என்று தம் ஆசிரியர் பெயரிட்டனர். அதுவே நாளடை வில் **விசயநகரம்** எனப்பட்டது. சகோதரர் இருவரும் தம் வாள்வலியாலும் அறிவு நுட்பத்தாலும் நாட்டை விரிவாக்கி ஆண்டனர். இந்துசமயப் பற்று மிகுந்த வீரரும் படைத்தலைவரும் அவரது ஆட்சிக்கு உதவி புரிந்தனர்.

முதலாம் புக்கராயர் மகனுன **குமார கம்பணன்** என்பவன் சிறந்த போர்வீரன்; படைத் தலைவன்; அவன் பெரும் படையுடன் தெற்கு நோக்கிச் சென்று சிற்றரசர் பலரை வென்ருன்; மதுரையில் நிலைத்திருந்த முஸ்லிம் ஆட்சியை ஒழித்தான். அவன் பாண்டிய நாட்டில் அமைதியை நிலைநிறுத்தி மீண்டான். அவன்

மனைவியான **கங்காதேவி** என்பவள் தன் கணவனது தென்னாட்டுப் படையெடுப்பைப்பற்றி வடமொழியில் ஒரு நூலை எழுதினாள். அதன் பெயர் **மதுரா விஜயம்** என்பது.

## தக்கணத்தில் முஸ்லிம் நாடுகள்

முகமது பின் துக்ளக்கின் ஆட்சி இறுதியில் நாடு முழுமையிலும் குழப்பங்கள் உண்டாயின. ஆங்காங்கு ஆண்டுவந்த மாநில ஆளுநர் அம்மாநிலத்திற்குத் தாமே அரசராயினர். அங்ஙனம் ஆட்சி பெற்றவருள் ஒருவரே **அலாவுத்தீன் பாமன்ஷா** என்பவர். அவர் தக்கணத்தில் முஸ்லிம் அரசை ஏற்படுத்தினார். அவரும் அவருக்குப் பின் தக்கணத்தை ஆண்ட அரசர்களும் **பாமனி சுல்தான்கள்** எனப்பட்டனர். அவர்கள் கி. பி. 1347 முதல் 1527 வரையில் தக்கணத்தை ஆண்டனர். அவர்கள் பதினெண்மர். அவருட் பலர் தமது நாட்டுக்குத் தெற்கே இருந்த விசயநகர அரசர்களோடு பல போர்கள் புரிந்தனர். அப்போர்களில் பல, விசயநகர அரசுக்குப் பேரிழப்பை உண்டாக்கின. பாமினி அரசு ஏற்பட்டதால் தக்கணத்தில் தேவகிரியை ஆண்ட யாதவ அரசும் வாரங்கல்லை ஆண்ட காகதீய அரசும் மறைந்தன. மதுரையில் சுல்தான்கள் ஆட்சி ஏற்பட்ட காரணத்தால் ஹொய்சள அரசு தமிழகத்தில் மறைந்தது.

விசயநகரப் பேரரசர்கள், பாண்டியர் போன்ற பழமையான அரசர்களைத் தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட சிற்றரசராயிருந்து தத்தம் நாடுகளை ஆளும்படி உரிமை அளித்திருந்தனர்; ஏனைய பகுதிகளைப் பல மாகாணங்களாகப் பிரித்து நம்பிக்கை உள்ள அதிகாரிகளை ஆளுநராக நியமித்தனர். இவ்வாறே பாமினி நாடும் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை, **பீஜப்பூர்**, **பீரார்**, **பிதார்**, **ஆமது நகர்**, **கோல்கொண்டா** என்பவை. இந்த ஐந்தையும் ஆளுநர் ஐவர் ஆண்டுவந்தனர். கி. பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த ஐந்து

மாநிலங்களும் தம்மாட்சி பெற்ற ஐந்து முஸ்லிம் நாடுகளாய் மாறின.

## விசயநகர வேந்தர் ஆட்சி

இந்த ஆட்சியைத் தோற்றுவித்த முதலாம் **ஹரிஹரர்** முதல் அரசராய் விளங்கினர். அவருக்குப் பின்பு அவர் தம்பியான **முதலாம் புக்கர்** தென்னிந்தியாவை ஆண்டார். அவர் மகனுன **கம்பணன்** மதுரையில் இருந்த முஸ்லிம் ஆட்சியை ஒழித்தவன். புக்கருக்குப் பின்பு அவர் மகனுன **இரண்டாம் ஹரிஹரர்** நாட்டை ஆண்டார். அடுத்து அவருடைய மூத்த மகன் **முதலாம் விரூட்பாட்சர்** ஓராண்டு அரசராயிருந்தார். பின்பு அவர் தம்பியான **இரண்டாம் புக்கராயர்** ஓராண்டு நாட்டையாண்டார். பின்பு அவர் தம்பியான **முதலாம் தேவராயர்** பதினறு ஆண்டுகள் அரசராயிருந்தார். இரண்டாம் புக்கரும், தேவராயரும் விசய நகரத்தில் பல கோட்டை கொத்தளங்கள் கட்டினர்; துங்கபத்திரை ஆற்றின் குறுக்கே பெரிய அணையைக் கட்டினர்; பதினைந்து கல் நீளமுள்ள கால்வாய் வெட்டுவித்தனர். ஆற்று நீர் அக் கால்வாய் வழியாகத் தலைநகருக்குக் கொண்டுவரப்பட்டது. முதலாம் தேவராயர் தம் காலத்தில் பாமினி சுல்தானிடம் தோற்றுத் தம் பெண்களுள் ஒருத்தியை அச் சுல்தானுக்கு மணம் முடித்தார். தேவராயருக்குப் பின்பு அவர் மூத்த மகன் **இராமசந்திர ராயர்** ஓராண்டு அரசராயிருந்தார். அவருக்குப் பின்பு அவர் தம்பியான **முதலாம் விசய ராயர்** ஐந்தாண்டுகள் அரசராயிருந்தார். பின்னர் அவர் மகனுன **இரண்டாம் தேவராயர்** இருபத்தைந்து ஆண்டுகள் நாட்டையாண்டார். அக்காலத்தில் பாமினி சுல்தான் படையெடுத்துவந்து பல்லாயிரக் கணக்கான குடிமக்களைக் கொன்றுர்; கோவில்களையும் வடமொழிக் கல்லூரிகளையும் அழித்தார். இரண்டாம் தேவராயர்

முஸ்லிம் வீரர்களைத் தம் படையில் சேர்த்துக்கொண்டார்; அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்தார்.

இரண்டாம் தேவராயர் மகனான மல்லிகார்ச்சுன ராயர் பதினெட்டு ஆண்டுகள் நாட்டை ஆண்டார். பின்பு இரண்டாம் விரூபாட்ச ராயர் இருபது ஆண்டுகள் மன்னராயிருந்தார்.

அப்பொழுது சந்திரகிரி மாகாணத்தைச் சாளுவ நரசிம்மர் என்பவர் ஆண்டுவந்தார். அவர் சிறந்த போர் வீரர். அவ்வீரர் விசயநகர வேந்தர் சார்பில் பல போர்களில் வெற்றி பெற்றவர். இரண்டாம் விரூபாட்சருக்குப் பின்பு பட்டம் பெற்ற பிரவுடராயர் ஆட்சியைக் கவனிக்கவில்லை; தீய நெறியில் சென்றார். அதனால் வெறுப்புற்ற சாளுவ நரசிம்மர் தம் படைத் தலைவரான நரச நாயக்கர் என்பவரைப் பெரும்படையுடன் விசய நகரத்துக்கு அனுப்பினார். அப்படைத் தலைவர் பெற்ற வெற்றியால் சாளுவ நரசிம்மர் விசயநகர வேந்தரானார். அவரது ஆட்சி ஐந்தாண்டுகள் (கி. பி. 1486—1491) நிலைத்திருந்தது. நரசிம்மர் நாட்டின் வாணிகத்தை நன்கு வளர்த்தார்; துளுநாட்டை வென்று அந்நாட்டின் துறைமுகங்களைப் பயன்படுத்தினார்; அரேபியாவிலிருந்து நூற்றுக் கணக்கான குதிரைகளை இறக்குமதி செய்தார்.

அவருக்குப் பின்பு அவருடைய இரண்டாம் மகன் இம்மடி நரசிம்மன் பதினைந்து ஆண்டுகள் நாட்டையாண்டார். ஆயின் படைத் தலைவரான நரச நாயக்கரே உண்மையில் நாட்டை யாண்டார். அவர் மிகச் சிறந்த போர் வீரர். அவர் தஞ்சை, திருச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு ஆளுநராயிருந்த கோனேட்டி ராசன் என்பவரையும் சேர, சோழ, பாண்டியரையும் போரில் வென்று விசயநகர அரசுக்கு அடங்கி நடக்கும்படி செய்தார்; மைசூர் நாட்டுச் சிற்றரசரையும் அடிபணியச் செய்தார்; கலிங்க நாட்டு மன்னனையும் வென்றார்.

அவருக்குப் பின்பு அவர் மூத்த மகனான **வீரநரசிம்மர்** அரசரானார். அவர் ஐந்தாண்டுகளே நாடாண்டார். அவருக்குப் பின்பு அவர் தம்பியான **கிருஷ்ணதேவ ராயர்** விசயநகர மன்னரானார். அவர் இருபத்தொரு ஆண்டுகள் (கி. பி. 1509—1529) நாடாண்டார்.

## கிருஷ்ணதேவ ராயர்

விசயநகர வேந்தருள் பெரும்புகழ் படைத்தவர் கிருஷ்ணதேவ ராயர். அவர் காலத்தில் மேனாட்டார் பலர் விசய நகரத்துக்கு வந்து வாணிக வுறவு கொண்டனர். அவர்கள் அவரைப் பற்றியும், அவரது ஆட்சியைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளனர். அவர் பட்டம் அடைந்தபொழுது ஏறத்தாழ இருபத்தைந்து வயதினரா யிருந்தார்; அழகிய தோற்றம் உடையவர்; நடுத்தர உயர முடையவர். அவர் நாள்தோறும் உடற்பயிற்சி செய்தார்; வெளிநாட்டாரை மிக்க அன்புடன் வரவேற்று உபசரித்தார்; நீதி தவறுதவர்; குடிகள்மீது மிக்க அன்புடையவர்; அவரே பெரும்பாலும் தலைமை தாங்கிப் படைகளைச் செலுத்தினர்; போரில் புண்பட்ட வீரர்களைக் கவனித்தார்; இத்தகைய பண்புகளால் அனைவராலும் நன்கு மதிக்கப்பட்டார்.

அவர் கோவாவில் செல்வாக்குடன் இருந்த போர்த்துகீசியருடன் நட்புக் கொண்டார். அங்கு இறக்குமதியான குதிரைகளை எல்லாம் தாமே வாங்கிக்கொண்டார்; மைசூர் நாட்டில் கலகம் விளைவித்த சிற்றரசர்களை வென்றார்; கலிங்க அரசனைப் போரில் வென்றார். அவ்வரசன் தன் மகளை இராயருக்கு மணம் செய்வித்து உறவு கொண்டான். இராயர் தம்மீது படையெடுத்து வந்த சுல்தான்களைப் பல போர்களில் முறியடித்தார்.

கிருஷ்ணதேவ ராயர் போரில் சிறந்திருந்தாற் போலவே சமயப்பற்றிலும் சிறந்திருந்தார். அவர் திருப்பதி, ஸ்ரீசைலம், அகோபலம், காஞ்சிபுரம் முதலிய

இடங்களிலுள்ள கோவில்களுக்குத் தம் மனைவியருடன் சென்று வழிபட்டார்; கோவில்களுக்கும் வேதியர்களுக்கும் பெரும் பொருளை வழங்கினர். அவரது ஆட்சியில் எல்லாச் சமயங்களைச் சேர்ந்த கோவில்களும் வளர்ச்சி பெற்றன.

இராயர் **ஆமுக்தமால்யதா** என்னும் ஒரு நூலை எழுதியுள்ளார். அது ஆண்டாளின் வரலாற்றைக் கூறுவது. அவர் அந்நூலில் உயர்ந்த அரசியல் கொள்கைகளைக் குறித்துள்ளார். அவற்றுள் ஒன்றைக் கீழே காண்க: "ஓர் அரசன் தன் நாட்டின் வருவாயை நான்கு பகுதிகளாகப் பிரித்தல் வேண்டும். அவற்றுள் ஒரு பகுதியை நாட்டு நலத்திற்குச் செலவழிக்க வேண்டும்; இரண்டு பகுதிகளைப் படைக்காகச் செலவழித்தல் வேண்டும்; மற்றொரு பகுதியைச் சேர்த்துவைத்தல் வேண்டும்." அவர் தம் கொள்கைப்படியே நடந்து வந்தார். அவரிடம் ஆறு இலட்சம் வீரர்களிருந்தனர்; அறுபதினாயிரம் குதிரைகள் இருந்தன; இரண்டாயிரம் யானைகள் இருந்தன. அவர் இப்பெரும் படையைக் கொண்டே சுல்தான்களையும் கலிங்க வேந்தனையும் பிறரையும் நடுங்கச் செய்தார்.

இராயர் சிறந்த கல்விமான். அவர் புலவர்களைப் போற்றிப் பாதுகாத்தார்; விசய நகரத்தில் ஆண்டு தோறும் நடைபெற்ற நவராத்திரி விழாவில் புலவர்க்குப் பலவகைப் பரிசுகளை வழங்கினர்; தம்மைத் தங்கத்தாலும் நவமணிகளாலும் நிறுத்து, அவற்றைக் கோவில்களுக்கும் வேதியர்களுக்கும் வழங்கிவந்தார்; தம் அமைச்சருக்கும் உயர் அலுவலர்க்கும் அவ்வப்போது பரிசுகள் வழங்கினர்.

அவருடைய அவையில் வடமொழிப் புலவர் பலர் இருந்தனர். அவர்கள் பல நூல்கள் செய்துள்ளனர். தெலுங்கு மொழிப் புலவர் பலரும் அக்காலத்தில் இருந்தனர். அவருள் எண்மர் இராயர் அவையை அலங்கரித்

தனர். அவர்கள் பல நூல்களை இயற்றியுள்ளனர். **தெனாலி இராமலிங்கர்** அந்த எண்மருள் ஒருவராவர். கன்னடப் புலவர் சிலரும் அவரால் சிறப்படைந்தனர். கச்சி ஞானப்பிரகாசர், குமார சரசுவதி, அரிதாசர், தத்துவப்பிரகாச கவி, மண்டல புருஷர் ஆகிய தமிழ்ப் புலவர்கள் இராயர் காலத்தில் வாழ்ந்தனர். இராயர் மொழி வேறுபாடு காட்டாமல் தமது ஆட்சிக்குட்பட்ட எல்லா மொழிப் புலவரையும் நன்கு சிறப்பித்தார்.

## இராயருக்குப் பின்பு

கிருஷ்ணதேவ ராயருக்குப் பின்பு அவருடைய ஒன்றுவிட்ட தம்பியான **அச்சுத ராயர்** பட்டம் பெற வேண்டுமென்பது இராயருடைய விருப்பமாகும். கிருஷ்ணதேவ ராயருடைய மருமகனை **இராம ராயர்** தாமே அரசைக் கைப்பற்ற விழைந்தார்; அம்முயற்சிக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தமையால் அச்சுதரை அரசராக்கினர். அப்பொழுது மைசூர் நாட்டிலும் சேர நாட்டிலும் இருந்த சிற்றரசர் குழப்பம் விளைவித்தனர். அச்சுத ராயர் ஒரு பெரும் படையுடன் சென்று அச் சிற்றரசர்களை அடக்கினர்; பொருநை ஆற்றங்கரையில் வெற்றித் தூண் ஒன்றை நாட்டினர்; குழப்பக்காரரால் பதவியிலிருந்து விலக்கப்பட்ட பாண்டியனை மீட்டும் அரசராக்கினர்; அவன் மகளை மணந்தார்.

அச்சுதராயர் தக்கணத்தை ஆண்டுவந்த சுல்தான்களை அவ்வப்போது அடக்கிவந்தார். அச்சுத ராயர் தென்னாடு சென்றபோது **நாகமநாயக்கர்** என்ற படைத் தலைவரின் மகனை **விசுவநாத நாயக்கரும்** தென்னாட்டுப் படையெடுப்பில் அச்சுதருடன் கலந்துகொண்டார்; இவ்வாறே பிற போர்களிலும் பங்கெடுத்தார். அவரது வீரத்தைக் கண்டு மகிழ்ந்த அச்சுதராயர், அவரைக் கி. பி. 1533இல் பாண்டிய நாட்டின் ஆளுநராக நியமித்தார்.

## தலைக்கோட்டைப் போர்

அச்சுத ராயருக்குப் பின்பு கி. பி. 1543இல் **சதாசிவ ராயர்** அரசரானார். ஆயின் இராம ராயரே நாட்டை ஆண்டுவந்தார். அவர் தமது செல்வாக்கைப் பெருக்க விரும்பினார்; அதனால் உயர் அலுவலர் பலரை வேலையிலிருந்து நீக்கித் தம்மவரை அமர்த்தினார். இச்செயலால் தலைநகரிலும் அவரது ஆட்சிக்குட்பட்ட பெரு நாட்டிலும் சலசலப்பு ஏற்பட்டது. அத்துடன் இராம ராயர் சுல்தான்களிடையே மனவேறுபாடுகளை ஏற்படுத்திச் செல்வாக்குப் பெற முயன்றார். அவரது அரசியல் சூழ்ச்சியை உணர்ந்த சுல்தான்கள் ஐவரும் விழித்துக் கொண்டனர்; தங்கள் வேறுபாடுகளை மறந்தனர்; விசயநகர அரசை ஒழிக்கத் திட்டமிட்டனர்; பெரும்படையைத் திரட்டி விசயநகரத்தின்மீது படையெடுத்தனர்.

இராம ராயர் தம் தம்பியரான **திருமலை ராயர், வேங்கடாத்திரி ராயர்** என்பவர்களுடன் போருக்குப் புறப்பட்டார். இருத்திறத்துப் படைகளும் கிருஷ்ணை ஆற்றின் கரையில் **தலைக்கோட்டை** என்னும் இடத்திற்கு அருகில் சந்தித்தன. கி. பி. 1556ஆம் ஆண்டு சனவரி மாதம் 23ஆம் தேதி இறுதிப் போர் நடைபெற்றது. முதலில் விசயநகரப் படைகளே வெற்றி பெற்றன. ஆயின் அவற்றுள் இருபடைகட்குத் தலைவராயிருந்த முஸ்லிம்கள் திடீரென்று சுல்தான்கள் பக்கம் சேர்ந்துகொண்டு இராயர் படையில் பெருங் குழப்பத்தை உண்டாக்கிவிட்டனர். இராமராயர் கொல்லப்பட்டார். அவரது தலை ஒரு ஈட்டியில் செருகப்பட்டு இராயர் படைகளுக்குக் காட்டப்பட்டது. அப்பொழுது உண்டான குழப்பத்தில் இராயர் படையைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான வீரர்கள் கொல்லப்பட்டனர். இராயர் படை சிதறி ஓடியது.

திருமலை ராயர் தலைநகருக்கு விரைந்தார்; அந்தப்புர மாதரையும் அரச பண்டாரத்தையும் கைக்கொண்டு

**பெநுகொண்டா** என்னும் கோட்டைக்கு விரைந்தார். சுல்தான்களின் வீரர்கள் தலைநகரத்தை அடைந்து அங்கிருந்த பெருஞ்செல்வம் தப்பிவிட்டதை அறிந்தனர். அவர்கள் தங்கள் சீற்றத்தை அத்தலைநகர்மீது செலுத்தினர்; அந்நகரக் கட்டடங்களை இடித்துத்தள்ளினர். அச்சிதைவுகள் இன்றும் தம் பழைமையை உணர்த்திக் கொண்டு இருத்தலைக் காணலாம்.

## தலைக்கோட்டைப் போருக்குப் பின்பு

திருமலை ராயர் பெநுகொண்டாவில் இருந்து கொண்டு தென்னாட்டுப் பேரரசை ஆண்டுவந்தார். பேரரசின் வீழ்ச்சியைக் கண்ட மதுரை, தஞ்சை, செஞ்சி மாகாணங்களை ஆண்டுவந்த நாயக்கர்கள் தம்மாட்சி பெற்றனர். திருமலை ராயர் அவர்களோடு நட்புக்கொண்டார்; தமக்கு ஆண்டுதோறும் கப்பம் கட்டிவர ஏற்பாடு செய்தார்; தம் மூத்த பிள்ளையான **ஸ்ரீரங்கரைத்** தெலுங்கு மாகாண ஆளுநராக்கினார்; இரண்டாம் மகனை இராம ராயரைக் கன்னட நாட்டின் ஆளுநராக அமர்த்தினார்; மூன்றாம் பிள்ளையான வேங்கடபதி ராயரைச் சந்திரகிரியில் தங்கித் தமிழகத்தை ஆண்டுவர ஏற்பாடு செய்தார். இங்ஙனம் திருமலை ராயர் அரசியல் அறிவுடன் செய்த ஏற்பாட்டினால் விசயநகரப் பேரரசு மேலும் ஒரு நூற்றாண்டு உயிருடன் இருந்தது.

திருமலை ராயருக்குப் பின்பு அவர் மகனை **முதலாம் ஸ்ரீரங்க ராயர்** (கி. பி. 1572–1585) அரசரானார். அவருக்குப்பின்பு அவர் தம்பியான **இரண்டாம் வேங்கட ராயர்** (கி. பி. 1586–1614) அரசாண்டார். அவர் காலத்தில் **டச்சுக்காரரும் ஆங்கிலேயரும்** தென்னிந்தியாவில் வாணிகம் செய்யத் துவங்கினர். டச்சுக்காரர் கடலூரிலும் பழவேற்காடு என்னும் இடத்திலும் தங்கி வாணிகம் செய்யலாயினர். ஆங்கிலேயர் சென்னையில் தங்கி வாணிகத்தை நடத்தினர். இரண்டாம் சீரங்கருக்குப்

பின்பு அவர் பிள்ளையான **இராமதேவ ராயரும்** (கி. பி. 1618–1630) **மூன்றும் வேங்கட ராயரும்** (கி. பி. 1630–1642), **மூன்றும் சீரங்கரும்** (கி. பி. 1642–1649) பேரரசராய் விளங்கினர் ; ஆயினும் தக்கணத்தை ஆண்ட சுல்தான்களின் படையெடுப்புகளால் படிப்படியாகத் தங்கள் செல்வாக்கை இழந்தனர். மூன்றும் சீரங்கரோடு விசயநகரப் பேரரசு முடிவுற்றது. மைசூர் நாடும் மதுரையும் இந்து நாடுகளாக இருந்தன.

## அரசியல்

### நாட்டுப் பிரிவுகள்

விசயநகரப் பேரரசர் தமிழகத்தை ஆண்டமையால் அவர்தம் ஆட்சி முறையை நாம் அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது. அரசனுக்கு அறிவுரை கூற **அமைச்சரவை** இருந்தது. அரசன் அமைச்சர் அறிவுரையைத் தள்ளி நடக்கவும் உரிமை உள்ளவன். அரசனுக்கு மனைவியர் பலர் இருந்தனர். எண்ணிறந்த பணிப்பெண்கள் அவனைச் சூழ்ந்திருந்து அவன் தேவைகளைக் கவனித்தனர். அரண்மனை அந்தப்புரத்திற்குப் பெரும் பொருள் செலவிடப்பட்டது. அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆடவர், அரசியல் அலுவல்களில் நியமனம் பெற்றனர்.

விசயநகரப் பெருநாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணமும் ஆளுநர் ஒருவரால் மேற்பார்க்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் பல உட்பிரிவுகள் இருந்தன. ஒவ்வோர் உட்பிரிவும் ஒரு தலைவன் ஆளுகையில் இருந்தது. அத்தலைவன் **நாயக்கன்** எனப்பட்டான். விசயநகரப் பெருநாட்டில் இருநூற்றுக்கு மேற்பட்ட நாயக்கர் இருந்தனர். ஒவ்வொருவரிடமும் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை இருந்தன. அப்படைகள் பேரரசர் புரியும்

போருக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது விதி. பேரரசரிடம் இலட்சக்கணக்கான வீரர்களைக் கொண்ட பெரும்படை இருந்தது. இப் பெரும்படையின் வலிமையால்தான் விசயநகரப் பேரரசு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் தென்னுட்டைக் காத்துவந்தது.

## வரவு–செலவு

நடு அரசாங்கம் பல பிரிவுகளாகப் பிரிந்து ஆட்சியைக் கவனித்தது. நடு அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் விசயநகரத்தில் அரண்மனைக்கு அருகில் அமைந்திருந்தன. அந்நகரில் இரண்டு பண்டாரங்கள் இருந்தன. ஒன்று அரசாங்க வரவுகளையும் செலவுகளையும் கவனித்தது; மற்றென்று அரச பண்டாரம். ஒவ்வோர் அரசரும் அப்பண்டாரத்தைப் பெருக்கிவந்தனர்.

நிலவரி, சிற்றரசு செலுத்திவந்தக் கப்பத்தொகை, நவராத்திரி விழாவின்போது மாகாண ஆளுநர் செலுத்திவந்த பெருந்தொகை, கடல் வாணிகத்தால் வந்த வரிப்பணம் ஆகியவை நடு அரசாங்க வருமானமாகும். வரி, நாணய வடிவத்திலும் பண்டங்கள் வடிவத்திலும் செலுத்தப்பட்டது. நிலங்கள் நன்செய் புன்செய் எனப்பிரிக்கப்பட்டு, விளைச்சலுக்கு ஏற்ப வரி விதிக்கப்பட்டன. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கிலிருந்து, பாதிவரையில் சமயத்திற்கேற்றவாறு வரி வசூலிக்கப்பட்டது. பல தொழில்கள்மீதும், வீடுகள்மீதும் வரி விதிக்கப்பட்டது. குறிப்பிட்ட சிலவற்றைப் பயிரிடக் குடிமக்கள் ஒரு தொகையைச் செலுத்தி உரிமை பெற்றனர். சந்தை கூடும் இடங்களில் வரி விதிக்கப்பட்டது. நீதிமன்றங்களில் தண்டம் விதிக்கப்பட்டது. இத்தகைய வழிகளில் வந்த வருவாய் அரசாங்கச் செலவிற்குப் பயன்படுத்தப்பட்டது. இவ் வருவாயில் பெரும்பகுதி அரண்மனைச் செலவிற்கும் படையின் பெருக்கத்திற்கும் அறச்செயல்

களுக்கும் ஆண்டுதோறும் செலவிடப்பட்டது. எஞ்சிய பகுதி அரச பண்டாரத்தில் சேர்க்கப்பட்டது.

## ஆட்சி முறை

சோழர் காலத்தில் இருந்த ஊராட்சி முறை தொடர்ந்து இருந்துவந்தது. ஆயினும் சோழர் காலத்தில் இருந்த ஊராட்சி உரிமைகள் படிப்படியாகக் குறைந்துவந்தன. மாகாண ஆட்சி அதிகாரிகள் ஊராட்சியின் பெரும்பகுதியைக் கைக்கொண்டனர். மாகாண ஆளுநர் பெரும்பாலும் படைத்தலைவராகவே இருந்தனர். மாகாண எல்லைகள் அடிக்கடி மாறின. பெருநாட்டின் வடபகுதியில் இருந்த மாகாணங்கள் அடிக்கடி சுல்தான்களுக்கும் கலிங்கருக்கும் அடிமைப்படுதலும் மீட்கப்படுதலும் தொடர்ந்து நடைபெற்றமையால் ஊராட்சி முறையோ, மாகாண ஆட்சி முறையோ செம்மையாக நடைபெறவில்லை.

நடு அரசாங்கத்தில் தூதரும் ஒற்றரும் இருந்தனர். நடு அரசாங்க ஒற்றர் பெருநாட்டிற்கு உட்பட்ட எல்லா மாகாணங்களிலும் இருந்தனர்; ஆங்காங்கு நடைபெறும் சூழ்ச்சிகளையும் பிறவற்றையும் உடனுக்குடன் பேரரசிற்கு அறிவித்துவந்தனர். பெருநாட்டில் அரசியல் சிறப்பு வாய்ந்த இடங்களில் **கோட்டைகள்** கட்டப்பட்டன. ஒவ்வொரு கோட்டையும் ஒரு படைத்தலைவன் பாதுகாப்பில் விடப்பட்டது. பெருநாட்டு எல்லையில் முக்கியமான இடங்களில் படைகள் இருந்து எல்லையைப் பாதுகாத்துவந்தன. **ஊர்க்காவல் முறை** நாடெங்கும் வழக்கில் இருந்தது. ஓர் ஊரில் திருட்டு நடைபெறுமாயின் அத்திருட்டால் உண்டான இழப்பை ஊர்க்காவலரே ஈடுசெய்ய வேண்டும் என்ற விதி இருந்தது. இந்த முறையால் ஊர்க்காவலர் மிக்க விழிப்புடன் ஊர்களைக் காவல் காத்தனர். இரவு நேரங்களில் ஊர்க்

காவலர் ஊரைச் சுற்றிச்சுற்றி வந்தனர். தலைநகரத்தில் ஊர்க்காவல் முறை மிகச்சிறந்த நிலையில் இருந்தது.

ஒவ்வொரு மாகாணத்திலும் நகரத்திலும் சிற்றூரிலும் நீதிமன்றங்கள் இருந்தன. கொடிய குற்றங்களுக்குக் கடுந்தண்டனைகள் விதிக்கப்பட்டன. மாறுகால் மாறுகை வாங்குதல், கழு ஏற்றுதல், யானைகளைக் கொண்டு கொல்வித்தல் என்பவை கடுந்தண்டனைகளாகும்.

விசயநகர வேந்தர் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர் மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான குளங்களையும் நூற்றுக்கணக்கான ஏரிகளையும் வெட்டுவித்தனர். பெரிய குளங்களிலும் ஏரிகளிலுமிருந்து வாய்க்கால்கள் நீரை வயல்களுக்குக் கொண்டுசென்றன. சில இடங்களில் அணைக்கட்டுகளும் கால்வாய்களும் அமைக்கப்பட்டன. சமுத்திரம் என்னும் பெயருடன் இன்றுள்ள ஊர்களில் காணப்படும் குளங்கள் அல்லது ஏரிகள் விசயநகர வேந்தர் காலத்தவை என்னலாம். இவ்வாறே மாகாணத் தலைவர்கள் தத்தம் மாகாணங்களில் செய்த நீர்ப்பாசன வசதிகள் பலவாகும்.

விசயநகரப் பெருநாட்டில் அழகிய மெல்லிய பருத்தி ஆடைகளும் பட்டாடைகளும் நெய்யப்பட்டன. அவை பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. அரண்மனைகளிலும் செல்வர் இல்லங்களிலும் பொன்நகைகளும் பொன்பாத்திரங்களும் மிகுதியாய்ப் பயன்பட்டன. விசயநகர வேந்தர்கள் கோவில்களுக்கு நகைகளை வழங்கினர். கிருஷ்ணதேவ ராயரும் அச்சுததேவ ராயரும் செய்த தானங்கள் பலவாகும். ஆடல், பாடல் மகளிர் அணிந்த அணிவகைகள் பல. வெள்ளிப் பாத்திரங்களும் வெள்ளி நகைகளும் வழக்கிலிருந்தன. செம்பும் இரும்பும் மிகுதியாய்ப் பயன்பட்டன. செம்புகொண்டு பலவகைப் பாத்திரங்கள் செய்யப்பட்டன. வேல், ஈட்டி, கோடரி முதலியன

இரும்பைக்கொண்டு செய்யப்பட்டன. விசயநகரத்தில் உலோகக் கடைகள் மிகுதியாய் இருந்தன.

சேரநாட்டுச் சந்தனக் கட்டைகள் மிகுதியாகச் செலவாயின. தலைநகரத்தில் ரோசாமலர்கள் நாள்தோறும் விற்கப்பட்டன. சாம்பிராணி, அகில், சந்தனம், கஸ்தூரி, புனுகு, சவ்வாது முதலிய மணப்பொருள்கள் தலைநகரத்தில் மிகுதியாய்ச் செலவாயின.

பெருநாட்டிலிருந்து அரிசி, ஆடைகள், சர்க்கரை, மணப்பொருள்கள், இரும்பு ஆகியவை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இக்கடல் வாணிகத்தில் அரேபியர், அபிசீனியர், மூர்வகுப்பினர், போர்த்துகீசியர் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் குதிரைகளையும் முத்துக்களையும் கண்ணாடிப் பொருள்களையும் இறக்குமதி செய்தனர். விசயநகரப் பேரரசு கிழக்கு நாடுகளுடனும் மேற்குநாடுகளுடனும் உயர்ந்த முறையில் வாணிகம் செய்துவந்தது; அயல்நாட்டு வணிகர்க்கு வேண்டும் வசதிகள் அளித்து வாணிகத்தைப் பெருக்கியது. யானைகள் ஈழத்திலிருந்து இறக்குமதி ஆயின. சீனத்துப்பட்டும் மலேயாவைச் சேர்ந்த மணப்பொருள்களும் தென்னிந்தியத் துறைமுகங்களில் இறக்குமதியாயின. கரையோர வாணிகத்திலும் உள்நாட்டு வாணிகத்திலும் தென்னிந்தியச் செட்டிமாரும் முஸ்லிம்களும் பங்குகொண்டனர்.

## கலைவளர்ச்சி

ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் என்பன **அழகுக்கலைகள்** அல்லது **நுண்கலைகள்** எனப்படும். விசயநகரப் பெருநாட்டில் இக்கலைகள் நன்கு வளர்க்கப்பட்டன. விசயநகர அரண்மனையில் தங்கத்தினால் செய்யப்பட்ட பலவகைப் பொருள்களைக் கொண்ட அறை ஒன்று இருந்தது. அதனுள் சிறந்த ஓவியங்கள் இருந்தன. அவை செல்வர், எளியவர், பிச்சைக்காரர், போர்த்துகீசியர், அரேபியர் முதலியோரைப் பற்றியவை.

அந்தப்புர மாதர் இப்பலதிறத்தாரைப் பற்றியும் அறிந்து கொள்வதற்காகவே அவ்வோவியங்கள் தீட்டப்பட்டவை யாம். அரண்மனையுள் இருந்த சில அறைகளின் சுவர் கள்மீது ஓவியங்கள் தீட்டுப்பட்டு இருந்தன. கோவில் களிலும், பிற மாளிகைச் சுவர்களிலும் கண்கவர் ஓவியங் கள் வரையப்பட்டிருந்தன. அரசர் அரச அலுவல்களைக் கவனிக்கும் பெரிய கட்டடம் முழுமையும் திரைச்சீலை களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் சுவர்களில் அழகிய ஓவியங்கள் காட்சி அளித்தன. அக் கட்டடத் தின் நான்கு வாயில்களிலும் அழகிய மகளிர் ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தன. அந்தப்புர மாதர் பயன்படுத்தி வந்த நடன அரங்கின் சுவர்களில் பலவகை நடனங்களைக் குறிக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன.

இராயரது வளமனைக்குச் செல்லும் வழியை உணர்த் தும் வாயில்களின் இருபக்கங்களிலும் இரண்டு உருவச் சிலைகள் இருந்தன. அவை நரசநாயக்கர் உருவச்சிலை யும் அவர் மகனுரான கிருஷ்ணதேவராயர் உருவச்சிலை யும் ஆகும். அவை உயிருள்ள உருவங்களாய்க் காட்சி அளித்தனவாம். இங்ஙனம் உருவச்சிலைகளை அமைக்கும் பழக்கம் அக்காலத்தில் சிறந்திருந்தது என்பது திருப்பதி யில் உள்ள கிருஷ்ணதேவ ராயர், அவர் மனைவியர் இருவர் உருவச்சிலைகளைக் கொண்டும் நன்கு தெளிய லாம்.

கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் பல கட்டடங்கள் தோன்றின. அவற்றுள் தலைநகரில் உள்ள ஹசார இராமசாமி கோவிலும் விட்டலசுவாமி கோவிலும் சிறந்தவை. விட்டலசுவாமி கோவிலில் கருவறை, நடு மண்டபம், முன் மண்டபம் என்பன உயரமான தளத்தின்மீது கட்டப்பெற்றவை. கோவிலின் திருச் சுற்றுத் தாழ்ந்த தளத்தின்மீது கட்டப்பட்டது. திருச் சுற்றுச் சதுரமானது. அதன்மீதுள்ள கட்டட அமைப் புப் பாராட்டத்தக்கது. போர்த்துகீசியர் குதிரைச்

சேவகர்கள் உருவங்களும் அவர்தம் குதிரைகளின் உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வட்டத்தூண்கள் சதுரத்தூண்களோடு இணைந்திருந்து அழகிய காட்சியைத் தருகின்றன. விசயநகர வேந்தர்காலக் கோபுரங்கள் கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பவை. அவை செங்கல், சுண்ணும்பு, மரம் இவற்ருல் ஆகியவை.

கிருஷ்ணதேவ ராயர் இசையில் மிக்க ஈடுபாடு கொண்டவர். அரண்மனையில் இன்னிசை நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடைபெறுதல் வழக்கம். பலவகை இசைக் கருவிகள் அக்காலத்தில் இருந்தன. இன்று நாட்டில் பெருவழக்குப் பெற்றுள்ள **கருநாடக சங்கீதம்** விசயநகர வேந்தர் காலத்தில் மிகுதியாக வளர்க்கப்பட்டது. நவராத்திரி விழாவில் இசை நிகழ்ச்சிகள் சிறப்பிடம் பெற்றன. கிருஷ்ணதேவ ராயர் ‘ஜாம்பவதி கல்யாணம்’ என்றும் நாடகநூலை இயற்றினுர். அது வசந்தவிழாக்காலத்தில் விசயநகரத்தில் நடிக்கப்பட்டது. நடிகர் நிலங்களை மானியமாகப் பெற்றனர்.

**நடன மகளிர்** அக்காலத்தில் உயர்வாகக் கருதப்பட்டனர். அவர்கள் மாடமாளிகைகளில் வாழ்ந்தனர் அரசர் முதல் ஆண்டி ஈருக அனைவரும் அவர்களை மரியாதையுடன் நடத்தினர்; அரசாங்க உயர் அலுவலர் அவர்தம் இல்லங்களுக்குச் சென்று பாடல்களைக் கேட்டும் ஆடல்களைக் கண்டும் பொழுது போக்கினர்; அம்மகளிர் அந்தப்புர மகளிருடன் நெருங்கிப் பழகினர்; அவர்க்கு ஆடலும் பாடலும் கற்பித்தனர். அம்மாதர் மற்போர்ப் பயிற்சியும் பெற்றிருந்தனர்; நவராத்திரி விழாவில் ஆடினர்; பாடினர்; மற்போர் புரிந்தனர்.

## உடையும் உணவும்

அக்காலப் பெருமக்கள் பல மடிப்புகளுடன் கூடிய ஆடையை அரையில் உடுத்தனர்; உடம்பில் நீண்டு தொங்கிய சட்டையை அணிந்தனர்; காலுக்குச் செருப்

பணிந்தனர்; தோள்மீது மடிப்புள்ள மேலாடையைத் தரித்திருந்தனர். செல்வமகளிர் மெல்லிய பருத்தி ஆடைகளையும் பட்டாடைகளையும் உடுத்தினர்; சரிகை வேலைப்பாடு செய்யப்பட்ட தோல் செருப்புகளை அணிந்த னர். பிராமணர், சமணர், வீரசைவர் ஆகியோர் மரக்கறி உணவையே உட்கொண்டனர். மற்றவர் புலால் உணவையே உண்டனர். அக்கால மக்கள் வெற்றிலை போடும் பழக்கத்தை மிகுதியாய்க் கொண்டிருந்தனர்; இப்பழக்கத்தை அறியாத அயல்நாட்டு யாத்திரிகர் ஒருவர் இதனைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார். பொது மக்கள் இன்றுள்ளவாறே எளிய பருத்தி உடைகளை உடுத்தனர்; அரிசி, சோளம், கேழ்வரகு முதலியவற்றைச் சமைத்து உண்டனர்; ஓட்டு வீடுகளிலும் கீற்று வீடு களிலும் வாழ்ந்தனர்.

விசயநகரப் பேரரசு கி. பி. 14ஆம் நூற்றாண்டின் இடையில் தோன்றியது; கி. பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மறைந்தது. இந்த மூன்று நூற்றாண்டு களிலும் அது மிக்க வன்மை வாய்ந்த முஸ்லிம் படை யெடுப்புக்களைத் தாங்கி நின்றது; தன்னால் இயன்றவரை இந்து சமயத்தையும் இந்துக்களின் நலன்களையும் பாது காத்தது; தான் தோன்றுவதற்கு முன்பு இந்நாட்டில் கட்டப்பெற்ற வானளாவிய கோபுரங்களையும் விமானங் களையும் கொண்ட சைவ வைணவக் கோவில்களையும் அழிவிலிருந்து காத்தது. சுருங்கக்கூறின், பல்லாயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர் வளர்த்துவந்த சமயத்தை யும் கலைகளையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் இன்று நாம் பெற்று அநுபவிக்கும்படி செய்தது விசய நகரப் பேரரசேயாகும் என்பது வரலாறு கண்ட உண்மை யாகும்.

# 6. நாயக்கர் காலம்

(கி. பி. 1529—1736)

## விசுவநாத நாயக்கர் (கி. பி. 1529–1564)

அச்சுதராயர் காலத்தில் **விசுவநாத நாயக்கர்** மதுரையில் விசயநகரப் பேரரசின் பிரதிநிதியாக இருந்து பாண்டிய நாட்டை ஆளத் தொடங்கினர். அவருக்குத் தளவாயாக (சேனைத் தலைவராக) இருந்தவர் **அரியநாத முதலியார்** என்பவராவர். அக்காலத்தில் பாண்டியர் மரபினர் ஐவர் ஒன்று சேர்ந்து நாயக்கர் அரசை எதிர்த்தனர். விசுவநாதர் அவர்களை அடக்கினர். கம்பணன் காலத்தில் பாண்டிய நாட்டின் பல பகுதிகளில் இருந்த விசயநகரப் பேரரசின் படைத்தலைவர்களும் பெருமக்களும் நாயக்கர் ஆட்சியில் பங்கு கொள்ள விரும்பினர். அவர்களது ஒத்துழைப்பு இல்லாது நாட்டை ஆளுவது கடினம் என்பதை உணர்ந்த விசுவ நாதரும் அரியநாதரும் நாட்டை **72 பாளையங்களாகப்** பிரித்தனர். ஒவ்வொரு பாளையக்காரரும் தம் ஆட்சிக்கு விடப்பட்ட ஊர்களின் வருவாயை மூன்று பகுதியாக்கி, ஒரு பகுதியை மதுரை அரசுக்கு அனுப்பவேண்டும், மற்றொரு பகுதியைப் படைக்குச் செலவிடவேண்டும், மூன்றும் பகுதியைத் தம் பாளையத்திற்குச் செலவிட வேண்டும் என்பது விதி. மேலும் ஒவ்வொரு பாளையக் காரரும் மதுரை நாயக்கர் பிறருடன் செய்யும் போருக்குப் படை உதவி புரிய வேண்டும். பாளையக்காரர் இவ்விரு விதிகட்கும் கட்டுப்பட்டுத் தத்தம் பாளையத்தை ஆண்டு வரலாயினர். இம்முறையால் நாட்டில் அமைதி நிலவிற்று.

விசுவநாதர் மதுரையில் மீனாட்சியம்மன் கோவிலைப் புதுப்பித்தார். அரியநாதர் அக்கோவிலில் ஆயிரக்கால்

மண்டபத்தைக் கட்டி முடித்தார். அம்மண்டபத்தின் முதல் தூணில் குதிரைமீது சவாரி செய்வதுபோன்ற உருவச்சிலை அவருடையதேயாகும்.

## கிருஷ்ணப்ப நாயக்கர் (கி. பி. 1564–1572)

இவர் விசுவநாதரின் புதல்வர்; தந்தையோடிருந்து ஆட்சி அநுபவம் நிறையப்பெற்றவர். இவர் காலத்தில் **தும்பிச்சி நாயக்கன்** என்ற பாளையக்காரன் தன்னுடன் பாளையக்காரர் சிலரைச் சேர்த்துக்கொண்டு தன்னாட்சி பெறக் கலகம் செய்தான். அப்போது நடைபெற்ற போரில் தும்பிச்சி நாயக்கன் கொல்லப்பட்டான். கிருஷ்ணப்பர் இலங்கைமீது படையெடுத்துச் சென்று இலங்கை அரசனைப் போரில் முறியடித்தார். இவர் காலத்தில்தான் தலைக்கோட்டைப் போர் நடந்தது. விசயநகரப் பேரரசு ஆட்டங்கண்ட போதிலும், கிருஷ்ணப்பர் அப்பேரரசுக்குக் கப்பங் கட்டிவந்தார். அவர் தம் பெயரால் பல ஊர்களை அமைத்தார். அவை **கிருஷ்ணாபுரம்** எனப் பெயர் பெற்றன. திருநெல்வேலிக்கு அருகில் உள்ள கிருஷ்ணாபுரம் சிறந்த சிற்பங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தகும். அவர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலும் பல திருப்பணிகள் செய்தார்.

## வீரப்ப நாயக்கர் (கி. பி. 1572–1595)

இவர் கிருஷ்ணப்பரின் மூத்த புதல்வர். இவரது ஆட்சியில் சிற்றரசனாய் இருந்த **வாணாதிராயன்** ஒருவன் பல ஊர்களைக் கைப்பற்றி நாட்டில் கலகத்தை உண்டாக்கினான். வீரப்பர் அவனைப் போரில் வென்று கலகத்தை அடக்கினார். தென்காசியைத் தலைநகராய்க் கொண்டு ஆண்டுவந்த பாண்டியர் மரபைச் சேர்ந்த அதிவீரராம பாண்டியனும் வரதுங்கராம பாண்டியனும் இக்காலத்த வரேயாவர். வீரப்பர் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைச் சீர்திருத்தினார்; தில்லையில் திருப்பணிகள் செய்தார்;

மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலும் சில திருப்பணிகள் செய்தார். இவர் காலத்தில்தான் கிறிஸ்தவ சமயப் பிரசாரம் பாண்டிய நாட்டில் நுழைந்தது. மதுரையில் மாதாகோவில் ஒன்று கட்டப்பட்டது.

## இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி. பி. 1595–1601)

இவர் வீரப்பரின் புதல்வர். இவர் நாட்டை அமைதியாய் ஆண்டார். இவர் காலத்தில்தான் தளவாய் அரியநாதர் காலமானார்.

## முத்து வீரப்ப நாயக்கர் (கி. பி. 1609–1623)

இவர் முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கரின் (கி. பி. 1601–1608) புதல்வர். இவர் விசயநகரப் பேரரசின் ஆட்சிக்கு அடங்காமல் தம்மாட்சி பெற விரும்பினார். தஞ்சை நாயக்கர் இம்முயற்சிக்கு எதிரியாக இருந்தார். அதனால் முத்துவீரப்பர் தம் முயற்சியில் தோல்வியுற்றார். இவர் கி. பி. 1616இல் தமது தலைநகரைச் திரிசிரபுரத்திற்கு மாற்றினார். இராபர்ட்-டி-நொபிலி என்ற பாதிரியார் முத்துவீரப்பர் காலத்தில் மதுரையில் தங்கிச் சமயத் தொண்டு செய்து வந்தார்.

## திருமலை நாயக்கர் (கி. பி. 1623–1659)

இவர் மதுரையைத் தலைநகராக்கினார். இவர் காலத்தில் மதுரைப் பெருநாடு சமயப்பற்று நிறைந்த நாடாய் விளங்கியது. இவர் காலத்தில் பல போர்கள் நடைபெற்றன. இவர் மைசூர் அரசனுடன் போரிட்டார்; திருவாங்கூர் மன்னனுடன் போர் புரிந்தார்; பின்பு சேதுபதியுடன் போர் புரிந்தார்; விசயநகரப் பேரரசரோடும் போரிட்டார்; அக்காலத்தில் பிஜப்பூர் சுல்தானும், கோல்கொண்டா சுல்தானும் விசயநகரப் பெருநாட்டின் வடபகுதியில் குழப்பத்தை விளைவித்தனர். திருமலை

நாயக்கர், மதுரை மீனுட்சியம்மன் கோவிலில் சில திருப்பணிகள் செய்தார்; திருப்பரங்குன்றம், அழகர்கோவில், சீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில், திருவரங்கம் பெரிய கோவில் முதலியவற்றிலும் திருப்பணிகள் செய்தார். இவர் மதுரையில் கட்டுவித்த பெரிய அரண்மனையின் ஒரு பகுதியே இன்று **திருமலை நாயக்கர் மகால்** என்னும் பெயருடன் காட்சியளிக்கிறது. திருமலை நாயக்கர், மீனுட்சியம்மனுக்குப் பல அணிகளைச் செய்வித்தார்; விழாக்களைச் சிறப்பாக நடத்தினர். மதுரையில் உள்ள பெரிய தெப்பக்குளம் இவர் காலத்தில் வெட்டப்பட்டதேயாகும். இவர் மீனுட்சியம்மன் கோவிலுக்குப் பல ஊர்களைத் தானமாக வழங்கினர். மதுரையில் உள்ள **புது மண்டபம்** இவர் காலத்தில் கட்டப்பட்டதேயாகும். இம்மண்டபம் 333 அடி நீளமுடையது; 105 அடி அகலமுடையது; 25 அடி உயரமுடையது; 124 தூண்களை உடையது. மேல்தளம் கற்களால் மூடப்பெற்றது. ஒவ்வொரு தூணிலும் அழகிய சிற்பங்கள் அமைந்துள்ளன. இம்மண்டபத்தில் வசந்தவிழா நடைபெற்றது. அக்காலத்தில் குளிர்ச்சியாய் இருப்பதற்காக மண்டபத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் தண்ணீர் நிரப்பி வைக்க அகழிபோல் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

நமது மாகாணத்தில் பல இடங்களில் இராசகோபுரம் என்னும் பெயருடன் முற்றுப் பெருத கோபுரத்தின் அடிப்பகுதிகள் காணப்படுகின்றன. மதுரையில் புது மண்டபத்திற்கு எதிரிலும் இத்தகைய கோபுர அடிப்பகுதி உள்ளது. இவற்றைக் கட்ட முனைந்தவர் திருமலை நாயக்கரேயாவர். பொருள் முட்டுப்பாட்டினுலும் பிற காரணங்களினுலும் இராச கோபுரங்கள் கட்டி முடிக்கப்படவில்லை. இவர் நெடுஞ்சாலைகளை அமைத்தார்; சாலை ஓரங்களில் சத்திரங்களைக் கட்டுவித்தார்; பல கால்வாய்களை வெட்டுவித்தார். இவர் காலத்தில் **போர்த்துகீசியரும் டச்சுக்காரரும்** மதுரை நாட்டுக் கடற்

கரைப் பகுதியில் வாணிகம் செய்தனர். அவ்விரு வரும் தம்முள் பொருமை கொண்டு பூசலிட்டனர். இவர் காலத்தில் கிறிஸ்தவ சமயம் மதுரை நாட்டில் பல துன்பங்களுக்கிடையே இருந்துவந்தது. ஆயின் அத்துன்பங்கள் பொதுமக்களால் உண்டானவை.

## இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் (1659)

இவர் திருமலை நாயக்கரின் புதல்வர். இவர் நான்கு மாதங்களே அரசராயிருந்தவர். இவர் காலத்தில் முஸ்லிம் படையெடுப்பு மதுரை நாட்டின்மீது நடந்தது. அப்பொழுது உண்டான கொடிய பஞ்சத்தில் கணக்கற்ற வீரர் உயிரிழந்தனர்.

## சொக்கநாத நாயக்கர் (கி. பி. 1659–1682)

இவர் இரண்டாம் முத்து வீரப்பரின் புதல்வர். இவர் காலத்தில் இவருடைய படைத்தலைவனை லிங்கம நாயக்கன் அரசைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்தான். அரசர் அச்சூழ்ச்சியை முறியடித்தார். அக்காலத்தில் செஞ்சி, பிஜப்பூர் சுல்தான் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. லிங்கமன் செஞ்சியிலிருந்த பிஜப்பூர் படைத்தலைவன் உதவியைக் கொண்டு மதுரை நாட்டின்மீது படையெடுத்தான். தஞ்சை நாயக்கர் அவனுக்கு உதவி செய்தார். சொக்கநாத நாயக்கர் தாமே தலைமை தாங்கிப் போரை நிகழ்த்தினர்; போரில் வெற்றிபெற்றூர். இப்போருக்குப் பின்பு மதுரை நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அரசர் குடிமக்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தார். பஞ்சம் நீங்கும் தறுவாயில் பிஜப்பூர் சுல்தான் படையெடுப்பு ஏற்பட்டது. அரசர் பெரும் பொருளைப் பகைவனுக்குக் கொடுத்து நாட்டில் அழிவு வேலை நிகழாதபடி காத்தார்; பின்பு தஞ்சை நாயக்கர்மீது படையெடுத்து அவரைப் போரில் முறியடித்தார்; முஸ்லிம் படையெடுப்பின்போது தமக்குப் படை உதவி செய்யாதிருந்த சேது

பதியையும் தாக்கினர். சொக்கநாதர் தமது தலை நகரைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினர். அங்கிருந்து கொண்டு தஞ்சை நாயக்கரை அடக்க வேண்டுமென்பது இவர் விருப்பம். சொக்கநாதர் தஞ்சையைத் தாக்கினர்; தஞ்சை நாயக்கரின் மகளைத் தமக்கு மணம் செய்விக்கும் படி வற்புறுத்தினர். தஞ்சையை ஆண்ட விசயரகுநாத நாயக்கர் அதற்கு இணங்கவில்லை; தம் அந்தப்புரமாதரை எரி மூழ்கச் செய்தார்; தம் மகனோடு போர்க்களத்தில் புகுந்து மதுரை மன்னரோடு போரிட்டு இறந்தார். சொக்கநாதர் தம் சிற்றன்னையின் புதல்வரான அழகிரி நாயக்கரைத் தஞ்சை நாட்டுக்கு அரசப் பிரதிநிதியாய் அமர்த்தினர்.

அழகிரி சுயாட்சி பெற விரும்பினன். அவ்வமயம் போரில் இறந்த விசயராகவ நாயக்கரிடம் பணி செய்து வந்த வெங்கண்ணு என்பவன் அவருடைய பெயரனை செங்கமலதாசன் என்ற சிறுவனை எவ்வாறோ கண்டறிந் தான்; அவனை பிஜப்பூர் சுல்தானிடம் அழைத்துச் சென்று, அச் சிறுவனைத் தஞ்சைக்கு மன்னனுக்க வேண்டினன். அப்பொழுது அச்சுல்தானின் பிரதிநிதி யாகச் செஞ்சியை ஆண்டுவந்தவன் வெங்காஜி என்பவன். அவன் மராத்திய மரபினன்; சிவாஜியின் சிறிய தாயின் மகன். சுல்தான் அந்த வெங்காஜியைத் தஞ்சை யைத் தாக்கும்படி ஏவினன். வெங்காஜி கி. பி. 1676இல் தஞ்சையைக் கைப்பற்றினன்; செங்கமலதாசன் அரி யணை ஏறினன். அவன் தனக்கு உதவி செய்த வெங் கண்ணுவைப் புறக்கணித்தான். அதனல் வெகுண்ட வெங்கண்ணு தஞ்சையைக் கைப்பற்றி ஆளும்படி வெங் காஜியை வேண்டினன். வெங்காஜி அவ்வாறே தஞ்சை யைக் கைப்பற்றி முடிசூடிக்கொண்டான். அவன் நீர்ப் பாசன வசதிகளைப் பெருக்கினன்; குடிகளை அன்போடு ஆளத் தொடங்கினன்.

அவன் முடிசூடிய மறு ஆண்டு **சிவாஜி** கருநாடகத்தின்மீது படையெடுத்தார். சிவாஜி செஞ்சியைக் கைப்பற்றினர். அவர் தம் தம்பியைத் தாக்கவில்லை. சொக்கநாதர் ஆட்சியில் கிறிஸ்தவ சமயம் ஓரளவு வளர்ச்சி பெற்றது. அரசி **மங்கம்மாள்** இச் சொக்கநாத நாயக்கரின் மனைவியாவாள்.

## மூன்றும் முத்து வீரப்ப நாயக்கர் (கி. பி. 1682–1689)

இவர் சொக்கநாத நாயக்கரின் மனைவியருள் ஒருத்தியான அன்னமுத்தம்மாளின் புதல்வர். இவர் ஏழு ஆண்டுகளே அரசராயிருந்தார். இவர் காலத்தில் மதுரை நாட்டின் பெரும் பகுதியை மைசூர் மன்னனும், தஞ்சை வேந்தனும், சேதுபதியும் கவர்ந்துகொண்டனர். அம் மூவரிடமும் ஒற்றுமை இல்லை. மதுரையும் பகைவராட்சியில் இருந்தது. இவர் காலத்தில் **ஜான்-டி-பிரிட்டோ** என்ற பாதிரியார் மதுரை நாட்டில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினர். அவர் சேதுபதி நாட்டில் பல துன்பங்களை அடைந்தார். முத்து வீரப்பர் பல கோவில்களில் திருப்பணிகள் செய்தார்; பல அகரங்களை ஏற்படுத்தினர்; சத்திரங்களைக் கட்டுவித்தார்.

## அரசி மங்கம்மாள் (கி. பி. 1689–1706)

முத்து வீரப்பர் இறக்கும் பொழுது அவருக்கு மூன்று மாத ஆண் குழந்தை இருந்தது. அதன் பாட்டியாகிய **மங்கம்மாள்** அதற்குப் பட்டம் கட்டி அதன் சார்பாக நாடாண்டாள். அவ்வம்மையின் காலத்தில் **ஔரங்கசீப்** தென்னாட்டைக் கைப்பற்றினர். அவரது ஆட்சிக்கு அனைவரும் பணிந்தனர். அரசி மங்கம்மாளும் ஆண்டுதோறும் கப்பம் கட்ட இசைந்தாள். அறிவிற் சிறந்த அம்மாதரசி முகலாயப் படைத் தலைவர்களின் உதவியால் தன் கணவர் இழந்த மதுரைநாட்டின் பகுதி

களை மீண்டும் பெற்ருள். மங்கம்மாள், தனக்குக் கப்பம் கட்டாத சேரநாட்டின்மீது படையெடுத்துச் சேரனை அடக்கிக் கப்பம் கட்டும்படி செய்தாள். தஞ்சையை ஆண்ட வெங்காஜியின் மகனுன **ஷாஜி** என்பவன் மதுரை நாட்டின் சில பகுதிகளைக் கவர்ந்துகொண்டான். அரசி தன் படைகளை ஏவி அப் பகுதிகளை மீட்டாள். சேதுபதி, அரசியின் படையை முறியடித்துத் தம்மாட்சி பெற்ருர்.

மங்கம்மாள் காலத்தில் சேதுபதி நாட்டில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். 1693இல் **பிரிட்டோ பாதிரியார்** சேதுபதி நாட்டில் கொல்லப்பட்டார். தஞ்சை நாட்டில் இருந்த கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப் பட்டனர். ஆயின் மதுரை நாட்டில் கிறிஸ்தவர்கள் பாதுகாப்புப் பெற்றனர்.

மங்கம்மாள் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிளுள்; சாலைகளையும் சோலைகளையும் அமைத்தாள்; சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களை நட்டாள்; தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தாள்; இராமேசுவரம் போகும் பிரயாணிகள் தங்குவதற்கு ஆங்காங்குச் சத்திரங்களைக் கட்டுவித்தாள்; பல அகரங்களை ஏற்படுத்திப் பிராமணர்களுக்கு உதவிளுள். மங்கம்மாள் முஸ்லிம்களுடைய பள்ளி வாசலுக்கும் நிலங்களை உதவிளுள். அந்த அம்மை பல கட்டடங்களைக் கட்டிளுள்; சௌராஷ்டிரருக்குப் பூணூல் அணிதல் முதலிய உரிமைகளை வழங்கிளுள்.

## விசயரங்க சொக்கநாத நாயக்கர் (கி. பி. 1706–1732)

இவர்தாம் நான் முன்பு குறிப்பிட்ட மூன்று மாதக் குழந்தையாய் இருந்தவர். இவர் தம் பதினேழாம் வயதில் பட்டத்தை அடைந்தார். இவர் அரசியல் பற்றற்றவர். இவர் கோவில் திருப்பணிகளிலேயே தம் கவனத்தைச் செலுத்திளுர்; தலங்களுக்கு யாத்திரை செய்துகொண்

டிருந்தார்; நாட்டின் பெரும் பணத்தை அறச் செயல் களில் செலவிட்டார். இவரது போக்கைக் கண்ட மைசூர் மன்னன் சேலத்தையும் கோயம்புத்தூரையும் கைப் பற்றிக்கொண்டான். மதுரை நாட்டில் அரசாட்சி கல கலத்தது. இவர் கிறிஸ்தவ சமயம் வளர உதவி புரிந்தார்.

சேதுபதி நாட்டில் அரச பதவி பற்றிய பூசல் எழுந் தது. தஞ்சை மராத்திய மன்னன் அப்பூசலை அடக்கி ஞன்; மறவர் நாட்டின் ஒரு பகுதியைத் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டான். எஞ்சிய பகுதியை ஐந்தாகப் பங்கிட்டான்; அவற்றுள் மூன்றைக் **கட்டையத் தேவன்** என்பவனுக்குக் கொடுத்தான். இரண்டு பங்கினைச் **சசிவர்ணத் தேவனுக்குக்** கொடுத்தான். கட்டையத் தேவன் **குமார முத்து விசயரகுநாத சேதுபதி** என்ற பட்டத்துடன் இராமநாதபுரத்திலிருந்து தனது நாட்டை ஆளத் தொடங்கிஞன்; சசிவர்ணத்தேவன் சிவகங்கையி லிருந்து தனது நாட்டை ஆளளாஞன்.

## அரசி மீஞட்சி (கி. பி. 1732–1736)

இவ்வம்மை விசயரங்க சொக்கநாதர் மனைவி. அவ் வரசருக்குப் பிள்ளை இல்லாததால், திருமலை நாயக்கரின் தம்பியின் வழியில் வந்த பங்காரு திருமலை நாயக்கன் மகனை மகன்மை (சுவீகாரம்) செய்துகொண்டாள். பங் காரு திருமலை நாயக்கன் அரசைக் கைப்பற்ற விரும் பிஞன். அக்காலத்தில் ஆர்க்காட்டு நவாபு தம் மகனை யும் மருமகனையும் ஏவி மதுரையைக் கைப்பற்ற முனைந் தார். பங்காரு திருமலை திண்டுக்கல் பகுதியைக் கைப் பற்றிக்கொண்டான். நவாபுவின் படை அவனைப் போரில் முறியடித்து மதுரையைக் கைப்பற்றியது. நவாபுவின் படைத் தலைவன் தன்னைச் சிறை செய்வான் என்பதை அறிந்த மீஞட்சி விடத்தை உட்கொண்டு இறந்தாள். **அவளோடு மதுரை நாயக்கர் பரம்பரை**

**மறைந்துவிட்டது.** இந் நிகழ்ச்சி கி. பி. 1736இல் நடை பெற்றது.

## அரசியல் கண்ணோட்டம்

செஞ்சி, மதுரை, தஞ்சை நாயக்க மன்னர் விசய நகரப் பேரரசிலிருந்து வந்தவர் ஆதலால் விசயநகர ஆட்சி முறையையே பின்பற்றித் தம் நாடுகளை ஆண்டனர். ஆதலின் அவர்தம் ஆட்சியைப் பற்றி விரித்துக் கூற வேண்டுவதில்லை. நாயக்கர் ஆட்சி சமயப் பற்றோடு பொருந்தி இருந்தது. அவர்கள் தென்னாட்டுக் கோவில்களைப் பாதுகாத்தனர்; கோவில்களுக்குப் பல அறங்களைச் செய்தனர்; வேதியரை ஆதரித்தனர். அவர்களுக்குக் கடற்படை இல்லை. அதனால் கடற்கரைப் பகுதிகளைப் போர்த்துகீசியரிடமும் டச்சுக்காரரிடமும் ஒப்படைத்தனர். அவ்வயல் நாட்டினரது ஆட்சியில் நாயக்க மன்னர்கள் தலையிடவில்லை. அவ்வணிகர்கள் தம் ஆட்சிக்கு உட்பட்ட இந்துக்களுக்குப் பல கொடுமைகளைச் செய்தனர்.

திருமலை நாயக்கர் மதுரையில் செய்த சமயத் திருப்பணிகள் பலவாகும். மதுரையில் இன்று **சித்திரைத் திருவிழா** மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதனை முதலில் ஏற்படுத்தியவர் திருமலை நாயக்கரே யாவர். **நவராத்திரி விழாவும்** மிக்க சிறப்புடன் கொண்டாடப்பட்டது. தெப்பத் திருவிழாவும் சிறந்த முறையில் நடைபெற ஏற்பாடு செய்தவர் திருமலை நாயக்கரேயாவர். விஜயதசமியன்று படை வீரர்களும், மற்போர் வீரர்களும் வீர விளையாட்டுகளைச் செய்து காட்டினர். **தீபாவளி** அன்று புதுக்கணக்கு எழுதுவது விசயநகர வேந்தர் வழக்கமாகும். அவர்கள் அதனைப் புத்தாண்டு விழாவாகக் கொண்டாடினர். அவ் வழக்கமே நாயக்கர் ஆட்சியிலும் நிலைபெற்றது. அன்று முதல் இன்று வரையில் தமிழரும் தீபாவளியைக் கொண்டாடிவருகின்றனர்.

நாயக்க மன்னர் வேத பாடசாலைகளை ஏற்படுத்தினர்; அவற்றில் படிக்கும் பிராமண இளைஞர்க்கு உண்டியும் உறையுளும் உதவினர்; பாடம் கற்பித்த ஆசிரியர்க்கு வேண்டிய வசதிகளைச் செய்தனர். ஆயின் அவர்கள் தமிழ் மொழிக்கு அவ்வாறு உதவி செய்ததாகக் கூறுவதற்குச் சான்றில்லை. ஆயினும் அரசர் ஆதரவை எதிர்பாராமல் தமிழ்க் கல்வி வாழ்ந்தது; புலவர் பலர் வாழ்ந்தனர். அவருள் வரதுங்கராமபாண்டியன், அதிவீரராமபாண்டியன், திருக்குருகைப் பெருமாள் கவிராயர், குமரகுருபரர், சுப்பிரதீபக் கவிராயர், உமறுப்புலவர், தாயுமானவர், திரிகூடராசப்பக் கவிராயர் என்பவர் குறிப்பிடத் தக்கவர்.

நாயக்க மன்னர்கள் பக்திமான்கள்; அதனால் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலையும், இராமேசுவரம் கோவிலையும் வேறு சில கோவில்களையும் மிகப் பெரிய அளவில் விரிவாக்கினர்; மிக உயர்ந்த மண்டபங்களை அமைத்தனர்; ஆயிரக்கால் மண்டபங்களையும், புது மண்டபம் போன்ற சிற்ப வேலைப்பாடமைந்த பல மண்டபங்களையும் பல ஊர்களில் ஏற்படுத்தினர். **தாடிக்கொம்பு, பேரூர், தாரமங்கலம், கிருஷ்ணபுரம்,** தஞ்சாவூர், மதுரை முதலிய ஊர்க்கோவில்களில் உள்ள கண்ணைக் கவரும் சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலையின் உயர்வினை உணர்த்துவனவாகும்.

நாயக்கர் ஆட்சியில் தெலுங்கர் மிகப் பலராய்த் தமிழகத்தில் குடியேறினர். கன்னடரும் குடியேறினர். பாண்டியநாட்டில் உள்ள பல ஊர்களின் பெயர்கள் 'நாயக்கனூர்', 'நாயக்கன் பட்டி', 'சமுத்திரம்' என்று முடிகின்றன. இவை யாவும் நாயக்கர் காலத்தில் உண்டான புதிய ஊர்களாகும்.

தஞ்சாவூர் நாட்டையாண்ட மராத்தியரும் நாயக்கரைப் போலவே சமயப் பொறுமை வாய்ந்தவர். அவர்கள் தமது நாட்டில் பல கோவில்களைப் புதுப்பித்தனர்.

சரபோஜி மன்னர் கலையார்வம் மிக்கவர். அவர் பல ஊர்களில் இருந்த இலக்கியம், மருத்துவம், சோதிடம் முதலிய கலைகள் பற்றிய ஏட்டுச் சுவடிகளைத் திரட்டித் தம் அரண்மனையுள் வைத்தார்; இசைவாணரை நன்கு ஆதரித்தார்; மருத்துவரைப் போற்றினர். அவர் காலத்து வாழ்ந்த கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் அவர்மீது ஒரு குறவஞ்சி நாடகம் பாடினர். அது சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் என்பது.

மராத்தியர் ஆட்சிக் காலத்தில் மராத்தியர் சோழ நாட்டில் குடியேறினர்; தஞ்சாவூர் அரண்மனையைச் சுற்றியுள்ள நான்கு பெருந்தெருக்களிலும் பிற இடங்களிலும் வாழ்ந்தனர். மராத்தியர் அரச மரபில் வந்த உடன் பிறந்தார் இருவர் இன்றும் தஞ்சை அரண்மனையில் இருந்துவருகின்றனர்.

தலைக்கோட்டைப் போருக்குப் பின்பு நாயக்கராட்சி தமிழகத்தில் இல்லாதிருப்பின், சைவ, வைணவ சமயங்கள் இன்றுள்ள சிறப்புடன் இருந்திருத்தல் இயலாது. நாயக்க மன்னர் பல படையெடுப்புகளின் இடையிலும், உள்நாட்டுக் குழப்பங்களுக்கிடையிலும் நாட்டைக் காத்து, அதன் வாயிலாக இந்து சமயத்தையும் காத்தனர்; எல்லாச் சமயத்தினரிடமும் அன்புடன் நடந்து கொண்டனர். அதனால்தான் இன்றளவும் தமிழகத்தில் சமயப் பூசல்களுக்கு இடமில்லை. பல சமயத்தாரும் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகி அமைதியோடு வாழ்ந்துவருகின்றனர்.




[பக்கம் 147] ஊர்த்துவ நடனம்
(மதுரை மீனுட்சியம்மன் கோவில்)



[பக்கம் 147]

குறத்தி
(மதுரை ஆயிரக்கால் மண்டபம்)



[பக்கம் 148] தஞ்சாவூர் அரண்மனை

—*Copyright Archaeological Survey of India*




[பக்கம் 148] சரபோஜி மன்னர் சிலை

*—Copyright Archaeological Survey of India*

# 7. ஆங்கிலேயர் காலம்

(கி. பி. 1800—1947)

## நவாபுகளின் ஆட்சி

ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தில் அவரது பிரதிநிதியாக ஆர்க்காட்டில் இருந்துகொண்டு தமிழகத்தை நவாபு ஒருவர் ஆண்டுவந்தார். அவர் ஆர்க்காட்டு நவாபு என்று பெயர் பெற்ருர். தமிழகத்துச் சிற்றரசர் அனைவரும் அவருக்குக் கப்பம் கட்டிவந்தனர். செஞ்சியை ஆண்ட தேஜ்சிங் (தேசிங்கு மன்னன்) கப்பம் கட்டாமல் நவாபை எதிர்த்துப் போரில் மடிந்தான். நவாபுகளின் காலத்தில் **போர்த்துகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர்,** ஆங்கிலேயர் ஆகியோர் பழவேற்காடு, தூத்துக்குடி, புதுச்சேரி, பரங்கிப்பேட்டை, கூடலூர், சென்னை, சதுரங்கப்பட்டினம் முதலிய இடங்களில் தங்கி வாணிகம் செய்தனர். நாளடைவில் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் செல்வாக்குப் பெற்றனர்.

நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் போர்த்துகீசிய சொற்களும், பாரசீகச் சொற்களும், அரபுமொழிச் சொற்களும், இந்துஸ்தானி சொற்களும் தமிழில் கலந்தன.

(1) கிராம்பு, சன்னல், அலமாரி, சாவி, பாதிரி என்பன **போர்த்துகீசிய சொற்கள்.**

(2) ஜமீன், சிபாரிசு, சிப்பாய், சுமார், பந்தோபஸ்து, மேஜை, ரஸ்தா என்பன **பாரசீகச் சொற்கள்.**

(3) அநாமத்து, ஆசாமி, இலாகா, மாமூல், முன்சீப், வசூல் முதலியன **அரபு மொழிச் சொற்கள்.**

(4) அசல், அந்தஸ்து, அலுவா, அம்பாரி, ஆஜர், உஷார், ஜமுக்காளம், பஞ்சாயத், பங்களா, ருஜு, லட்டு முதலியன **இந்துஸ்தானி சொற்கள்.**

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமர குருபர அடிகள் **சலாம், சொக்காய்** போன்ற பிற மொழிச் சொற்களைத் தம் பாடல்களில் ஆண்டுள்ளார். நவாபுகளின் காலத்தில் தமிழர் சிலர் முஸ்லிம்கள் ஆயினர். அவருட் சிலர் தம் தாய் மொழியான தமிழைக் கற்றுப் புலமை பெற்றனர். அவருட் சிறந்தவரே **உமறுப் புலவர்**; எட்டையபுரத்து அரசவைப் புலவர்; கீழக்கரையில் பெருஞ் செல்வராய் விளங்கிய சையத்காதர் (சீதக் காதி) என்ற வள்ளலின் தூண்டுதலினால் நபி நாயகம் வரலாற்றைப் பெரிய காவியமாகப் பாடினார். அந்நூலில் அரபு மொழிச் சொற்கள் மிகப் பலவாய் இடம் பெற்றுள்ளன. அந்நூலின் பெயர் **சீறாப் புராணம்** என்பது.

நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட **முனிசீப், கச்சேரி** முதலிய ஆட்சிச் சொற்கள் தமிழில் வழக்குப் பெற்றன. அவை இன்றளவும் தமிழ்நாட்டு அரசியலிலும் வழங்கப்பட்டுவருகின்றன. நவாபுகளின் காலத்தில் பல மசூதிகள் தமிழ்நாட்டு ஊர்களில் கட்டப் பட்டன. அவை முஸ்லிம்களின் கட்டடக் கலை அறிவை உணர்த்துகின்றன. அவர்களால் யூனானி மருத்துவம் தமிழ்நாட்டில் பரவியது. அவர்களுடைய உணவு, உடை, பழக்க வழக்கங்கள் முதலியனவும் பரவியுள்ளன.

## ஆங்கிலேயர் ஆட்சி

மதுரை அரசு வீழ்ச்சியுற்றதும் பாளையக்காரர் தலைத் தூக்கினர். அவர்களை அடக்கமுடியாத ஆர்க்காட்டு நவாபு ஆங்கிலேயரின் உதவியை நாடினார். சிற்றரசர் சிலர் பிரெஞ்சுக்காரர் உதவியை நாடினர். இப்போராட்டங்களில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் பயன்படுத்தினர். டில்லி ஆட்சிக்குட் பட்ட தக்கண நாட்டுப் பிரதிநிதியின் ஆட்சிக்குட்பட்ட ஆர்க்காட்டு நவாபுக்குச் சில சமயங்களில் அப்பிரதிநிதியால் துன்பங்கள் நேர்ந்தன. தக்கணப் பிரதிநிதிப்

பதவிக்குப் போட்டி ஏற்பட்டபோதும், ஆர்க்காட்டு நவாபு பதவிக்குப் போட்டி ஏற்பட்டபோதும் ஆங்கிலே யரும் பிரெஞ்சுக்காரரும் இரு கட்சிகளாகப் பிரிந்து போரிட்டனர். இங்ஙனம் போர்கள் பல ஏற்பட்டன. இறுதியில் ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர்; தமக்கு உதவியாயிருந்த சிற்றரசர்களின் துணையைக் கொண்டு தமிழகத்தைக் கைப்பற்றி ஆளலாயினர். இராமநாத புரம், சிவகங்கை, புதுக்கோட்டை, எட்டையபுரம் முதலிய நாடுகளின் சிற்றரசர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் அமைதியாகத் தத்தம் நாடுகளை ஆளலாயினர்.

இந்தியா முழுமையிலும் ஆங்கில ஆட்சி ஏற்பட்டது. சிற்றரசர் குழப்பங்கள் அடங்கின. கொள்ளை, கொலை முதலிய கொடுஞ்செயல்கள் குறைந்தன. நாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாண மும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ் வொரு மாவட்டமும் பல தாலூகாக்களாகப் பகுக்கப் பட்டது. ஒவ்வொரு பெரிய கிராமத்திலும் பத்திரப்பதிவு இலாகாவும் ஊர்க்காவல் நிலையமும் ஏற்பட்டன. ஒவ் வொரு சிற்றூரிலும் மணியக்காரர், கணக்குப்பிள்ளை, வெட்டியான், தலையாரி என்னும் அரசாங்க அலுவலர் நியமிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு மாவட்டமும் ஆங்கி லேயர் ஒருவர் ஆட்சியில் விடப்பட்டது. ஒவ்வொரு மாகாணமும் ஆளுநர் தலைமையில் விடப்பட்டது. அவ ருக்கு உதவியாக ஆங்கில அதிகாரிகள் நியமிக்கப்பட் டனர். ஆங்கிலம் அரசாங்க மொழியாக ஆக்கப்பட்டது.

ஆங்கில ஆட்சி ஏற்பட்டதும் தமிழ் மக்கள் ஆங்கி லத்தை விரும்பிக் கற்கலாயினர். தமிழர் பேச்சிலும் ஆங்கிலச் சொற்களே மிகுதியாகப் பயின்றன. பென்சில், பேனு, கோட், கோர்ட், ஷர்ட் முதலிய சொற்கள் இன்று நீக்க முடியாத சொற்களாகிவிட்டன. மேல் நாட்டு மருந்துகளும் பிற பொருள்களும் வந்து குவிந்தன.

அவற்றுக்குரிய ஆங்கிலப் பெயர்கள் இந்நாட்டில் வழக்குப் பெற்றன.

ஆங்கிலேயர் கிறிஸ்தவர் ; புதுச்சேரி, காரைக்கால் ஆகிய இடங்களை ஆண்டுவந்த பிரெஞ்சுக்காரரும் கிறிஸ்தவராதலால் அவர்கள் ஆட்சியில் மேனாட்டுப் பாதிரிமார் தமிழகத்தில் வந்து தங்கிக் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினர். அப்பாதிரிமார் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் பள்ளிக்கூடம், மருத்துவமனை, கோவில் என்ற மூன்றை அமைத்துக்கொண்டு பொது மக்களுக்குத் தொண்டு புரியலாயினர். உயர்வகுப்பு இந்துக்களால் தாழ்த்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும் துன்புற்ற பலசாதி மக்கள் சாதியற்ற கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர் ; பாதிரிமார் அமைத்த பள்ளிகளில் படித்துக் கல்வியறிவு பெற்றனர் ; அரசாங்க அலுவல்களிலும் கல்வித் துறையிலும் இடம் பெற்றுத் தங்கள் வாழ்வை உயர்த்திக் கொண்டனர். உயர்வகுப்பார் சிலரும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். பாதிரிமார் தமிழை நன்கு கற்றனர் ; தமிழில் உரைநடை நூல்களையும், செய்யுள் நூல்களையும் எழுதினர் ; ஐரோப்பாவிலிருந்து அச்சுப் பொறியை இந்நாட்டுக்குக் கொண்டுவந்தனர் ; தமிழ் நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தினர் ; தமிழில் அகராதி நூல்களைத் தயாரித்து வெளிப்படுத்தினர். எளிய உரைநடையில் தமிழ் இலக்கண நூலை எழுதி வெளியிட்டனர்; செய்தித்தாள்களையும் வெளிப்படுத்தினர். நகரங்களில் உயர்நிலைப் பள்ளிகளை உண்டாக்கினர்; சில கலைக்கல்லூரிகளையும் அமைத்தனர். அரசாங்கத்தார் பொறிஇயல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, சட்டக் கல்லூரி ஆகியவற்றைத் தோற்றுவித்தனர். தமிழர் இவை அனைத்திலும் சேர்ந்து பல துறைகளிலும் தங்களறிவைப் பெருக்கலாயினர்.

ஆங்கில ஆட்சியில் புகைவண்டி, உந்துவண்டி (பஸ்), இன்னியங்கி (கார்) முதலிய பயணச் சாதனங்கள் ஏற்பட்

டன. தபால்தந்தி முறைகளும் ஏற்பட்டன. கப்பல்களின் போக்குவரவால் அயல்நாடுகளின் தொடர்பு ஏற்பட்டது. வானவூர்தி கண்டறியப்பட்ட பின்பு அயல் நாடுகளின் தொடர்பு நெருக்கமாகிவிட்டது. உலகச் செய்திகள் நாள் தோறும் வெளிவரும் செய்தித்தாள்களைப் படித்து உணரும் வாய்ப்பு ஏற்பட்டது. மேனாட்டாரது விஞ்ஞான ஆராய்ச்சியால் மின்சார வசதி முதலிய பல வசதிகள் ஏற்பட்டன. தமிழர் மருத்துவம் முதலிய பல துறைகளில் சிறந்த பயிற்சி பெறுவதற்காக இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் செல்லலா யினர்.

## உரிமைப் போராட்டம்

இந்திய ஆட்சியில் இந்தியருக்கு மிகுதியாக வேலை தரவேண்டும் என்ற கிளர்ச்சியை உண்டாக்க இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய **தேசியப் பேரியக்கம்** (Indian National congress) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதுவே இன்று **காங்கிரஸ் பேரவை** என்பது. முதலில் ஆங்கில உயர் அலுவலர் அவ்வியக்கத்தில் சேர்ந்திருந்தனர். இந்திய அறிஞர் பலரும் அதனில் உறுப்பினராயிருந்தனர். அவ்வியக்கத் தின் முயற்சியால் தகுதியுடைய இந்தியர் உயர் நீதிமன்ற நீதிபதிகளாகவும், பல துறை உயர் அலுவலராயும் அமர்த்தப்பட்டனர்.

காங்கிரஸ் பேரவை கி. பி. 1914இல் **காந்தியடிகளின்** செல்வாக்கைப் பெறலாயிற்று. காந்தியடிகள் அவ்வியக்கத் தலைவரானார். அவர் சிறந்த வழக்கறிஞர்; நிறைந்த ஒழுக்கம் உடையவர். அமைதியான முறையில் அறப்போர் செய்து நாடு உரிமை பெறவேண்டும் என்பது அவர் கருத்து. அவர் அக்கருத்தை நாடு முழுமையும் பிரசாரம் செய்தார்; மிக எளிய உணவுட னும் உடையுடனும் வாழ்க்கை நடத்தினார்; வன்செயல்

களை வெறுத்தார். அவருடைய எளிய தோற்றமும், எளிய வாழ்க்கையும் அறிவுரையும் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. அப்பெரியார் வெளிநாட்டுத் துணிக்கடை மறியல், உப்பு உரிமைப் போராட்டம், சட்ட மன்றம் நுழையாமை, வரி கொடா இயக்கம் முதலிய இயக்கங்களைத் தோற்றுவித்து ஒவ்வொன்றிலும் வெற்றி பெற்றார்; கி. பி. 1930இல் இங்கிலாந்தில் கூட்டப்பட்ட முதல் வட்டமேசை மகாநாட்டில் இந்தியா தன்னாட்சி பெறவேண்டிய தேவையை வற்புறுத்தினார்.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது, அப் போருக்குத் துணைசெய்யாத காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அதனால் காங்கிரஸ் இயக்கம் மேலும் வளர்ந்தது. 1947இல் தொழிற்கட்சி இங்கிலாந்தை ஆண்டுவந்தது. அது இந்தியாவை முஸ்லிம் இந்தியா (பாகிஸ்தான்) என்றும், இந்தியா என்றும் நமது நாட்டை இரண்டாகப் பிரித்தது; இரண்டிற்கும் ஆட்சி உரிமையை வழங்கியது. முஸ்லிம் கள் மிகப் பலராக வாழ்ந்துவரும் மேற்குப் பஞ்சாப், சிந்து, கிழக்கு வங்காளம் ஆகிய மூன்று மாகாணங் களும் முஸ்லிம்கள் ஆட்சியில் விடப்பட்டன. எஞ்சிய பெரும்பகுதி காங்கிரஸ் தலைவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. பாகிஸ்தான் வேண்டும் என வற்புறுத்தியவர் ஜனாப் முகம்மது அலீ ஜின்னாஹ் என்பவர். அவர் சிறந்த வழக்கறிஞர். காங்கிரஸ் தலைவருள் காந்தியடிகள், சர்தார் வல்லபாய் படேல், பண்டித ஜவஹர்லால் நேரு, இராசேந்திர பிரசாத், இராசகோபாலாசாரியார், அபுல் கலாம் ஆசாத் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர். இவருள் ஜவஹர்லால் நேருவே 1947 முதல் இன்றளவும் இந்தியா வின் முதலமைச்சராய் இருந்துவருகிறார்.

# 8. நமது ஆட்சிக்காலம்

## ஆக்க வேலைகள்

நமது நாடு பதினேழு ஆண்டுகளாக உரிமை பெற்று விளங்குகிறது. நாட்டின் ஒவ்வொரு மாகாணத்தையும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரே ஆண்டுவருகின்றனர். நாட்டு ஒற்றுமையைக் குலைத்து வந்த சாதி வேறுபாடு, தீண்டாமை முதலியன அரசாங்க முயற்சியாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் குறைந்து வருகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படுகின்றன; பயிரிட நிலங்கள் தரப்படுகின்றன; கல்வி வசதி அளிக்கப்படுகிறது; அரசாங்க அலுவல்களிலும் சலுகை காட்டப்படுகிறது. இவ்வாறே பிற்பட்ட வகுப்பினர்க்கும் சலுகைகள் தரப்பட்டுள்ளன.

பாதை இல்லாத ஊர்களுக்குப் பாதை போடப்படுகிறது. மின்சார வசதி இல்லாத ஊர்களுக்கு மின்சார வசதி அளிக்கப்படுகிறது. கிராம முன்னேற்றத் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. பல கிராமங்களில் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஏரிகளும் குளங்களும் ஆழமாக்கப்படுகின்றன. புதிய கால்வாய்கள் வெட்டப்படுகின்றன. நீர்த்தேக்கங்கள் பெரும் பொருட் செலவில் அமைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் சாத்தனூர் நீர்த்தேக்கமும், வையையாற்று நீர்த்தேக்கமும், மணிமுத்தாறு நீர்த்தேக்கமும் குறிப்பிடத்தக்கவை. மேலும் சில நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

கூட்டுறவுப் பால்பண்ணைகள், கூட்டுறவு இயக்கக் கிளைகள் முதலியன ஏற்பட்டுவருகின்றன. இப்பொழுது ஒவ்வொரு சிற்றூரிலும் பள்ளிக்கூடம் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பல உயர்நிலைப் பள்ளிகள் பெருகியுள்ளன. நமது தமிழ் நாட்டில் ஏறத்தாழ எழுபது கல்லூரிகள் இருந்து பல துறைக் கல்வியைக் கற்பிக் கின்றன. தொழில் நுணுக்கக் கல்லூரிகளும் ஏற்பட்டு வருகின்றன. கைத்தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் பொருளுதவி செய்கிறது. அரசாங்கம் சிறிய கைத் தொழில்களில் ஈடுபட்டவர்க்குப் பயிற்சியும் பணவுதவி யும் அளிக்கின்றது. பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்க்கு நடு அரசாங்கம் உதவிச் சம்பளம் தருகின்றது; தக்க மாணவரை மேனுடுகளுக்கு அனுப்பி ஒவ்வொரு துறையிலும் பயிற்சிபெறச் செய்கிறது. இப் பொழுது இந்திய மாணவர் ஜப்பானிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க நாடுகளிலும் மருத்துவம் முதலிய பல துறைகளிலும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

நமது நாட்டு முதலமைச்சரான நேரு பெருமான் உரிமைப்போரில் தமது வாழ்நாளைக் கழித்தவர்; நாட்டுப் பற்று மிக்குடையவர்; நாடு பல துறைகளிலும் மேனுடு களைப் போல முன்னேறவேண்டும் என்னும் கவலையை உடையவர். அவர் பல நாடுகளுக்கும் சென்று, இந்தியா வின் அரசியல் கொள்கைகளை விளக்கிப் பேசிவருகின்றூர். அவரது நடுவுநிலைக் கொள்கையே, பிறநாடுகள் இந்தியா வைப் பெரிதும் மதிப்பதற்கு உறுதுணையாக இருக் கின்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ரஷ்யா, ஜப்பான் முதலிய நாடுகள் இந்தியாவுக்குப் பல வழிகளி லும் உதவி புரிந்துவருகின்றன. நாட்டுப் பற்றும் அர சியல் அறிவும் மிகுந்த நேரு பெருமான் போன்ற தலைவர் களால் நமது நாடு எதிர்காலத்திலும் முன்னேற்றம் அடையும்.

பாகிஸ்தான் பிரிவதற்கு முன்பும் பிரிந்த பின்பும் அம்மாகாணங்களில் நடைபெற்ற இந்து - முஸ்லிம் கலகங் கள் கொடியவை. அறிவும் ஆராய்ச்சியும் மிகுந்துவரும் இக்காலத்தில் இத்தகைய சமய வெறுப்புக் குழப்பங்கள்

வெறுக்கத்தக்கவை. இவற்ருல் உயிர் இழந்தோர் பலர்; உற்ருர் உறவினரை இழந்தோர் பலர்; தம் உடைமைகளை இழந்தோர் பலர். மனிதனது வாழ்வைச் செப்பனிடும் பாதையே சமயம் என்பது. அதனுல் எல்லாச் சமயங்களும் மதிக்கத்தக்கவையே. ஒன்று உயர்ந்தது, மற்ருென்று தாழ்ந்தது என்று எண்ணுதலும் பேசுதலும் தவறு; ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளுதலும் தவறு. இவ்வுயர்ந்த கருத்துத் தமிழகத்தில் இன்றும் இருந்து வருகிறது. அதனுல் தமிழகத்தில் சமயப் பூசல்கள் இல்லை. இந்துக்களும் - முஸ்லிம்களும் - கிறிஸ்தவரும் - பிற சமயத்தினரும் மன ஒற்றுமையுடன் வாழ்ந்துவருகின்றனர். **வாழ்க இவ்வொற்றுமை!**

## தமிழர் பண்பாடு

சங்ககாலத் தமிழர் திரைகடலோடி வாணிகம் செய்து பொருள் ஈட்டியவர்; அதனுல் "**யாதும் ஊரே, யாவரும் கேளிர்**" என்ற பரந்த நோக்கம் கொண்டவர். அவரும் அவர் வழிவந்தவரும், தமிழகத்தில் வாழவந்த புதியவரை மகிழ்ச்சியோடு சிறப்பித்து வாழ்வளித்தனர்; அவ்வாறே இன்றும் வாழ்வளிக்கின்றனர். தமிழர் கடவுள் பற்று மிக்கவர்; குறள்நெறி வாழ்பவர்; அடக்கமுடையவர்.; எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பவர்; அகதிகளையும் வரவேற்பவர். பிறமொழி பேசும் கலைஞர்களைக் கலைக்காகவே ஆதரித்து வாழ்வளிப்பவர். பிறர் மொழிவேறுபாடு காட்டும் இக்காலத்திலும் தமிழர் தெலுங்கு என்ருே, கன்னடம் என்ருே வேறுபாடு காட்டுவதில்லை. '**பிறர் வாழ, நாமும் வாழ்வோம்' என்பதே தமிழர் கொள்கை.** இதுவே தமிழர் பண்பாடு. இப் பண்பாடு சங்க கால முதல் - ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் வாழ்வில் இயங்கிவருவதாகும். **இப்பண்பாடு வாழ்க!**

# இந்நூல் எழுதத் துணை செய்தவை

1. P. T. S. Ayyangar —*Stone Age in India*
2. ,, —*History of the Tamils*
3. K. A. N. Sastry —*Cholas*
4. ,, —*Pandyan Kingdom*
5. ,, —*Foreign Notices of South India*
6. ,, —*History of South India*
7. R. Satyanatha Ayyar —*History of India*
8. ,, —*Nayaks of Madura*
9. Vriddhagirisan —*Nayaks of Tanjore*
10. C. S. Srinivasachariar —*Gingi and its Rulers*
11. K.A.N. Sastry and Dr. N. V. Ramanayya —*Further Sources of Vijayanagar Histoy Vol. I*
12. T.V.S. பண்டாரத்தார்—சோழர் சரித்திரம்
13. ,, —பாண்டியர் வரலாறு
14. அ. கி. பரந்தாமனார் —மதுரை நாயக்க மன்னர்
15. டாக்டர் மா. இராச மாணிக்கனார்—தமிழக வரலாறு
16. ,, —தமிழக ஆட்சி
17. ,, —தமிழகக் கலைகள்
18. ,, —தமிழர் நாகரிகமும் பண்பாடும்

# படவிளக்கம்

## ஒற்றைக் கற்கோவில்கள்

பல்லவர் ஒரு கல்லைக் குடைந்து கோவிலாக்கி வெற்றி கண்டனர். இத்தகைய ஒற்றைக் கற்கோவில்கள் ஐந்து மாமல்லபுரத்தில் உள்ளன. அவை ஒரே வரிசையில் இருப்பதைக் கண்ட மக்கள், அவற்றைப் ‘பஞ்சபாண்டவர் தேர்கள்’ என்று குறித்தனர். ஆயின், அவை கோவில்களேயாகும். அவை தருமராசன் தேர், பீமசேனன் தேர், அர்ச்சுனன் தேர், சகாதேவன் தேர், திரௌபதி தேர் என்று இன்று கூறப்படுகின்றன. அவற்றின் வேலைப்பாடு வியக்கத்தக்கது. ஒவ்வொன்றிலும் உள்ள சிற்பங்கள் சிறந்த வேலைப்பாடு கொண்டவை.

## இராசராசேசுவரம்

இது தஞ்சைப் பெரிய கோவில் என்று இன்று சொல்லப்படுகின்றது. இக்கோவில் கி. பி. 1003இல் தொடங்கி 1009இல் கட்டி முடிக்கப்பெற்றது. இக்கோவிலில் இரண்டு வாயில்கள் உள்ளன. அவற்றைக் கடந்து உள்ளே செல்லின், செங்கற்கள் பரப்பப்பெற்ற பெருவெளி காணப்படும். அதன் நீளம் ஏறத்தாழ 800 அடி; அகலம் 400 அடி. அவ்வெளியில் சிவன் கோவில் அமைந்துள்ளது. அதற்கு ஏழு வாயில்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு வாயிலிலும் 18 அடி உயரமும் 8 அடி அகலமும் உள்ள இவ்விரண்டு வாயிற்காவலர் வீதம் 14 வாயிற் காவலர் உருவச் சிற்பங்கள் அமைந்துள்ளன. கோவிலில் உள்ள லிங்கம் 13 அடி உயரம் உள்ளது; 33 அடி சுற்றளவுடைய பீடத்தை உடையது. அர்ச்சகர் ஏணிமீது நின்றே அதனை நாளும் நீராட்டுவர். அக்கருவறையின்மீது 216 அடி உயரமுள்ள விமானம் அமைந்துள்ளது. அதன்மீது பெரிய கலசம் வைக்கப்பட்டுள்ளது. கருவறையின் புறச்சுவர்களில் சோழர்கால ஓவியங்கள் உள்ளன. அவற்றின்மீது சாந்து பூசப்பெற்று, அச்சாந்தின்மீது நாயக்கர்கால ஓவியங்கள் வரையப்பட்டன. இவ்விருவகை ஓவியங்களும் இன்று பாதுகாக்கப்படுகின்றன.

### சண்டேசப் பதம்

விசாரசருமர் என்பவர் ஓர் அந்தணச் சிறுவர். அவர் மணலால் சிவலிங்கத்தைச் செய்து வழிபட்டார். அவ்வழி பாட்டிற்கு அவர் மேய்த்துவந்த பசுக்கள் பாலை வழங்கின. இதனைக்கண்டு சினந்த அவர் தந்தை அச்சிவலிங்கத்தை எட்டி உதைத்தான். சிறுவர் மனம் கொதித்துத் தந்தையின் கால்மீது ஒரு கோலை எடுத்து வீசினார். அது மழுவாக மாறித் தந்தையின் கால்களை வெட்டியது. அவரது சிவபக்தியின் சிறப்பைப் பாராட்டிச் சிவபெருமான் உமாதேவியுடன் காட்சி கொடுத்தார்; "நம் திருக்கோவில்களின் பொறுப்பைக் கவனிக்கும் சண்டேசப் பதத்தை உனக்கு வழங்கினோம்," என்று கூறி, அவர் முடியில் மலர்மாலையைச் சூட்டி ஆசி வழங்கினார். அதை உணர்த்துவதே சண்டேச அநுக்கிரக மூர்த்தியின் சிற்பம்.

### நாயக்கர் காலச் சிற்பங்கள்

சிவன் காளியுடன் நடனப் போட்டியில் இறங்கினார். காளி வெற்றி பெறுவாள் என்று நினைத்ததும் சிவன் ஒரு காலை உயர்த்திக்கொண்டு நடனம் ஆடினார். அந்த நடனமே ஊர்த்துவ நடனம் என்பது. இந்நடனச் சிற்பமும் குறத்தியின் வேலைப்பாடமைந்த சிற்பமும் மதுரையிலுள்ள சிற்பங்களில் குறிப்பிடத்தக்கவை.

### அரண்மனைகள்

தென்னாட்டு அரண்மனைகள் காலப்போக்கில் அழிந்து விட்டன. எஞ்சி இருப்பவை இரண்டே. அவற்றுள் ஒன்று திருமலை நாயக்கர் மகால்; மற்றொன்று தஞ்சை மராத்தியர் அரண்மனை. மராத்தியர் அரண்மனை ஏழு அடுக்குகளை உடையது; பல கட்டடங்களையும் சிற்பங்களையும் ஓவியங்களையும் உடையது. இவையிரண்டும் நேரில் கண்டு மகிழத் தக்கவை. சலவைக்கல்லால் ஆகிய சரபோஜி மன்னர் சிலையும் கண்டு களிக்கத்தகும்.

ஆர். கே. நாயு
மா. ரா. அரசு
சென்னை-600001